கலைப்பொன்னி

சினிமா மலர்

நவம்பர் - 1962

50 காசு

பெரியஇடத்து விஷயம்

நடிகை வசுந்தராவின் வைரபவனம் சோகத்தில் மூழ்கியிருந்தது. நடிகையின் வீட்டு ஏர்கண்டிஷன் அறைக்குள்ளிருந்து வெளியே வந்த மூன்று டாக்டர்களின் முகமும் கருத்திருந்தது. மூன்று நாட்களாகப் பாடுபட்டும் உயிரைக் கடைசி வரையில் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது என்று சொல்லிய டாக்டர்கள் மூவரும் கவலையோடு சோபாவில் சாய்ந்தனர்.

வசுந்தராவும் அவள் தாயும் ஒருவரோடு ஒருவர் அலங்கோலத்துடன் கட்டிப் புரண்டு அழுதனர். வேலைக்காரனும் வேலைக்காரியும் சுவற்றில் முட்டி முட்டிப் புலம்ப ஆரம்பித்தனர்.

நடிகையின் கணவன் எல்லா இடங்களுக்கும் மள மளவென்று போன் மூலம் செய்தியை சொல்லிக்கொண்டிருந்தார். சில நிமிடங்களில் வைரபவனத்தில் அழுகையும் கூப்பாடும் குடிகொண்டு ஆடியது.

பிரமுகர்கள் காரில் வருவதும் போவதுமாக இருந்தனர். படத்தயாரிப்பாளர்கள் பிளாட்பாரத்தில் மனைவியைப் பறிகொடுத்தவர்களைப் போல் சூம்பிய முகத்துடன் உட்கார்ந்திருந்தார்கள். டைரக்டர்கள் கன்னத்தில் கை வைத்தபடி ஒரு மூலையில் சாய்ந்து கிடந்தார்கள். காமிராமேன்கள் மாடியிலிருந்து கூட்டத்தைப் பல கோணங்களில் படம் பிடித்துக் கொண்டிருந்தார்கள். பிணத்தின் மீது போடப்பட்ட மாலைக் குவியல்களை இரண்டு லாரிகள் மயானத்துக்குக் கொண்டு சென்றன.

சென்னையில் உள்ள ஸ்டுடியோக்களெல்லாம் மூடப்பட்டன. வடக்கே இருந்து நடிகர்களிடமிருந்து வந்து கொண்டிருந்த அனுதாபத் தந்திகளை பிரபல வசனகர்த்தா மைக்கில் வாசித்துக்கொண்டிருந்தார்.

மாலை 5-மணிக்கு வைர பவனத்திலிருந்து சவ ஊர்வலம் புறப்பட்டது. ஐயாயிரத்துக்கு மேற்பட்ட படத்தொழிலில்சம்பந்தப்பட்டவர்கள் முன் செல்ல நடிகை வசுந்தரா தன் கணவனை விடப் பிரியமாக வளர்த்து வந்த 'அல்சேஷன்' நாயின் சடலத்தை ஒருபுறம் நடிகையின் கணவனும் மற்றொரு புறம் ஒரு படத்தயாரிப்பாளரும் தூக்கிச் சென்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது!



இல்லற வாழ்க்கையில்!

சின்னஞ் சிறுவில்லாய் — வளைந்த
சோமாஸி மெல்நுதற்கே,
மின்னும் திலகமிட — ஜிகினு
மேவுங் குங்குமமும்,

கன்னப் பூரிநகைக்க — வண்ணம்
காட்டு முகத்துளும்,
வண்ணக் கொழுக்கட்டை — நாசி
வாழ்த்தப் பேஸரியும்,

ஜாங்கிரிக் கொண்டைதனை — முடிக்க
ஜாஸ்மின் தைலங்களும்,
ஏங்கிடும் குலாப்ஜான் — விழியினுக்
கேற்ற கருமசியும்,

பாங்கியுன் பஜ்ஜிசெவி — ஜொலிக்க
பாஷன் காதணியும்,
வாங்கியே வந்திடுவார் — அடிசகி
வாட்டம் தவிர்த்திடடி.

வேறு

கண்கள் கலங்கற்கோர் காரணமிலை — உந்தன்
காந்தன் வராதிருக்க நீதமுமிலை
எண்ணற் கினியவளே பாஸந்தியே — உள்ள
ஏக்க மனத்தினையும் ஓட்டிவிடடி

திண்ணம் அவர்எக்ஸ் பிரஸ்ஏறியே — இன்பம்
தோயும் கொஞ்சலோர் டிரங்ஏற்றியே
வண்ண ஷிபானுடுக்கும் வஞ்சியுன்னிடம் — இன்று
வந்தே விடுவாரதில் ஐயமிலையே.

இன்பவண்ணன்.

ஆசிரியர்
எஸ். கிருஷ்ணசாமி

இலங்கையில் செய்தித்தாளாக
பதிவு பெற்றது

கலைவாணி

நவம்பர் 1962

மலர் 3 இதழ் 7

இந்த இதழில்!

சண்முகவேல்
அம்பாஸிடர்
புவனு
இன்பவண்ணன்
கோ. ந. கிருஷ்ணன்
கீழையூர் வாசன்
ஸ்ரீராயன்
ராஜம்
இரா. தியாகராசன்
சரோஜா
காசிநாதன்
சந்திரமோகன்
திருஞானம்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்!
மற்றும் சினிமாச் செய்திகள்.

கதை, கட்டுரை, கவிதைகளில் காணப்படும் பெயர்கள் எல்லாம் கற்பனையே!


வானவில் புரொடக்ஷன்ஸ்
ஏய்யா வசனகர்த்தா! இந்தப் பெண்களெல்லாம் எதுக்கு வந்திருக்காங்க?
என் கதையை ஒங்களிடம், சிபாரிசு பண்ணுவதற்குத்தாங்க கூட்டி வந்திருக்கேன்.
எப்படி வாழ்வேன்
-புத்தன்-

சேகர் பீடா ஸ்டால்
நியூஸ் ஏஜண்ட்
இ. வீரபத்திரன்
பஸ் ஸ்டாண்டு, நாமக்கல்

தேசிய ஒருமைப்பாடு

படிப்பது ராமாயணம். இடிப்பது பெருமாள் கோவில் என்று சொல்லுவார்கள். இந்தக் கதைபோல்தான் இன்று தேசிய ஒருமைப்பாடு பேசுபவர்களின் போக்கும் செயலும் இருந்து வருகின்றன. ஒருமைப்பாடு கூச்சல் போடுபவர்களில் அநேகமாக எல்லோரும் மதவெறி பிடித்தவர்களாகவும் ஜாதிப்பித்துக் கொண்டவர்களாகவும் மாகாணப்பித்துப் பிடித்தவர்களாகவும் தான் இருக்கிறார்கள். ஜாதி, மத, ஆச்சார, கலாச்சார வேறுபாடுகள் மலிந்து கிடக்கும் இப்பெரிய நிலப்பரப்பில் அந்த முரண்பாடுகளைப் பற்றியெல்லாம் சிந்தனை செய்யாமல் தேசிய ஒருமைப்பாடு ஏற்பட்டு விடுமென்று எண்ணுவது அறிவுடைமையாகுமா? நடு நிலை நின்று நாட்டின் பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் ஆராய்ந்து பார்க்கின்ற நிலையிலே கலைப்பொன்னியின் எண்ணத்திரையிலே தோன்றுவது என்ன?

இந்தியா ஒரே நாடா? இல்லை. ஆங்கிலேயர் கைக்கு ஆட்சி மாறியவுடன் நிர்வாக வசதிக்காக ஏற்படுத்தப் பட்டது தான்.

இந்திய மக்கள் எல்லோரும் ஒரே மொழி பேசுபவர்களா? இல்லை. அரசியல் சட்டப்படியே பதினான்கு மொழிகள் இந்தியாவின் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் எல்லோரும் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களா? இல்லை. இந்து மதத்தைத் தழுவியவர்கள் பெரும்பான்மையானவர்கள். இந்துமதம் தவிர இந்தியாவில் ஏறத்தாழ எழுநூறுக்கும் மேற்பட்ட மதக் கொள்கையுடையவர்கள் வசிக்கிறார்கள் என்று சர்க்கார் புள்ளி விபரமே கூறுகிறது. அதிலும் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் எல்லோரும் ஒரே மரபு வழியினைச் சார்ந்தவர்களா என்றால் அதற்கும் 'இல்லை' என்பதுதான் முடிவு. டெல்லிப் பாராளுமன்றத்திலே வீற்றிருக்கும் கனங்களில் பெரும்பான்மையானவர்கள் இந்துக்கள் தான். ஆனால் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நெஹ்ரு! நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய்! உள்துறை அமைச்சர் லால்பஹதூர் சாஸ்திரி! கனரகத்தொழில் அமைச்சர் சுப்ரமண்யம்! இவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுவதைத் தவிர இவர்களுக்குள் எந்த வகையில் ஒற்

றுமை இருக்கிறது? உடையிலா, மொழியிலா, உணவு முறைகளிலா எதைப் பார்த்தாலும் ஒருவருக்கொருவர் எத்தனை வேற்றுமை! ஒன்றுக்கொன்று பொருந்தக்கூடாத எண்ணற்ற முரண்பாடுகள்! ஆக மத அடிப்படையிலே ஒருமைப்பாட்டை வளர்க்க முடியும் என்று சொல்வது பகல் கனவாகும்.

தத்துவ அடிப்படையிலே, 'ஒற்றுமையிலாக்குடி ஒரு மிகக் கெடும். ஆகவே இந்தியா ஒரே நாடாகவேண்டும். பாகிஸ்தான் சீனுவின் ஆக்ரமிப்புகளைத் தகர்த்தெறிய பலம் பொருந்திய வல்லரசாகத் திகழவேண்டும்' என்ற உயர்ந்த நோக்கத்திற்காக ஒருமைப்பாடு வேண்டுமென்று கருதுகிறார்களென்றால் மொழிவாரி மாகாணப் பிரிவினையும், மத வேறுபாடுகளும், சாதிப் பாகுபாடுகளும் சாகாவரம்பெற்று நிலையாக நிலைத்து நிற்கும் நிலை ஏற்பட்டு விட்டபிறகு இது எவ்வாறு சாத்தியமாக முடியும்?

மொழி வழி மாநிலங்கள் பிரிக்கப் பட்டிருப்பதால், 'நான் குஜராத்தி, மராத்தி, வங்காளி, மலையாளி' என்பன போன்ற பிரிவுகளும், 'நான் இந்து, கிறிஸ்தவன், முஸ்லீம்' என்ற மத வெறிகொண்டலைபவர்களும் தானே நம் நாட்டில் மலிந்து கிடக்கிறார்கள். எல்லைத் தாவாவும் தண்ணீர் தகராறும் தீராத பிரச்னைகளாக இருந்து வருகின்றன.

மதங்கள் மல்கிக் கிடப்பதால் மதவெறியைத் தணிக்க முடியவில்லையே. ஒரு காந்தியார் பலியான பிறகும், எண்ணற்ற நவகாளிகளும் லாகூர்களும் இன்னும் நடைபெற்றுக் கொண்டு தானிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவில் ஜாதியை அடியோடு ஒழித்துவிட்டு, புரட்சிகரமாக ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க எந்தத் தலைவருக்காவது துணிவு இருக்கிறதா? ஜாதியின் அடிப்படையிலே சகல கட்சிகளும் கட்சித் தலைவர்களும் தங்கள் செல்வாக்கை வளர்த்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, கனவிலும் இந்தச் சாதியைக் குழிதோண்டிப் புதைக்க எவரும் விரும்புவதாகத் தெரியவில்லை.

மதம், மொழி, சாதி என்னும் இம் மூன்று பிற்போக்கு சக்திகளையும் முறியடித்து இந்திய மக்களனைவரும் ஒரு மொழிபேசி, ஒரே மதத்தினைச் சார்ந்து, ஒரே சாதியாக வாழும் நிலை ஏற்பட்டாலன்றி இந்தியாவில் ஒரு நாளும் தேசிய ஒருமைப்பாடு ஏற்படவே முடியாது. இந்திய சர்க்கார் உண்மையிலேயே ஒருமைப்பாடு வேண்டுமென்று விரும்பினால்:–

1. ஜாதி மத பேதமற்ற ஒரு புதிய சமுதாயம் தோன்றுவதற்கு மனப்பூர்வமாக ஒத்துழைப்பு நல்கவேண்டும். கலப்புமணம் செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை பெருகினால் மதமும் சாதியும் தானுக் மடிந்துவிடும். ஆனால் தற்சமயம் அவர்களுக்கு நம் சமுதாயத்திலே எள்ளளவும் ஆதரவோ பாதுகாப்போ கிடையாது. சர்க்கார் அப்பேர்ப்பட்டவர்களுக்குபடிப்பு வைத்திய உதவி, உத்தியோகம் பதவி உயர்வு முதலியவற்றில் தனிச்சலுகை வழங்கினால் நாளடைவில் எல்லோரும் இந்த முறையைத்தான் தைரியமாகப் பின்பற்ற முனைவார்கள். சலுகைகள் கிடைக்கின்றன என்றால் சாதிவேண்டாம், மதம் வேண்டாம் என்று யாருமே சொல்லத் தயங்க மாட்டார்கள்.

2. இந்தியாவிலே தேசிய மொழிகளாக விளங்கும் பதினான்கு மொழிகளிலே ஏதாவதொன்றை தேசிய மொழியாகத் தேர்ந்தெடுத்தால், அவரவர் மொழியே உயர்ந்தது என்றும் அதுவே பொதுமொழியாகத் தகுதியானதென்றும் சச்சரவு ஏற்பட ஏதுவாகும். எனவே உலகப் பொது மொழியாகத் திகழும் ஆங்கிலத்தையே இந்தியாவின் தேசிய பாஷையாக ஒப்புக்கொள்ள வேண்டும். இதனால் ஒருமொழி பேசுபவர்கள் மற்ற மொழிக்காரர்களிடம் குரோதத்தை வளர்த்துக் கொள்ளவும், மொழிவெறி தோன்றவும் இடமேற்படாது.

3. இந்திய ஒருமைப்பாடு நிலைத்திருக்க வேண்டுமானால் இந்தியாவிற்கே ஒரே ஒரு சட்டசபைதான் இருக்க வேண்டும். மாகாணச் சட்டசபைகளையெல்லாம் கலைத்துவிட்டு, டெல்லிப் பாராளுமன்றத்தின் பிரதிநிதியாக மாகாணத்திற்கு கவர்னர் அந்தஸ்தில் ஒரே ஒருவரை மட்டுமே நியமிக்க வேண்டும்.

இந்தியா முழுமைக்கும் ஒரே விதமான சட்டம், ஒரேவிதமான வரிவிதிப்பு, இந்தியா பூராவும் எல்லோருக்கும் ஒரே விதமான உரிமை, சலுகை என்ற சூழ்நிலை உருவாகும்போது நிச்சயமாக தேசிய ஒருமைப்பாடு தானாக வளரும்.

இம்மூன்று இன்றியமையாத திட்டங்களையும் நடைமுறைக்குக் கொண்டுவர அரசியல் சட்டத்திலே இடமில்லையானாலும், ஒருமைப்பாடு பேசுகின்ற தலைவர்கள் மனப்பூர்வமாக ஒன்று சேர்ந்து அரசியல் சட்டத்தையே திருத்தி இந்த திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவார்களேயானால், நாட்டிலே பிரிவினை பேசுகின்ற கட்சிகளும் அவற்றிற்கு எதிராகச் சுதந்திரம் காக்கும் கட்சிகளும் தோன்றவேண்டிய அவசியமோ, அல்லது பிரிவினைக் கட்சிகளைத் தடைசெய்ய வேண்டிய சந்தர்ப்பமோ ஏற்படாது.

இந்தியப் பிரதமர் நேரு தனக்குள்ள செல்வாக்கைக் கொண்டு அவர் காலத்திலேயே இதனைச் செய்வாரேயானால், இந்தியா ஒரே தேசமாகத் திகழும். அவ்வாறின்றி ஜாதி, மத, மொழி, மாகாண வெறியர்களுக்கு அடிபணிந்து விட்டாரேயானால் நாடு பிரிவினையால் சிதறுண்டு போவதைத் தடுக்க யாராலும் முடியாது தேசீய ஒருமைப்பாடு பகற்கனவாகவே முடியும்.

உங்களுக்குத் தேவையான எல்லாவித சைக்கிள் "ஸ்பேர் பார்ட்ஸ்" சாமான்கள் மொத்தமாகவும் சில்லரையாகவும் மலிவான விலைக்கு கிடைக்கும்

ஒரே ஸ்தாபனம்

ஸ்ரீ முருகன் சைக்கிள் ஸ்டோர்

உரிமையாளர்: N. மணிப்பிள்ளை

மேற்கு ரத வீதி, திண்டுக்கல்.

குறிப்பு: தீபாவளியை விமரிசையாகக்கொண்டாட மத்தாப்புகள், வெடிகள் அனைத்தும் மலிவான விலைக்கே எங்களிடம் கிடைக்கும்.

வெறும் கலாட்டா

இடம்: சங்கக் கட்டிடம்.

உறுப்பினர்: ஆடியபாதம், சோமு, சோணாசலம், மயில்வாகனன்.

சோணாசலம்: நண்பர்களே! சங்கத் தோழர்களே! வணக்கம் நமது சங்கத்தின் ஸ்தாபகரும் தலைவருமான டி. பி. ஆடியபாதத்துக்கு இன்று 53-வது பிறந்த நாள் விழா கொண்டாடப் படுகிறது. விழாவிற்குத் தலைமை வகித்துப் பரிசளிக்கும்படி "கசப்பு" பத்திரிகை ஆசிரியர் மயில்வாகனன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சோமு: அதனை நான் ஆமோதிக்கிறேன்!

மயில்: அன்புக்குரிய பொதுமக்களே!

இளைஞர்கள் மத்தியிலே ஏராளமான அளவில் ஆதரவைப் பெற்று வரும் நாம் – காதலர் சங்கத்தின் தலைவருக்கு இன்று 53-வது பிறந்தநாள் விழா கொண்டாடப் படுகிறது! (திரும்பி) சோடா...!

சோமு: தண்ணியிலே விஷம் கலந்திருக்கு! பேச்சை முடிச்சிட்டு வாங்க காப்பி சாப்பிடலாம்.

மயில்: பரவாயில்லே! ...ம்... நண்பர்களே! ஆடியபாதத்தைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்குமென்று நம்புகிறேன். எனக்கு அவ்வளவாகத் தெரியாது!

மக்கள்: உனக்கே தெரியாத ஆளைப் பாராட்டாதே!

(கூச்சல் போடுதல்)

மயில்: ஆ... ஆ...மன்னிக்கணும் அதாவது அவரை உங்களுக்குத் தெரியுமாங்குறது - எனக்குத் தெரியாது! இருக்கட்டும்! இன்று நடைபெறும் அவரது பிறந்தநாள் விழாவிற்கு என்னைத் தலைமை வகித்துப் பரிசளிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். அடுத்தபடியாக பரிசளிப்பு ஆரம்பமாகிறது... பரிசு கொடுப்பவர்கள் மேடைக்கு வாருங்கள்!... (கையிலே ஒரு பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஒருவன் வருகிறான்.)

வந்தவன்: நண்பர்களே! தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு "போரடிப்போர்" சங்கத்தின் சார்பாக இந்த ஷேவிங் செட்டை அன்பளிப்பாகத் தருகிறேன்

மயில்: என்னது "ஷேவிங்" செட்டா?

வந்த: ஆமாம் புதர்போல அடர்ந்து வளர்ந்திருக்கும் தலைவரின் தாடி அசிங்கமாக

இருக்கிறதல்லவா? அதற்காக மட்டுமல்லாமல் — சங்கத்தின் லட்சியப் போராட்டம் நடக்கும் போது இந்த 'ஷேவிங்' கத்தியை எடுத்துக்கொண்டு புறப் பட்டால் மிகவும் எடுப்பாக இருக்குமே!

ஆடிய: ...ம்...மயில்வாகனன் சீக்கிரமா அதை வாங்கிட்டு - ஆளைக் கீழே இறங்கச் சொல்லுங்க - அம்மையார் காத்துக் கிட்டிருக்காங்க!

மயில்: ம்...சரி.. (பரிசை வாங்கி) இதனை தலைவர் ஆடியபாதத்துக்கு அளிக்கிறேன்.

ஆடிய: நன்றி! நன்றி! ..ம் . அப்புறம் வேறே யாராவது! (பெண் வருதல் - மேடை பக்கத்தில் கூடியிருக்கும் ஆட்களைப் பார்த்து)

ஆடிய: வாங்க! வாங்க! இந்தாப்பா கொஞ்சம் தள்ளி நில்லுங்க!

பெண்: தாய்மார்களே! நாகரீகப் பெண்கள் (Modern Ladies Association) சங்கத்தின் சார்பாக - பெண்களைக் கேவலப் படுத்தும் வகையில் 'கலவரம்' தினசரி 'தாசி' வாரப் பத்திரிகை ஆகியவற்றில் செய்திகளும் - படங்களும் வெளியிடுகிறார் இந்தத்தலைவர். குடும்பப் பத்திரிகை என்று வேறு போட்டுக் கொள்கிறார். எனவே 'பெண்கள் சங்கத்தின்' அரசியல் மகாநாட்டில் நாங்கள் செய்துள்ள தீர்மானங்களை அச்சிட்டு - புத்தக வடிவில் தயாரித்துள்ள "திருந்துகிறாயா? திருத்தட்டுமா?" என்ற பெயருள்ள இதனை அவருக்குப் பரிசாகத் தருகிறேன்!

ஆடிய: (மெதுவாக) கேவலம்! கேவலம்! .. ம்... தோழர் மயில்வாகனன். பரிசு போதும்!.. சீக்கிரமா நன்றி சொல்லச் சொல்லி விழாவை முடிச்சுடுங்க!

மயில்: ஆகட்டுங்க!... தோழர்களே அவசரமில்லாமல் கலைந்து செல்லுங்கள். தலைவருடைய பிறந்த நாள் விழாவிற்கு வந்திருந்து சிறப்புத் தந்த உங்கள் அனைவருக்கும் ஆடியபாதம் அவர்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்.

எல்லோரும் விரும்புவது
ஜெகஜோதி பல்பொடி
தயாரிப்பவர்கள்
சேகர் & கோ.
17, பாண்டிய வேளாளர் தெரு, மதுரை.

இலங்கை ஏஜண்டுகள்:-
ஜெகஜோதி & கோ., குருதெனியா, கண்டி.

இசை அமுது

மஞ்சள் வெ(ய்)யில் நேரமதில்
மங்கை இவள் வரவுக்கோ - நீ
மந்தை சாயும் காட்சி கண்டு
மயக்கங் கொள்ள ஓடிவந்து

சிந்தை கொள்ளும் சேதி சொல்லி
செங்கமலக் கன்னஞ் சிவக்க
சிங்கார வதனமதில் சுண்டிவிட்டு
சிதறும் சென்னீற்றழகு கண்டாய்!

அத்தான் என்றவுடன் அணைத்துவிட்டாய்
அந்த அணைப்பிலே யாது(ம்) மறந்தேன்
அம்மாவென்ற போதினிலே நான் திரும்ப
அருகிருந்த தாய்ப் பசு தலையசைக்க

அதுகண்ட கன்றே உடன் வர
அன்னை மடு தன்னில் சுரந்திட்ட
அமிழ்தமாம் வெண்பாலை அது சுவைக்க
அதுகண்டு நீ செய்த குறும்போ – அப்பப்பா

ஆடவர் நிலையே இப்படியாமோ
ஆண்டவன் செய்த செயல்தானே
அன்று நினைத்த நினைவெ(ல்)லாம்
அரும்பாய் மலர்ந்து மேல் வீழ

திருமணம் நமக்கென்றே – நீ
திடமாய் சொல்லிட்ட சேதியோ
தித்திக்குந் தே(ன்) மாவாம் அது எனக்கு
தீஞ்சுவை நீ தரும் முத்தமெலாம் என்பேனே

-திருஞானம்

மைதானமெங்கும் மங்கையர் கூட்டம்' சடுகுடு சக்கரவர்த்தினி சரசா அணிக்கும் சண்டமாருத ராணி சரோஜா அணிக்கும் இன்னும் கொஞ்ச நேரத்தில் சடுகுடுப் போட்டி துவங்கப்போகிறது என்று ஒலி பெருக்கியிலே குரல் கேட்டவுடன் வாலிபப் பட்டாளங்கள் வரிசை வரிசையாகப் படையெடுத்தனர்! போருக்கு வாருங்கள் என போர் முரசு கொட்டினால் புறமுதுகு காட்டி ஓடக்கூடிய மைனர் கூட்டம்–மங்கையரின் சடுகுடு ஆட்டம் என்றவுடன்–அதனைக் காண நாட்டம் இல்லாமலா போய் விடுவார்கள்?

“சீறி வரும் புலியதனை முறத்தினாலே சிங்காரப் பெண்ணொருத்தி துரத்தினாளே!” என்ற வீர பரம்பரையிலே சரசா பிறக்காவிட்டாலும் சடுகுடுப் போரிலே அவள் “பாஸ் மார்க்” வாங்கி இருக்கத்தான் செய்தாள்! சடுகுடுத் தலைவி ஆதியம்மாளிடம் சகல கலா வித்தைகளையும் கற்று வைத்திருந்தாள்!

சரசாவின் குருநாதனி ஆதியம்மாள் ஆதிகாலத்து ஒரிஜினல் விளையாட்டுக்காரி! அவள் ஆடாத அரங்கமில்லை–தகர மெடலிலிருந்து தங்கமெடல் வரை பரிசு பெறுவதற்கு வித விதமான விளையாட்டுக்களிலே தேர்ச்சி பெற்றிருந்தாள்! ஆதியம்மாளின் ஆட்டத்திலே சொக்கிப்போனவர்கள் ஆயிரக் கணக்கானவர்கள்!

சடுகுடுக்கலையை தன் உயிர் உள்ளவரை காப்பாற்ற ஆதியம்மாள் தன் தந்தை ஆறுமுகனாரின் பெயருக்கு ஒரு பெரிய அரங்கத்தையே அமைத்திருந்தாள்! சரசா போன்ற அங்கத்தினர்கள் அணி அணியாய் அதில் சேரவே–ஆறுமுகனார் திடலும் ஊரெங்கும் பரவ ஆரம்பித்து விட்டது!

ஆதியம்மாள் சடுகுடு விளையாட்டு-தமிழர் விளையாட்டு என்று தம்பட்டமடித்தாள்! அந்தக் காலத்திலே “காட்டா குஸ்தி-போட்டா போட்டி” என்று பயில்வான்கள் நோட்டீஸ் விடுவதைப் போல தன்னு

டைய "ஆண்டிப்பண்டாரம்" பத்திரிகையிலே சரசா அணியை பாயும் புலி என்றும்-சரோஜா அணியை சீறும் புயல் என்றும் கடபுடா வார்த்தையிலே தினமும் விளம்பரம் போட்டுக் கொண்டே இருந்தாள்!

அன்றைய விளையாட்டிலே எல்லா "பிளையர்களும்" வந்து விட்டனர். இரு டீம்களின் இணையற்ற தலைவிகளான சரசாவும்- சரோஜாவும்தான் இன்னும் வரவில்லை-புலியும், புயலும் புறப்பட்டவுடன் எப்படி வந்து சேரமுடியும்? தலைமை தாங்கும் ஆதியம்மாள் வந்தும் அவர்கள் வரவில்லை!

ஆறுமுகனார் திடல் அல்லோலப்பட்டுக்கொண்டிருந்தது! புலி பதுங்குவது பாயத்தான்-புயல் தயங்குவது வீசத்தான் என்று பலர் பேசிக்கொண்டிருந்தார்கள்!

தமிழன் கங்கை கொண்டான்-கடாரம் வென்றான் என்றெல்லாம் கதைகளில் மட்டுமே படிக்கிறோம். ஆனால் ஆதியம்மாளின் சிஷ்யை சரசா ஆண்களைக்கொன்றாள்-அகிலத்தையே வென்றாள் என்பதை இனிமேல் தான் படிக்கப்போகிறோம்! சரசாவின் நரம்பெல்லாம் ஆண் இரத்தம் ஓடினால் சரோஜாவின் நரம்பில் மட்டும் பெண் ரத்தமா ஓடிக்கொண்டிருக்கும்? இருவருமே ஆதியம்மாளின் கோட்டையிலே வளர்ந்தவர்கள் என்றாலும்-சரோஜாவை விட சரசா ஆட்டத்திலே அனுபவமானவள் என்றுதான் சொல்ல வேண்டும்!

சரசா ஆரம்பத்திலேயே ஆதியம்மாளிடம் சடுகுடு பயிற்சி பெற்றவள்-சரோஜா இடைக்காலத்திலேதான் அந்த மன்றத்திலே சேர்ந்தவள்! ஆகவே, சரோஜா ஆட்டத்திலே சிறந்தவளானாலும் அழகிலே குறைந்தவள் அல்ல- சரசாவுக்கு அழகு, ஆட்டம் இரண்டுமே நிறைய இருந்தன! அதனால் தான் சரசா தாசர்களும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே இருந்தார்கள்! சடுகுடுப்போட்டி என்றால் சரசாவின் நினைவுதான் எல்லோருக்கும் வரும்.

விசில் கூட்டம் பொங்கி வழிய ஆரம்பித்தும் - விளையாட்டு இன்னும் ஆரம்பமாகவில்லை! புலியும் புயலும் மோதப் போவதை

அறுசுவை உணவு! சுவைமிக்க பிரியாணி!!

கோழி & புறா சாப்ஸ், மீன் ரோஸ்ட், நெய் வருவல்

கோழி பிரியாணி, வான்கோழி பிரியாணி

ஸ்பெஷல் தயாரிப்பு.

உங்களை வரவேற்கிறது!

பாண்டியன் லாட்ஜ்

சாப்பாடு & பிரியாணி ஹோட்டல்

8, வெண்கலக்கடைத் தெரு, மதுரை.

ஆட்டுக்குட்டிகள் ஆவலோடு எதிர்பார்த்தன- அதோ சரோஜா வந்து விட்டாள் - கைதட்டல் ஆறுமுகனூர் திடலையே அதிர வைத்தது-மின் விளக்குகள் பூராவும் எரிய ஆரம்பித்தன- இரவா-பகலா என்று தெரியாத அளவுக்கு ஒரே வெளிச்சம்-அழகு மேடையில் முதற் பரிசு பெற்ற அதே சரோஜாதான் புன்னகையை உதிர்த்தவாறு கூட்டத்தைப்பார்த்தாள்-கூச்சல் அதிகமாகியது!

அதோ அடுத்து அனைவரும் எதிர்பார்த்த பச்சைக்கிளி சரசா பாயும் புலிபோல் வந்துவிட்டாள்-சரோஜாவைப் பார்த்த கண்கள் சரசா பக்கம் திரும்பின! புலியும்-புயலும் மைதானத்தின் மத்தியிலே சந்தித்து கை குலுக்கிக்கொண்டன. ஆனால் சரசா பக்தர்களும் சரோஜா பித்தர்களும் சண்டைக்கு தயாராவதைப் போல் நின்றனர்-காளையர் உட்கார்ந்திருந்த காலரியே ஆட ஆரம்பித்தது!

சரசாவின் கண்கள் விளையாட்டைக்காண வந்திருந்த ரசிகர்களை எடை போட ஆரம்பித்தன – நாலா பக்கமும் கண்களைச் சுழட்டினாள் - "சரசா வாழ்க" என்று ஆண்கள் பக்கமிருந்து குரல் எதிரொலித்தது - சரசா கைகூப்பி வணங்கினாள் - இன்னொரு பக்கமிருந்து "சரோஜா வாழ்க" என்று பெண்கள் குரல் ஒலித்தது - அப்போது ஆண்கள் முகத்தில் எண்ணெய் வடிய ஆரம்பித்தது! சடுகுடுப் போட்டி பக்தர்களிடையே இருந்ததே தவிர - சரசா அணிக்கும் - சரோஜா அணிக்கும் இல்லை, என்றுதான் கூறவேண்டும்!

சரசாவின் கண்கள் திடீரென காலரியில் உட்கார்ந்திருந்த ஒரு ஆணழகனை சந்தித்தது அவனும் பல்லைக் காட்டினான். இவளும் சிரிக்காமல் சிரித்தாள்! இருவர் கண்களும் "சேம் சைடு பவுல்" செய்ய ஆரம்பித்தன - அதற்குள் ஆட்டம் ஆரம்பமாகிவிட்டது இரு அணிகளும் வெகு ரோசத்துடன் விளையாண்டன - ஆனால் சரசா மட்டும் ஆட்டத்திலே "இண்டரஸ்ட்" இல்லாமல் நின்று கொண்டிருந்தாள்! புலி பதுங்குவது தன் மீது பாயத்தான் என்பதை உணர்ந்தான் அந்த காலரி வாலிபன்!

சரசா அந்த வாலிபனின் அழகிலே மயங்கினாள்! காலரியில் உட்கார்ந்திருக்கும் காளை நிச்சயம் ஒரு பயில்வானாகத்தான் இருக்குமென்று தனக்குள் முடிவுசெய்து கொண்டாள்.

அவள் ஒரு சடுகுடு சக்கரவர்த்தினியாக இருக்கும்போது அவனும் ஒருபயில்வான் சக்கரவர்த்தியாக இருந்தால் எவ்வளவு பொருத்தம் - சரசாவின் உள்ளம் ஒரு முறை பூரித்தது,



"பட்டவனுக்குப் பாடை - சுட்டவளுக்குச் சீடை... சீடை" என்று சரசா பாடிக்கொண்டே ஆடியதை அந்த வாலிபன் கண் கொட்டாமல் பார்த்து ரசித்தான் அவள் அழகையே அள்ளிப் புசித்தான்!

ஆட்டம் சூடுபிடிக்க ஆரம்பித்தது - சரோஜா அணி தோற்றது - சரசா அணி வென்றது! ஆம்! உண்மையிலே சரசா அந்த வாலிபனையும் வென்றுதான் விட்டாள்! ஆதியம்மாள் வெற்றி பெற்ற சரசாவைப் பாராட்டி "சடுகுடு ராணி" என்ற பட்டத்தையும் வழங்கினாள்! அன்றைய விழா முடிந்தது!

சரசாவுக்கு மைதானத்தை விட்டு வெளியே வர மனம் வரவில்லை - அவளுடைய கற்பனை பூராவும் பயில்வானின் காதலிலேயே லயித்துக் கிடந்தது. அவனுடைய பெயரைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று துடியாய்த் துடித்தாள் - கூட்டத்திலே கொடுக்கப்பட்ட குஸ்தி நோட்டீஸ் மூலம் அவள் ஏங்கித் தவித்த பயில்வானின் பெயரைத் தெரிந்து கொண்டதுடன் - அந்த நோட்டீஸில் அச்சடிக்கப்பட்டிருந்த அவனது உருவத்தைப் பார்த்ததும் அவளுக்கு அளவில்லா ஆனந்தம்! கண்ஜாடை காட்டினாள் - பயில்வானும் பக்கத்தில் வந்தார் - இப்போது இருவரும் நெருங்கி விட்டனர்! சரசாவின் தலைவி ஆதியம்மாளின் காரிலே பயில்வானுக்கும் இடம் கிடைத்து விட்டது! சரசாவும் பக்கத்தில் உட்கார்ந்தாள் - கதவு சாத்தப்பட்டது - கார் பறந்தது!

சரசாவும், பயில்வானும் பின் சீட்டில் அமர்ந்திருக்க - முன் சீட்டில் ஆதியம்மாள் அமர்ந்திருந்தாள். காரிலே அமைதி நிலவியது - சரசா தனது ஓரக் கண்ணால் வாலிபனைப் பார்த்துக் கொண்டே இருந்தாள் - ஆதியம்மாள் திடீரென ஒரு வெடிகுண்டைப் போட்டாள் - என்ன இருந்தாலும் ஒரு பத்திரிக்கைக்கு ஆசிரியை அல்லவா? அவள் போட்ட வெடிகுண்டு இதுதான்.

"சரசா! ஒரு நியூஸ்!"

"என்னம்மா சொல்றீங்க?"

"பயில்வானைக் கடத்திய பருவ மங்கை! என்ற தலைப்பிலே ஒரு நியூஸ்..."

காரில் இருந்த எல்லோரும் சிரித்து விட்டனர்! அதற்குள் சரசாவின் பங்களாவும் வந்து விட்டது - பயில்வானும் இறங்கினார் - ஆதியம்மாள் மட்டும் தனது "ஆண்டிப் பண்டாரம்" பத்திரிகை ஆபீஸை நோக்கி காரிலே போய்க் கொண்டிருந்தாள்!

வாழ்க மணமக்கள்!

கீழக்கரை நமது கலைப் பொன்னி ஏஜண்ட் உயர்திரு. R. திருநாவுக்கரசு அவர்களுக்கும் செல்வி வசந்தகுமாரி அவர்களுக்கும் 16-9-62ல் அன்று விமரிசையாக வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது. ஏராளமான வாழ்த்துத் தந்திகளும், பரிசுகளும் குவிந்தன. மணமக்கள் நீடூழி வாழ நாமும் வாழ்த்துகின்றோம்.

பயில்வானும், சரசாவும் பங்களாவினுள் நுழையும் போது ''வலிய வந்த சீதேவியைத் தள்ளாதே'' என்ற பாடல் ரேடியோவிலே முழங்கிக்கொண்டிருந்தது!

சரசா பயில்வானுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்தாள்! கட்டிய கணவனுக்குச் செய்ய வேண்டிய உபசரிப்பை எல்லாம் தன் காதலனுக்குச் செய்தாள்! அவனும் அதை அன்புடன் ஏற்றுக்கொண்டான். இருவரும் காதலிலிருந்து கல்யாணம் வரை என்னென்னமோ பேசினார்கள்.

நாட்கள் பல நகர்ந்தன! சரசாவுக்கும்-பயில்வான் பட்டுசாமிக்கும் ஆதியம்மாள் தலைமையில் திருமணம் நடந்தேறியது! சரசாவின் பங்களாவிலே எந்த நேரமும் சிரிப்பொலிதான்! ஆனால் ...முடிவு?

''பாலும் கசந்ததடி - படுக்கையும் நொந்ததடி'' என்று பட்டுசாமி கோரஸ் பாட ஆரம்பித்தான்.

சரசாவைப் பேட்டிகாண பங்களாவுக்குப் பலர் வந்தனர்-பட்டுசாமியும் பழைய பயில்வானாக இல்லாமல் பட்டுப்போன மரமாகவே காட்சியளித்தான் - மனக்கசப்பு வளர்ந்தது-சரசா தன் கணவன் பட்டுசாமியை கொஞ்சமும் மதிக்காமல் ஆண்கள் அணியுடன் சடுகுடு ஆடப்புறப்பட்டுவிட்டாள்!

புலியும்-புள்ளிமானும் ஒன்றுபட்டு வாழ முடியாது என்பதை பட்டுசாமி புரிந்து கொண்டான்! பட்டுசாமி பயில்வானாக இருப்பது சரசாவுக்குப் பிடிக்கவில்லை! சரசா சடுகுடு ஆட்டக்காரியாக இருப்பது பட்டுசாமிக்குப் பிடிக்கவில்லை. இரு துருவங்களும் ஒரு துருவமாவது முடியாத காரியம் தான்!

பயில்வான் பங்களாவை விட்டு வெளியேறினான்!

''பட்டவனுக்குப் பாடை-சுட்டவளுக்கு சீடை'' என்று சடுகுடு சரசா பாடிக்கொண்டே ஆடியது பட்டுசாமியின் காதுகளிலே ஒலித்துக்கொண்டே இருந்தது!

''மின்னும் மொசைக்'' தளவரிசைக் கற்களுக்கு

மதர் இந்தியா டைல்ஸ்

உபயோகியுங்கள்.

விபரங்களுக்கு :-

S. R. ஜெயராம்

144-B, கீழ வெளி வீதி,

(தவிட்டு சந்தை -

வெளியூர் பஸ் ஸ்டாப் சமீபம்)

மதுரை.



சிரிப்பு



டைரக்டர்: ஏங்க! புதுமுகம் நிர்மலாவை எங்கே கண்டு பிடிச்சீங்க. ரொம்பப் பிரமாதமுங்க.

தயாரிப்பாளர்: சினிமா ஸ்டார் ரம்பா தேவியைப் புக் பண்ணலாமுன்னு அவ பங்களாவுக்குப் போயிருந்தேன் அங்கே இந்தப் பொண்ணு வேலைக்காரியா இருந்தவதான். பார்த்தேன் உடனே புக் பண்ணிட்டேன்.

நடிகை: நான், கதாநாயகியாய் நடிக்கும் படத்தில் உங்களையும் நடிக்க வைக்கலாம் என்று நினைக்கிறேன்

கணவன்: கதாநாயகனாகவா?

நடிகை: இல்லை கதாநாயகி வீட்டு சமையற்காரனாக நடியுங்கள் நடிப்பு தத்ரூபமாக இருக்க வேண்டுமல்லவா?

நிருபர்: உங்களுக்கு ரொம்பப் பிடித்தவர் யார்?

நடிகை: என் கணவரைத்தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

★



கலாரசிகர்களே! 'கலியுகக் கட்டழகி' என்னும் படத்தில் நான் மூன்று வேடங்களில் தோன்றி நடித்துள்ளேன். படம் நூறுநாள் ஓடுவதற்கு நீங்கள் எல்லோரும் உங்கள் ஆதரவைத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தில்பக்
மூட்டைப்பூச்சிகளை ஒழிக்க உத்திரவாதமுள்ளது

அம்பாஸிடர்

“தம்பு! தபாலிருக்கிறதா எனக்கு?” என்று கேட்டவாறே புன்னகையோடு எதிரே வந்தான், ராஜா! அவனது ராஜ நடையையும் உடையையும் ஒரு முறை கவனித்தவாறே தம்பு சாமி, “இருக்குதுங்க” என்று எடுத்துக் கொடுத்தான் ஒரு கவரை. ராஜாவின் முகம் மேலும் மலர்ந்தது. “என்ன சார்! நான் இருபது நாட்களாகவே பார்க்கிறேன்! தினசரி கடிதம் வந்து கொண்டே இருக்கிறது. கடிதத்தை வாங்கியவுடன் உங்கள் உள்ளம் பூரிப்பால் விம்மி எழுகிறது. ‘எதுவும் லவ்’ சமாச்சாரமா?” என்று ராஜாவின் முகத்தை தன் ஓரக்கண்களால் விழுங்கியபடியே குத்தலாகக் கேட்டு விட்டு உதட்டைக் கடித்துக்கொண்டான்.

“அடே! நீ சாதாரண தபால்காரன் இல்லப்பா! கச்சிதமா என் மனதைப் புரிஞ்சி சொல்றியே! லவ் லெட்டரே தான்.” என்றான் ராஜா!

“சீக்கிரமா மேரேஜ் முடிங்க சார்! ஒருநாள் விருந்து சாப்பாடாவது கிடைக்கும்?” என்றான் தம்பு சிரித்தபடி.

“இது மேரேஜ் செய்துகொள்கிற காதல் இல்லே தம்பு! நீயும் ஒரு ஜாலியான பேர்வழியாத் தான் இருக்கே! ஒரு நல்ல யோசனை சொல்லேன் அப்படி வா உட்கார்ந்து பேசலாம்” என்று பூட்டியிருந்த வீட்டு வாயிற்படியில் போய் அமர்ந்தான் ராஜா!

“என்ன சார் ஐடியாவா வேணும்? சொல்லுங்க சார்!” என்று கேட்டுக் கொண்டே ராஜாவின் பக்கத்தில் போய் உட்கார்ந்தான் தம்பு சாமி.

“ஒருநாள் மாலை மணி ஏழு இருக்கும், நான் பசுமலையில் படித்துக் கொண்டிருக்கும் என் தம்பியைப் பார்த்துவிட்டு ரயில்வே லயனிலேயே நடந்து வந்துகொண்டிருந்தேன் மதுரையை நோக்கி. அப்போது ரயில்வே லயனிலே ஆள் நடமாட்டமே கிடையாது யாரோ ஒரு உருவம் லயனுக்குக் குறுக்கே படுத்திருப்பது போல் தெரிந்தது சிறிது தூரத்தில். எனக்கு உள்ளூர பயம் தோன்றியது யாராவது ரயிலிலே அடிபட்டு விட்டார்களோ என்ற எண்ணம் தோன்றியது திரும்பி விடலாமென லயனை விட்டு கீழே இறங்கினேன். மனம் கேட்கவில்லை. ரெயிலில் அடிபட்டு இறந்திருந்தால் தண்டவாளத்தின் மீது எப்படி குறுக்கே கிடக்க முடியுமென யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தவனாய் படுத்திருக்கும் இடத்தை நோக்கி நடந்தேன்.”

“மதுரைக்கும் பசுமலைக்கும் இடையே என்றால் எந்த இடத்தில்?” இடைமறித்தான் தம்பு.

"பழங்காநத்தத்திற்கு நேரே" என்றான் ராஜா.

"சரி! சொல்லுங்கள்!" என்றான் தம்பு.

"பக்கத்தில் போய்ப்பார்த்தால் ஒரு பெண். குப்புற விழுந்து கிடந்தாள். யாரம்மா அது என்று அதட்டலுடன் கேட்டேன் புரண்டு படுத்தாள். உயிருள்ள ஜீவன் என்று தெரிந்ததும் அருகில் போய் அவளை எழுப்பினேன் விக்கல்தான் பதிலாக வந்தது. மெதுவாக அவளைத் தூக்கி தண்டவாளத்தை விட்டு கீழே இறக்கினேன்.

"விடுங்கய்யா! உங்களுக்குப் புண்ணியமாப்போகுது. வாழத்தான் விடமாட்டேங்கிறாங்க என்னை. சாகக்கூடவா விடக் கூடாது நீங்க" என்று உட்கார்ந்தவாறு கேவினாள் அவள்.

"உனக்கு வாழ்வு தேவையென்றால் தண்டவாளமா வாழ்வு தருமென்று நினைத்தாய்! பைத்தியக்காரி" என்று கூறிக்கொண்டே உற்றுக் கவனித்தேன் அவளை. முகத்தைத் தன்னிரு மென் கரங்களால் மூடியிருந்தாலும் பருவ மங்கை என்பதைப் புரிந்து கொண்டேன். சென்னை செல்லும் திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் ஒளியையும் ஒலியையும் ஒரே வேகத்தில் பாய்ச்சியவாறு வந்துகொண்டிருந்தது. எழுந்து நின்றாள் அவள். நான் அவள் கையைப் பற்றினேன். 'விடுங்க' என்றாள். 'இல்லை! மீண்டும் நீ வண்டி அருகில் நெருங்கியவுடன் பாய்ந்து விட்டால் நான் உன்னைக் காப்பாற்றியதற்கு அர்த்தமே இல்லாமல் போய்விடும். கெட்ட எண்ணத்தோடு உன் கையைப் பிடிக்கவில்லை. வண்டி நம்மை விட்டுத் தாண்டிச்சென்றவுடன் கையை விட்டுவிடுகிறேன் உன்னையும் உன் வீட்டில் கொண்டுபோய் சேர்த்து விட்டால்தான் நான் நிம்மதியாக என் வீடு செல்வேன்' என்று கூறிக்கொண்டிருக்கும் போது புகைவண்டி எங்கள் அருகில் வந்து விட்டது. அதன் விளக்கொளியில் நாங்கள் ஒருவரையொருவர் நன்றாகப் பார்த்துக் கொண்டோம்.

"வண்டியும் எங்கள் பார்வையிலிருந்து மறைந்தது. நானும் அவள் கையை விட்டு விட்டேன். 'உனக்கு ஏன் இந்த தப்புத்தி வந்தது?' என்று கேட்டேன்.

என்னுடைய சொந்த ஊர் விருது நகருக்கு அருகிலுள்ள கட்டையாபுரம்! எனக்கு பெற்றோர் இருக்கிறார்கள். என் கணவர் மதுரையில் ஏதோ ஒரு ஆபீஸில் வேலை பார்க்கிறார். பெண்ணின் மனதைப் புரிந்து கொள்ள இயலாத ஒரு வகைப் பிறவி அவர்! போக்கிரி போல் என்னை வதைக்கிறார். புகுந்த இடத்தில் மாமனார், மாமியார், நாத்தனார் தொல்லைகள் தான் இருக்குமென்பார்கள். எனக்கு அவைகளெல்லாம் கிடையாது. கட்டிய கணவரே எட்டிக்காயாக இருக்கிறார்.

"நேரங்கடந்து வீட்டிற்குவருவார். கதவுதிறக்க சற்று தாமதமாகி விட்டால் அடிதான் மிதிதான் எனக்கு!."

"மணமாகி ஒருவருடம் தான் ஆகிறது. அவர் மனம் எப்படி

மாறினதோ அதற்குள். சாப்பிடும்போது உப்பு குறைவாகவோ, புளிப்பு குறைவாகவோ இருந்து விட்டால் போதும்! அவர் வாயில் என்ன வார்த்தை வரும் என்பதே தெரியாது. என் முதுகோ கன்னமோ வீங்கி விடும். பழங்காநத்தத்திற்கு நான் அவருடன் வாழ வந்து பத்து மாதங்கள்தான் ஆகிறது. மணமாகி இரண்டு மாதம் கட்டையாபுரத்தில்தான் இருந்தேன்.

"ஆனால், மதுரையிலுள்ள மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் போனது கிடையாது. வாழ்வின் மீதே எனக்கு வெறுப்பு ஏற்படுமாறு பல தொல்லைகள் தினந்தோறும் நடைபெற்று வருகிறது. என் பெற்றோரிடம்கூறினேன். 'கணவனைத் திருத்துவது உன் கையில்தான் இருக்கிறது. உன் மீது அவர் குறை காணும்படி ஏன் நடந்து கொள்கிறாய்' என்று என்னைத்தான் கண்டிக்கிறார்கள்.

ஒரு முறை கோபத்தில் என் தாய் வீட்டிற்கே போய்விட்டேன் பத்து தினங்கள் அங்கிருந்தேன் தேடி வரவில்லை என் கணவர். என் தாயாரே என்னை அழைத்து வந்து விட்டுச் சென்றார்கள். என் தந்தையோ "வந்தால் உன் கணவருடன் வா! இல்லையேல் ஒழிந்து போ! எனக்கு இன்னும் இரண்டு பெண் மக்கள் இருக்கிறார்கள்! போதும்' என்றார்.

"அரைப்படிஅரிசியைசமையல் செய்துவைப்பேன். எனக்கு கால் வயிறு சாப்பாடுகூட மீதியிருக்காது குண்டோதரன் தம்பியோ என்றுஎன்விதியைநான்நொந்து கொள்வேன். ஒரு நாளாவது நீ சாப்பிட்டாயா என்று கேட்டதே இல்லை. இரவு ஒருமணிக்கு வந்து கதவைத் தட்டுவார். தூக்கக் கலக்கத்தில் எழுந்து வருவதற்குள் கதவைத் தட்டிய வேகத்திலேயே என் கன்னத்தையும் தட்டுவார். காலையில் ஏழு மணிக்கு எழுப்பினால் காலால் எட்டி உதைப்பார். அவராகவே பத்து மணிக்கு எழுந்து ஏண்டி மூதேவி என்னை எழுப்பினால் என்ன, என்றுகேட்டுக்கொண்டே தலையே கழுத்திற்குள் போய் விடுவதுபோல் குட்டுவார். பெண்ணாகப் பிறந்திட பெருந்தவம் செய்திட வேண்டும் என்று கூறுவார்கள். என்னைப் பொறுத்த வரை எதிராக இருக்கிறது.

"இருந்து என்ன சுகம் கண்டோமென்று இங்கு வந்தால் நீங்களும் ... ஆண்...... வர்க்கம் தானே!" என்று அவள் கூறி முடிப்பதற்குள் அவள் வாயைப்பொத்தினேன். அவள் மனதிற்குப் பல ஆறுதல்கள் கூறி, "பெண் நினைத்தால் கணவனை காலடியில் தவம் செய்ய வைக்கலாமென்றும், அதற்கான அறிவுரைகளை உனக்கு அடிக்கடி வந்து சொல்கிறேன். நீ வீட்டிற்குப் போ" என்று கூறினேன்.

பழங்காநத்தம் சிறு ஊர்! ஆகையால் என்னை அங்கு வர வேண்டாமென்றும் அடிக்கடி கடிதம் எழுதுவதாகக் கூறி என் முகவரியைவாங்கிக் கொண்டாள். நானும் அவளது கணவன் எந்த ஆபீஸில் வேலை பார்க்கிறார் என்பதை அவளிடமே கேட்டேன். "எங்கள் குடும்பம் நடக்கிற

விதத்தில் எனக்கெப்படித் தெரியும்? அதைக் கேட்டால் நான்கு உதையும் அடியும்தான் கிடைக்கும்'' என்று கூறினாள். ஆனால் தம்பு! தினந்தோறும் அவள் குடும்பத்தில் நடக்கும் விஷயங்களை எனக்கு எழுதிக் கொண்டே இருக்கிறாள் நான் அவளுக்கு புத்திமதி கூறி எழுதி வந்தேன். நான் கூறுகிற புத்திமதி கணவனைப் பொறுத்தவரை சரிவர வில்லையாம். என்னிடமே வந்து விடுகிறேன் என்றுஎழுதுகிறாள்! ஆமாம் தம்பு! அவள் இப்போது என்னைக் காதலிக்கிறாள்''

"திருட்டுத்தனமாக பறித்து நுகரும் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்குத்தான் மணம்அதிகமென்று அறிஞர்கள் கூறுவார்கள் சார்! வாழ்க்கையை ஆரம்பியுங்கள் என்றான் தம்பு!

"தன் தோட்டத்து மல்லிகையை மாற்றான் பறிப்பதை மறைந்திருந்து பார்த்து மகிழ்ச்சியடையும் அறிஞர்களாகத்தான் இருக்க வேண்டும்! நல்ல ஆளப்பா நீ!" என்று கூறியவாறு தன் கையிலுள்ள கடிதத்தைப் பிரித்தபடி இன்று எந்த அளவில் வந்திருக்கிறது அவளது வாழ்க்கை என்பதைப்பார்ப்போம் என்று கடிதத்தைப் பிரித்து படிக்க ஆரம்பித்தான் ராஜா!"

அன்பே!

தங்களைப் போன்ற உள்ளம் கொண்டவர்களை கணவராக அடையும் பாக்கியம் எனக்குக் கிடைக்கக் கூடாதா? தாங்கள் என் கணவரிடம் நான் நடந்து கொள்ளும் முறையை எழுதி என்ன பயன்? ஆசையாகப் பேசினால் வாய்க்கு வந்தபடி பேசுகிறார். கொஞ்சினால் விலகி ஓடுகிறார். காலடியில் விழுந்தால் எட்டி உதைக்கிறார். மனம் குளிர இன்பம் கண்ட நாளே கிடையாது! இன்று கூட இரவு ஒரு மணிக்கு கதவைத் தாழிடாமல் சாத்தி வைத்துக்கொண்டு அவர் வரவை எதிர் பார்த்திருந்தேன் தங்கள் யோசனைப்படி! வந்தவர், "என்னடி இந்நேரம்வரை கதவு தாழிடவில்லை. தாசித்தொழில் பார்க்கிறாயா? என்று கேட்டபடி ஓங்கி அறைந்து விட்டார் "வாருங்கள், அத்தான்!" என்று அன்போடு அழைக்க, வாய் திறப்பதற்குள் அறைவிழுந்தது. அவரது வலது கையின் நான்கு விரல்களும் என் இடது கன்னத்தில் பதிந்து விட்டன. நீங்கள் மறுத்தால் எனக்கு வாழ்வே இல்லை. இன்று இரவு ஏழு மணிக்கு நாம் முதன் முதலில் சந்தித்த ரெயில்வே லயனில் தங்கள் வரவை எதிர்பார்த்து காத்திருப்பேன். தாங்கள் வந்து என்னை அழைத்துச் செல்லா விட்டால் சென்னை செல்லும் திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் என் உயிரையும் உடன் எடுத்துச் செல்லும்.

இப்படிக்கு,

வாழ விரும்பும் அபாக்கியவதி

ராஜம்மாள்.

கடிதத்தைப் படித்து முடித்த ராஜாவின் வாயிலிருந்து "அட, மாட்டுப்பயலே!" என்ற வார்த்தை சிதறி விழுந்தது! "தம்பு! உன் யோசனை கூட வேண்டாமப்பா! நானே ஒரு முடிவுக்கு வந்துட்டேன்!" என்று கூறிவிட்டு கம்பீரமாக நடந்து சென்றான் ராஜா!

•

அன்று மாலை ஆறுமணிக்கே பழங்காநத்தத்திற்கு நேரேயுள்ள ரெயில்வே லயனில் போய் நின்று விட்டான் ராஜா! நிமிஷத்திற்கு நிமிஷம் பழங்காநத்தத்தை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துக்கொண்டான். சென்னை செல்லும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் போய்விட்டது. திருநெல்வேலி எக்ஸ்பிரசும் போய்விட்டது மணி ஏழு, ஏழரை, எட்டு! ராஜம்மாள் வரவே இல்லை. வேறுவிதத்தில் தற்கொலை செய்து கொண்டாளோவென மனம் குழம்பியவாறு இரவு பத்து மணிக்கு சொக்கிகுளம் வந்தடைந்தான் ராஜா! இரவு தூக்கமே வரவில்லை. படுக்கையில் புரண்டு புரண்டுபடுத்தான். ராஜம்மாளின் வட்டமான முகம் அவன் எதிரே தோன்றி மறைந்து கொண்டிருந்தது. எந்நேரம் தூங்கினானென்று அவனுக்கே தெரியாது.

மறுநாள் காலை பத்துமணிக்கு எழுந்தவன் தபால் ஏதாவது

வரும் என்று தம்புவை எதிர் பார்த்திருந்தான்.

அன்று தம்பு வரவில்லை! ஒரு வாரம் லீவில் போயிருப்பதாகவும் அவனுக்கு உடல் நலம் சரியில்லை என்றும் அவனுக்குப் பதில் தான் வந்திருப்பதாகவும் ஆனால் ராஜா என்ற பெயருக்கு தபால் எதுவும் இல்லையென்றும் கூறிவிட்டுச் சென்றான் தபால்காரன். தினந் தோறும் மாலை ஆறுமணி முதல் எட்டு மணி வரை "சந்திப்பு" இடத்தை முற்றுகையிட்டு ஏமாற்றத்துடன் திரும்பினான் நான்காம் நாள் இரவு எட்டு மணிக்கு மனதில் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு ராஜம் மாள் முகவரிக்கே வந்து விட் டான்.

வீடு சாத்தப் பட்டிருந்தது. தட்டுவதற்கு கையைத் தூக்கி னான். வீட்டினுள்ளே சிரிப்பொலி கிளம்பி மிதந்துவந்தது. ஓங்கிய கைதாழ்ந்தது தலைகுனிந்தவாறே 'ராஜம்மா அப்படிப்பட்டவளா? நாம் அவளை ஏற்றுக் கொள்ள மாட்டோமென எண்ணி வேறொரு வனை... அதற்கு மேல் அவனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. கதவிடுக்கின் வழியாக தன் கண் பார்வையைச் செலுத்தினான் "ஆ தம்புவா" என்ற சொல் மட்டுமே ராஜாவின் இதய பீடத்திலிருந்து வெளிவந்தது. தலையைத் தாழ்த் தியபடியே சொக்கிகுளம் வரை நடந்தே வந்து சேர்ந்தான்.

ஒருவாரம் கழித்து ராஜாவுக்கு ஒரு கடிதம் வந்தது ராஜா முன் போல் கடிதத்தை எதிர்நோக்கி யிருப்பதில்லை. ராஜம்மாளை தன் எண்ணத்திலிருந்து எடுத் தெறிந்து விட்டு அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்தான்.

தம்பு, ராஜாவின் வீட்டுவாயிற் படியில் நின்றவாறே "ஸார் போஸ்ட்" என்றான். ராஜா வெளியே வந்தான். தம்பு அவன் கையில் கடிதத்தைக் கொடுத்து விட்டு நமட்டுச் சிரிப்பு ஒன்றை உதிர்த்தபடி நடையைத் தொடர்ந்தான். ராஜாவும் பதி லுக்குச் சிரித்து விட்டு கடிதத்தைப் பிரித்துப்படித்தான். அன்பு அண்ணா!

என்கணவர் இதயத்தில்உள்ள அன்புக் குளத்திலே நீந்தும் அன்னமாக நான் ஒருத்தி மட் டுமே இருக்கிறேன். அங்கே எனக்குப் போட்டியாக யாருமே இல்லை. என் கணவர் மனித தெய்வமாக மாறிவிட்டார் நடந் ததை மறந்து விட்டு தங்கள் சகோதரியாகிய என்னை ஆசீர் வதிக்க வேண்டுகிறேன்.

தங்கள்

அன்புச் சகோதரி

ராஜம்மாள்.

பிரபல சினிமாநட்சத்திரத்தின் திருமணத்தின் போது படத் தயாரிப்பாளர் பட்சிராஜன் அன்பளிப்பு வழங்குகிறார்.

நெஞ்சின் அலைகள்

கலைவாணர் - மர்லின் மன்ரோ சந்திப்பு!

[எழுதியவர் : புவனு]

சொர்க்கமே அப்படியே சொக்கிப் போய் நிற்கும்படி ஒரு பெண் வெள்ளை உடை உடுத்தி வருகிறாள்... அவளது நடையைக் கண்டு அங்குள்ளவர்கள் ரசிக்கிறார்கள்.. அவளைப் பார்த்து கொண்டே நிற்கிறார்கள்... எதிரில் கலைவாணர் வருகிறார்...., அவரைக் கண்டதும் மன்ரோ நின்று விடுகிறாள்...

மன்ரோ: வணக்கம்.

கலைவாணர்: ஆ! மன்ரோவா!... நீங்களா தமிழிலே பேசறீங்க!

மன்ரோ: ஆமாம் நானேதான்... பெரும்பாலும் தமிழர்களே மலிந்துகிடக்கும் இங்கு வந்த பின்பு தமிழ் பேசுகிறேன்.

கலைவா: அது சரி... கீழே சினிமா உலகம் எப்படிம்மா இருக்கு?

மன்ரோ: உங்களைக் காட்டிலுமா நான் அனுபவம் கண்டிருக்கேன்!.. ஒவ்வொரு சமயத்துல உங்க ஹாஸ்யங்களை கேள்விப்பட்டு நானே ரசித்திருக்கேனே! ஆனா இப்ப சினிமா உலகம் ரொம்ப கெட்டுப்போச்சுங்க!

கலைவா: இருக்கட்டும்மா! ரொம்பவும் புகழாதீங்க! இப்படித்தான் என்னை அளவுக்கு மீறி புகழ்ந்து இங்கே அனுப்பிச்சுட்டாங்க!

மன்ரோ: இருந்தாலும் உங்களை இழந்த உங்க நாட்டிலே – உங்களைப் போன்ற 'காமெடியன்கள்' இல்லாமே தவிக்கிறாங்களாம்...

கலைவா: அட.... நீ ஒரு பக்கம் நான் இங்கே வர்றதுக்கு முன்னாடியே என் சிஷ்யப்பசங்களைத் தயார் பண்ணித்தான் வைச்சேன்! அவனுக தலைவிதி அவ்வளவுதான். அதுசரி. நீ ஏம்மா, இங்கே வந்துட்டே!

மன்ரோ: உலகமே வெறுத்துப் போச்சு வாழ்க்கையிலே. நிம்மதியே இல்லை வந்துட்டேன்!

கலைவா: என்ன பொண்ணும்மா நீ! உன்னைப் பார்த்து நிம்மதி அடைந்து கொண்டிருக்கிற வாலிபர்களைத் தவிக்க வைச்சுட்டு வந்துட்டியே... இதோ பாரம்மா கலைஞர்கள் எப்பவுமே கஷ்டப்பட வேண்டியவங்கதான்...

மக்களைச் சந்தோஷப் படுத்தறதுக்காக நாமெல்லாம் கஷ்டத்தை ஏத்துக்கிடத்தான் வேணும்...

மன்ரோ: அது சரி...... நாமளும் கொஞ்சமாவது சந்தோசமா இருக்கணுமுல்லே.

கலைவா: சந்தோசமா இருக்க நினைச்ச பொண்ணு – எதுக்காக சினிமா உலகத்துக்கு வந்தே!

மன்ரோ: தாய் தந்தை இருவரையும் இழந்து தவித்த எனக்கு அதுதானே ஆதரவளித்தது!

கலைவா: ஆமா ஆமா?...... அதுவும் உண்மைதான்... இருந்தாலும் உன்னை ஆதரிச்ச கலை உலகத்தைக்கண்ணீர் வடிக்க வச்சுட்டு நீ வந்திருக்கப்படாதம்மா!

மன்ரோ: என்னங்க நீங்க போன பிறகு கூட கலை உலகம் அழத்தான் செய்தது! ஆனா நான்...

கலைவா: எனக்கு வியாதி வந்து ...செத்து...செத்து அப்புறம் இங்கே வந்து போட்டேன்... நீ...? உனக்கு என்னம்மா?

மன்ரோ: எனக்கு உடலுக்கு ஒன்றுமில்லை. ஆனால் உள்ளத்திலே நிம்மதி இல்லை... தினந்தோறும் ஆடியும் பாடியும் ஆடல் அரங்குகளில் காலங் கழித்த போது-எனக்கு நிம்மதியான தூக்கம் வராமலிருந்தது... ஆகவே நிம்மதியைப் பெறுவதற்காக தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்டுப் பழக்கப் படுத்திக்கொண்டேன்.

அன்றொருநாள் மனம் வெறுப்பாக இருந்தது தொடர்ந்து சில நாட்கள் தூக்கமே இல்லை எனவே அதிகமாக தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்டேன்.

நீண்ட நித்திரை செய்து விட்டேன்.

(ஒருவன் ஓடி வருகிறான்.)

வந்தவன்: ஆ... டியர்... மன்ரோ உன்னைத்தேடித்தான் நானும் இங்கே வந்தேன்!...

கலைவா: யாருடா பைத்தியம்! போடா அந்தப் பக்கம்...

வந்த: பைத்தியமல்ல நான்! என் கனவுக்கன்னி மர்லின் மன்ரோவை இழந்து தவிக்க விரும்பாமல் அவளைத்தேடி வந்தேன்!

கலைவா: சே சே!...செத்தாக்கூட நடிக நடிகையரை நிம்மதியா இருக்கவுட மாட்டானுகபோல இருக்கே!...

வந்த: டியர் மன்ரோ!... "நயாகரா"விலே நடித்தாயே!...... ஆஹா எப்படிச் சொல்வேன்.

கலைவா: இந்த நேரத்துல நான் கீழே இருந்திருந்தா-உன்னைக் குற்றாலத்துக்கு கூட்டிட்டு போயி-பயலே உன் தலையிலே நாலு எலுமிச்சம் பழத்தைத் தேய்ச்சு பைத்தியத்தை தீர்த்திருப்பேன்...

மன்ரோ: பார்த்தீர்களா! என்னை எங்குமே நிம்மதியாக வாழ விட மாட்டேங்கறாங்களே!

கலைவா: அட...... நீ தைரியமா இரம்மா இங்கேயும் ஏதாவது தூக்க மாத்திரைகளை சாப்பிட ஆரம்பிச்சுடாதே

மன்ரோ: அப்போ... நான் போயி ரெஸ்ட் எடுக்கட்டுமா?

கலைவா: போம்மா... போ...

மன்ரோ: வணக்கம் கலைவாணர் அண்ணா! (போகிறாள்)

கலைவா: (சிரித்துக் கொண்டே) அப்பா மன்ரோ மணாளா! சொர்க்கத்துக்கு வந்த பிறகு கூட மவுண்ட்ரோடு புத்தி போகலியா? போடா நீயும் நிம்மதியாகத் தூங்கு போ...

தில்பக்
மூட்டைப்பூச்சிகளை
ஒழிக்க
உத்திரவாதமுள்ளது

தயாரிப்பிலே

தங்கமலர்

கங்கா புரொடக்ஷன்ஸாரின் துரித தயாரிப்பு 'தங்கமலர்' இதில் காதல் மன்னன் ஜெமினி கணேசன், சரோஜாதேவி, எம். ஆர். ராதா, லட்சுமிராஜம், ராமாராவ், மனோரமா ஆகியோர் நடித்துள்ளார்கள். கதை வசனத்தை வித்துவான் வே. இலட்சுமணன் எழுத-பாடல்களை கவிஞர்கண்ணதாசன் இயற்ற கே. வி மகாதேவனின் இசை அமைப்புடன் டி. எஸ். ராசகோபாலின் டைரக்ஷனில் மளமளவென்று வளருகிறது தங்கமலர்.

நீங்காத நினைவு

பத்மா பிலிம்ஸார் அதிவேகமாகத் தயாரிக்கும் படத்திற்கு "நீங்காத நினைவு" என்று பெயரிட்டிருக்கிறார்கள். இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன், விஜயகுமாரி, கல்யாண்குமார், புஷ்பலதா, வி. கே. ராமசாமி, தாய் நாகேஷ் மனோரமா, பேபி சாவித்திரி ஆகியோர் நடிக்கிறார்கள் கதை வசனங்களை மா. ரா. எழுதியிருக்கிறார். இசை அமைப்பு, கே. வி. மகாதேவன். டைரக்ஷன் தாதாமிராஸி, டபிள்யூ. ஆர். சுப்பாராவ்.

நவராத்திரி

படத்திற்குப்பெயர் நவராத்திரியா? அல்லது நவராத்திரியின் கதையைப் படமாக்கப் போகிறார்களா என்ற ஐயம் வேண்டாம்!... இது புதிய கதை! ஒன்பது இரவுகளில் நடக்கும் சம்பவங்களை அடிப்படையாக வைத்து படமாக்கப் படுகிறது. இப்படத்தின் கதை வசனம், டைரக்ஷன் ஆகியவைகளையும் தயாரிப்பாளரான ஏ பி. நாகராஜனே ஏற்பார்! எனத் தெரிகிறது...வெகு விரைவில் 'நவராத்திரி'யை வெள்ளித்திரையில் காணலாம்...

கலையரசி

சிறிது காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரோடி பிரதர்ஸின் 'கலையரசி'யின் முழு உரிமைகளையும் பெற்று ராதா கிருஷ்ணா பிலிம்ஸார் வளர்க்க ஆரம்பித்து விட்டார்கள்!

புரட்சி நடிகர் எம் ஜி ராமச்சந்திரன், பானுமதி, நம்பியார், வீரப்பா முதலியோர் நடிக்கும் இப்படத்தை ஏ. காசிலிங்கம் இயக்கி வருகிறார்.

காட்டு ரோஜா

திருமணத்திற்குப்பின் மீண்டும் பத்மினி 'காட்டுரோஜா'வில் நடிப்பதாக ஏற்கனவே செய்தி வெளி வந்தது தெரிந்ததே!

பத்மினி—எஸ். எஸ். ராசேந்திரன் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கும் 'காட்டுரோஜா'வை சுப்பாராவ் டைரக்ட் செய்கிறார். கதை வசனத்தை மதுரை சோலைமலை எழுதியிருக்கிறார்... எம். ஆர். ராதா, தங்கவேலு, முத்தையா, ஜி. வரலக்ஷ்மி, ஜி. சகுந்தலா, வி. கே. ராமசாமி

ஆகியோரும் இதில் நடிக்கின்றனர்.

ஆர். ஆர். பிக்சர்ஸ் தயாரிப்பு

பாசத்தை தயாரித்து வெளியிட்ட ஆர். ஆர். பிக்சர்ஸார் தங்களின் 10-வது தயாரிப்பு ஒன்றைத் துவக்கியுள்ளார்கள். இதில் எம். ஜி. ராமச்சந்திரன் குடுமிவைத்த பட்டிக்காட்டானுக நடிக்கிருர். சக்திகிருஷ்ணசாமி வசனம் எழுதும் இப்படத்தை ராமண்ணு டைரக்ட் செய்கிருர்.

தெய்வத்தின் தெய்வம்!

துரித தயாரிப்பு வரிசையில் சித்ரா புரொடக்ஷன்ஸாரின் தெய்வத்தின் தெய்வமும் ஒன்று. எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, எஸ். வி. ரங்காராவ், மணிமாலா ஆகியோர் நடித்துவரும் இப்படத்தின் கதை வசன, டைரக்ஷன் பொறுப்புகளை கே.எஸ். கோபால கிருஷ்ணன் ஏற்றுள்ளார்.

ஏவி. எம். அன்னை!

இதயத்தைத் தொடும் உணர்ச்சி மிக்க சம்பவங்களைக் கொண்டுள்ள 'அன்னை' என்ற கதையை ஏவி. எம். புரொடக்ஷன் தயாரிக்கிறது.

பானுமதி, ரெங்காராவ், சௌகார் ஜானகி, குமாரி சரஸ்வதி, லீலா, முத்தையா ஆகியோர் நடிக்கும் இப்படத்தை திரையுலக இரட்டையர்களான கிருஷ்ணன்–பஞ்சு டைரக்ட் செய்கிருர்கள். பாடல்களை கண்ணதாசன் எழுதியிருக்கிருர்.

பெண் மனம்

பிரபல நாவலாசிரியை லட்சுமி எழுதிய 'பெண் மனம்' என்ற கதையை டைரக்டர் பிரசாத் படமாக்கி வருகிருர். திரைக்கதை வசனத்தை கலைஞர் கருணுநிதி எழுதுகிருர். இப்படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன், சரோஜாதேவி, எம். ஆர். ராதா, முத்துலட்சுமி மற்றும் பலர் நடித்து வருகிருர்கள்.

தலைவர்கள் பேச்சில்

1.	நேரு:	எல்லைப் பிரச்சினை.
2.	காமராஜ்:	தி. மு. க. ஒழிப்பு.
3.	ராஜாஜி:	அணுகுண்டு எதிர்ப்பு.
4.	ஜீவா:	தமிழ் ஆட்சி மொழி, பயிற்சி மொழி!
5.	சம்பத்:	ரேடியோ போராட்டம்.
6.	ஆதித்தன்:	சடுகுடு விளையாட்டு
7.	அண்ணு:	விலைவாசி மறியல்

(குறிப்பு: மேற்கண்ட தலைவர்களின் கொள்கைகளைப் பற்றிய விமர்சன வெடிகளை 32-ம்பக்கம் காண்க.)

சினிமா செய்திகள்



மணப்பெண் இந்திராதேவி!

அழகுற கட்டப்பட்ட அந்த பங்களாவின் கூடத்திலே அலங்கரிக்கப்பட்ட மேஜையின் மீது-பழங்கள், புஷ்பம், சேலைகள் வைக்கப்பட்ட தட்டுகள் வகை வகையாய் காட்சியளித்தன.

சிறிது நேரத்தில் ஒரு அழகு மயில் வந்தது ... தேவகன்னியைப் போல் பூத்துக் குலுங்கும் பருவத்தின் கட்டழகு மிளிர-அன்ன நடை நடந்து வந்தாள் மணப்பெண்ணாக இந்திரா தேவி! ...

இதெல்லாம் நிஜமாகவே இந்திரா தேவிக்கு 'நிச்சயம்' நடைபெற்றதா என்று கேட்காதீர்கள்...விசாலாட்சி பிலிம்சாரின் "ஆயிரம் வாசல் இதயம்" என்ற படத்துக்காக இந்திராதேவி அலங்கரிக்கப்பட்ட மணப்பெண்ணாக வந்தாள்...

நிச்சயதாம்பூலத்திற்குப்பின்பு திருமணம் எப்படி நடந்தது என்பதை விரைவில் வெள்ளித் திரையில் காணலாம்... இப்படத்தின் திரைக்கதை வசனம்-டைரக்ஷன் பொறுப்புகளை ஸ்ரீதர் ஏற்றிருக்கிறார்.

பாடல்களை இன்றைய திரையுலக கவிஞர் திலகம் கண்ணதாசன் எழுதியிருக்கிறார்.

எஸ். எஸ். ஆர். தாக்கப்பட்டார்

சிவாஜியும் ராஜேந்திரனும் உயிருக்குயிரான நண்பர்கள். ஒரு நாள் ராஜேந்திரனை சில முரடர்கள் அடித்து ரத்தக்காயங்களை ஏற்படுத்திவிட்டு ஓடி விடுகிறார்கள்.

இச் செய்தியைக் கேள்விப்பட்ட சிவாஜி ஓடோடி வருகிறார் ராஜேந்திரனைப் பார்க்க...அங்கே "ராஜேந்திரன் ரத்தமிழந்து துடிக்கிறார்! அவருக்கு ரத்தம் தேவை" என்று டாக்டர்கள் சொன்னதும் - உடனே சிவாஜி "இதோ என் உடலில் இருந்து ரத்தம் எடுத்து என் நண்பனைக் காப்பாற்றுங்கள்" என்று உருக்கமாகப் பேசுகிறார்.

உள்ளத்தை நெகிழச் செய்யும் இக்காட்சி பி. எஸ். வி. பிக்சர்சாரின் ஆலயமணிக்காக படமாக்கப்பட்டது...

இப்படத்தில் சரோஜாதேவி, விஜயகுமாரி, எம். ஆர். ராதா, புஷ்பலதா, சந்திரா ஆகியோர் நடிக்கிறார்கள்.

ராஜம்மாவின் கோபம்

ஒரு பங்களாவின் மேல் மாடி!, அங்கே வயதான அம்மாள் கட்டிலில் படுத்திருக்கிறாள்.

"நீ...போ..! அவ வந்துடுவா" என்று எம். வி. ராஜம்மா சொல்கிறார்.

அதற்கு "நான் போக முடியாது" என்று ஜெமினி கணேசன் கூற.

இப்போ நீ போகப் போறியா இல்லையா" கடிந்து சொன்ன

இவ் வார்த்தைகளைக் கேட்டதும் ஜெமினி கணேசன் எழுந்து சென்ருர்...

கட்!கட்! என்ற சப்தமும் கேட்டது!

நல்லவேளை! உண்மையிலேயே எம். வி. ராஜம்மாவுக்கும் ஜெமினிகணேசனுக்கும் மன வருத்தம் என்று நினைத்துக் கொண்டிருந்த எங்களுக்கு டைரக்டர்யோகானந் 'கட்' என்று சொன்னதும் தான் உண்மை தெரிந்தது!

அலங்கார் பிக்சர்ஸின் "நெஞ்சில் நிறைந்தவள்" என்ற படத்திற்காக இந்தக் காட்சி படமாக்கப்பட்டது. கதை வசனத்தை மக்களன்பன் எழுதுகிருர். ஜெமினி கணேசன், சரோஜா தேவி முக்கிய பாகத்தில் நடிக்கிருர்கள்.

காஞ்சித் தலைவன்

காஞ்சித் தலைவன் என்றதும் காஞ்சீபுரத்தில் உள்ள தி. மு. க. தலைவர் அண்ணுதுரையின் பெயர்தானே நினைவுக்கு வருகிறது.

ஆனுல் இது அவரைப் பற்றிய கதை அல்ல! பல்லவ மன்னர்களில் சிறந்தவனுன நரசிம்ம பல்லவரின் வீர வரலாற்றைப் பற்றிய படமே காஞ்சித் தலைவன்!

படத்தின் கதை வசனத்தை மு. கருணுநிதி எழுதுகிருர். ஏ. காசிலிங்கம் டைரக்ட் செய்யும் இந்தப் படத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் காஞ்சித் தலைவனுக நடிக்கிருர்.

மற்றும் எஸ். எஸ். ராஜேந்திரன், எம். ஆர். ராதா, பானுமதி, விஜயகுமாரி ஆகியோர் நடிக்கிருர்கள்.

அழகு நிலா

ராகவன் புரொடக்ஷன்ஸ் 'அழகு நிலா' தீபாவளியன்று வெளி வருமென்று எதிர்பார்க்கப் படுகிறது. இப் படத்தின் வசனத்தை ஏ. எல். ராகவன் எழுதியுள்ளார். தயாரிப்பாளரான எஸ். ராகவனே டைரக்ட் செய்திருக்கிருர்.

இதில் கல்யாண் குமார், முத்துராமன், நாகையா, டி. கே. ராமச்சந்திரன், மாலினி, வசந்தி, இளங்கவி மதுரைத் தம்பி ஆகியோர் நடித்துள்ளனர்.

மருதகாசி எழுதியுள்ள பாடல்களுக்கு கே. வி. மகாதேவன் இசை அமைத்துள்ளார்.

மிஸ்டர் டெய்லர்

எலிசபெத் டெய்லர் தனது மூன்ருவது கணவரான மைக்டாடு என்பவருடன் மாஸ்கோவிற்கு விஜயம் செய்தாள். மற்ற நாடுகளைப் போல பத்திரிகை நிருபர்களோ சினிமா விசிறிகளோ இவர்களைச் சுற்றிலும் கூட்டமாகக் கூடவில்லை. ஒரே ஒரு ரசிகை மட்டும் எலிசபெத்திடம் "ஆட்டோகிராப்" கேட்டாள். எலிசபெத் சந்தோசத்தோடு ஆட்டோகிராப் போட்டுக்கொடுத்தாள். அருகிலிருந்த அவள் கணவன் "இந்த நடிகை யாரென்று தெரியுமா?" என்று கேட்டதற்கு அந்தப் பெண் "டியன்ஞடர்பின்" என்று சொன்னதைக் கேட்டதும் எல்லோரும் நகைத்து விட்டனர். உலகத்தின் எந்த மூலைக்குச் சென்ருலும் எலிசபெத் டெய்லரைத் தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள். ஆனுல் சோவியத் நாட்டிலுள்ள மக்களுக்கோ சினிமா நடிகைகளைப் பற்றி அவ்வளவாகத் தெரிந்து கொள்வ

தில்லை. எலிசபெத் டெய்லரும் இதே கருத்தைத்தான் கூறியிருக்கிறார்.

"நாங்கள் சுற்றுப் பிரயாணத் திட்டத்தில் மாஸ்கோவைச் சேர்த்துக் கொண்டோம். இங்குதான் என் கணவரை என் மூலமாக இல்லாமல் நேரிடையாக தெரிந்து கொண்டார்கள். வேறு எங்கு சென்றாலும் அவரை எல்லோரும் "மிஸ்டர் எலிசபெத் டெய்லர்" என்றுதானே கூறுவார்கள் என்றாள்.

அறிஞர் அண்ணா

வசன நடையிலே — அடுக்கு மொழிகளை அமைத்து புதிய பாதையை வகுத்துத் தந்தவர் அறிஞர் அண்ணா.

அவர் எழுதிய படங்களில் புதுமைக் கருத்துக்கள் காணப்படும். கலை உலகத்தைப் பொறுத்தவரை — அறிஞர் அண்ணா நடிகராக — எழுத்தாளராக விளங்கியவர். சந்திரோதயம் நாடகத்திலே அண்ணாவின் நடிப்பைப் பார்த்தவர்கள் அவர் ஒரு தலை சிறந்த கலைஞர் என்பதை மறுக்க மாட்டார்கள்.

லட்சக்கணக்கான இளைஞர்களால் ஒருமுகமாக தென்னகத்தின் முடிசூடா மன்னன் — காஞ்சித் தலைவன் என்று வாழ்த்தப்பட்டவர்.

அவருடைய 54-வது பிறந்த நாள் விழா செப்டம்பர் மாதம் 14-ந்தேதி — வேலூர் மத்திய சிறையிலே கொண்டாடப்பட்டது.

அறிஞர் அண்ணா வேலூரில் மறியலில் தலைமை தாங்கினார். அதற்காக அரசாங்கம் அவருக்கு பத்து வாரம் சிறை தண்டனை அளித்ததை அனைவரும் அறிவார்கள்.

கலைஞர் கருணாநிதி

திரைப்பட உலகத்தில் இளங்கோவன் அவர்களை அடுத்து, ரசிகர்களால் பாராட்டப்பட்டவர் கலைஞர் கருணாநிதி!

கலைஞர் கருணாநிதி வசனம் எழுதியிருக்கிறார் என்பதற்காகவே மக்கள் விரும்பி — படங்களைப் பார்க்கக்கூடிய அளவுக்கு மக்கள் உள்ளங்களில் தனக்கென தனி இடம் பிடித்துக் கொண்டார் கலைஞர்!

பராசக்தி, மனோகரா, போன்ற படங்கள் தமிழ் நாட்டில் நூற்றுக் கணக்கான நாட்கள் ஓடியிருக்கின்றன என்றால் அதன் பெருமை கருணாநிதியையே சாரும்!

அத்தகைய புகழ் வாய்ந்த வசன எழுத்தாளரும் — வன்மை மிக்க பேச்சாளரும் — தி. மு. கவின் பொருளாளருமான கருணாநிதி — கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற விலைவாசிப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றது நினைவிருக்கலாம். "காஞ்சித் தலைவன்" படத்திற்கு வசனமெழுதி விரைவில் வெளியிட முடிவு செய்துள்ளார்.

குடும்பத்தலைவன்

நாடோடி மன்னனாக நாடெல்லாம் வெற்றி முழக்கம் செய்த புரட்சி நடிகர் அவர்கள் குடும்பத்தின் உறவை விளக்கும் தாய்க்குப் பின் தாரம், தாயைக்காத்த தனயன், தாய்சொல்லைத் தட்டாதே போன்ற படங்களில் மிகச் சிறப்பாக — பாராட்டுக்கு உகந்த வகையில் நடித்து பாச உணர்வை வளர்த்து இன்று குடும்பத்தலைவனாக மாறி விட்டார்.

அவர் திரைப்பட உலகில் அடியெடுத்து வைத்து போதிய வருவாய்பெற ஆரம்பித்த நாள் முதலாக இன்றுவரை மக்களுக்காக — கலைஞர்களுக்காக செய்துள்ள சேவைகள் நம் நெஞ்சிருக்கும் வரை நினைவிலிருக்கும். இந்த சினிமா மலரில் சிறப்பாக மிகைப்படுத்திபாராட்டவேண்டும் என்பதற்காக அவரை நாம் வாழ்த்தவில்லை!

கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் — காலஞ்சென்ற பின்பு அவரைப் போலவே அவரின் வாரிசாகவே ஒருவர் இருக்கிறார் என்றால் அது புரட்சி நடிகர் எம். ஜி யாராகத்தான் இருக்க முடியும். இதை நாம் சொல்லவில்லை! நாட்டிலே அவரிடம் உதவி பெற்று வளர்ந்தவர்கள் கூறுகிறார்கள்!

குறிப்பாக, சமுதாயத்தின் 'அச்சாணிகள்' எனத்திகழும் பாட்டாளிகள் வர்க்கத்தினருக்கு அவர் செய்த உதவிகள் பல. கொதிக்கின்ற வெயிலிலே வண்டியிழுத்து வயிறுபிழைக்கும் தொழிலாளர்களுக்குப் "பாத அணியும்" கொட்டுகின்ற மழையிலே நடுக்கும் குளிரிலே அவதிப்பட்ட ரிக்ஷா தொழிலாளர்களுக்கு "மழைக் கோட்டு"களும் தந்துதவினார்.

இது மட்டுமல்லாமல் ஏழைகள் 50000 பேருக்கு சமீபத்தில் உணவளித்த நிகழ்ச்சியும் நம் நினைவிற்கு வருகிறது. அவர் எவர் பிறந்த நாளை முன்னிட்டுச் செய்தாலும் — அல்லது வேறு எந்த விதமான எண்ணங்களில் இப்படிப்பட்ட உதவிகளைச் செய்திருந்தாலும் பொதுவாக ஏழைகளும் பாட்டாளிகளும் தங்களது இதயங்களில் அவரை மனமார வாழ்த்துகின்றனர்!

நாமும் அவர் இத்தோடு நின்றுவிடாமல் மேலும் மேலும் சேவை செய்யக் கேட்டுக் கொண்டு "குடும்பத்தலைவன்" எம். ஜி. ஆர். வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறோம்!

திரை மன்னன்

பராசக்தியின்மூலம்முன்னுக்கு வர வேண்டிய சிறந்த நடிகர் என்று ரசிகர்கள் கருதும் அளவுக்கு நடித்த சிவாஜி கணேசன் தமிழ்நாட்டின் கலைஉலகப் பிரதமராக விளங்கும்படி பல திரைப்படங்களில் ஒளி வீசினார்.

பல மாவட்டங்களின் பேச்சு முறைகளையும், பலவித மனிதர்களைப் போலவும் பேசி நடித்துப் புகழ்பெற்று விட்டார்... நடிப்பு என்ற கலையின் எல்லையிலே நின்று கொண்டு உலகின் எல்லா மக்களும் ஒரு முகமாக சிறந்த நடிகர் என்று பாராட்டுமளவுக்கு வளர்ந்திருக்கிறார் என்றால் இந்த தமிழ் நாட்டின் — தமிழ்க்கலையின் பெருமையை உலகுக்குப் பறைசாற்றும் கலைத்தூதுவன் என்றே அவரை அழைக்கலாம்.

தமிழரின் புகழ், வாணிபம் வீரம், சிற்பம் இன்னும் பிற கலைகள் கடல் கடந்த நாடுகளில் சிறந்து விளங்கியதாக சரித்திரத்திலே நாம் காண்கிறோம்.

ஆனால் ஏட்டிலே கண்ட அவைகளின் சிறப்பினை மேலும் ஒருபடி உயர்த்துமளவுக்கு தமிழகத்தின் தவ நடிகர், நடிகர் திலகம் சிவாஜி அவர்களின் — இவ்வாண்டு உலக சுற்றுப் பயணம் பலனளித்திருக்கிறது.

அவர் சென்றவிடமெல்லாம் மக்கள் — கலைஞர் அனைவருமே ஒருமித்தகுரலில் "திரைமன்னன் வாழ்க" என்று வாழ்த்தினார்கள்.

குடும்பத்தலைவன் எம். ஜி. ஆரைப் போலவே இவரும் மக்களுக்காகப் பல அரிய நன்மைகளைச் செய்துள்ளார் என்பதை எவரும் மறுக்கவே முடியாது.

தமிழ்க் கலையின் சிறப்பினை வளர்ப்பதற்கும் — தமிழர்களின் கலைத்திறனைப் பிரதிபலிக்கும் ஒரு பிம்பமாகவும் உலகசுற்றுப் பயணத்தை மேற்கொண்டு வெற்றிகரமாக முடித்து தாயகம் திரும்பியுள்ள நடிகர் திலகம் — அவர்களை, நாமும் "திரை மன்னன்" சிவாஜி வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறோம்.

வீரத்தின் தலைவனாக சரித்திரத்தில் இடம் பெற்றுள்ள சிவாஜியைப்போல இன்றைய திரையுலகின் தலைவராக விளங்கும் திரு. கணேசன் அவர்களை "திரை மன்னன்" சிவாஜி என அழைத்துப் பெருமைப் படுகிறோம்.

'திரைமன்னன்' சிவாஜி வாழ்க!

தலைவர்கள் பேச்சில்

1 வெடி குண்டு: தீபாவளி வெடி குண்டுகளில் பல புஸ்வாணமாவதுண்டு. பொதுவாக... இது நேரங் கழித்தே வெடிக்கும். ஆனால் சத்தம் காதைப் பிளக்கும். மிகவும் ஆபத்தானது.

2 பாம்புவெடி: பாம்பு மத்தாப்பு பயங்கர சத்தம் போடாது. அதனைக் கண்டு எந்தக் குழந்தையும் பயப்படுவதில்லை. பெயரில் தான் "பாம்பு" என்ற வார்த்தை சேர்க்கப்பட்டிருக்கிறது... ஆனால்... சிலர் "இதன் பெயரை மட்டுமே கேட்டுவிட்டு பயங்கரமானது" என்று எண்ணுவார்கள்.

3 மூங்கில் வெடி: வலிவுள்ளவரை தான் இது வெடிக்கும்... முடிவில் பயனின்றி நொறுங்கிப் போகும். இதன் வேகத்தை தடுப்பது ஆபத்தானதாகும்.. தானே நொறுங்கிப் போகட்டுமே!

4 ராக்கெட் வெடி: இது ஒன்றும் புதிய வெடி அல்ல! தமிழ் நாட்டில் பலர் வெடித்து முடிந்ததுதான்... என்றாலும் புதிய கலர்களில் வெளியிடப் பட்டிருக்கிறது.

5 சங்கு சக்கரம்: இதைப் பொருத்தி வைத்தால் ஒரு இடத்தில் நிலையாக இருக்காது... இடம் மாறிக் கொண்டே இருக்கும். வேகத்திற்குத் தக்க நிறத்தையும் மாற்றிக்கொண்டு ஒளிவீசும்.

6 புஸ்வாணம்; பார்ப்பதற்குப் பயங்கர வெடிபோல் இருக்கும்... விசயம் இருக்காது. விதவிதமான கலர் களில் தயார் செய்யப்பட்டிருக்கும் ஆனால் தீயை வைத்தாலோ தீர்ந்தது! மருந்து அத்தனையும் சிறிது நேரத்தில் புஷ்....ஷ்.... என்ற சப்தத்தோடு ஒழிந்துவிடும்.

7 சீனிவெடி: இது பல சேர்ந்த ஒரு கூட்டுவெடி. வெடிக்கும் போது குடு ..குட்...டு...டுப்...டபீ...படார்... பட். .குட்.. குடு...குடு... என்று வேடிக்கையான சத்தமிடும் இதனையும் சிறுவர்கள் விரும்புவார்கள்...

786

அனைவருக்கும் எங்கள் தீபாவளி வாழ்த்துக்கள்!

டீலக்ஸ்
ஸ்டார் ஸ்பெஷல் புகையிலை

உரிமையாளர்கள் :-

மீ. ந. அ. செய்யது இப்ராம்ஸா அன் சன்ஸ்

தபால் பெட்டி எண். 20

புதுக்கோட்டை :: திருச்சி மாவட்டம்

எழிலரசி எலிசபெத் டெயிலர்

திரையுலகிலே ஒரு நடிகைக்கு நட்சத்திரப் பதவி கிட்டுவது அவ்வளவு எளிதல்ல. நடிப்பில் ஆர்வத்தோடு ஸ்டுடியோவிற்குள் நுழையும் ஒரு பெண் சாதாரணமாக பல இக்கட்டான சோதனைகளைத் தாண்டிய பிறகு தான் திரையில் தோன்ற முடியும். கலியுக சுவர்க்கமாகக் கருதப்படும் ஹாலிவுட்டிலோ யாரும் கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குத் தடைகள் உள்ளன. அந்தத் தடைகளையெல்லாம் கடந்து நட்சத்திரப் பதவி அடைவதற்குள் அநேகர் கிழவிகளாகி விடுவார்கள். ஆனால் எலிசபெத் டெயிலருக்கு இந்தக் கஷ்டங்கள் ஒன்றும் ஏற்படவில்லை. அவள் பருவமடைவதற்கு முன்பாக நட்சத்திரமாகிவிட்டாள். ஏனெனில் அவள் பிறவியிலே பணக்காரி! அது மட்டுமல்ல அளவுக்கு மீறிய அதிர்ஷ்டக்காரி.

கூட்டத்தோடு கூட்டமாக நின்று கோரஸ் பாடாமல், உதவி டைரக்டர்களோடு உல்லாசப் பயணம்போகாமல், வண்ண விளக்குகளுக்கு மத்தியில் ஆடை அணிகளின்றிகாட்சிகொடுத்துகவர்ச்சியளித்து பட முதலாளிகளை மயக்காமல் நேராகத் திரையுலகில் நட்சத்திரமாக விளங்கினாள் எலிசபெத். அதற்குக் காரணம் அவளது இயற்கையழகு! பருவக் கவர்ச்சி!

மூன்று வயதாகும் போதே எலிசபெத் பிரிட்டிஷ் ராஜகுடும்பத்தினர் முன் நாட்டியமாடியிருக்கிறாள். நம் நாட்டிலும் வைஜயந்திமாலாவுக்கு இதே வயதாக இருக்கும்போது போப் பாண்டவர் முன்னால் நாட்டியமாடிய பெருமை உண்டு.

பதிமூன்று வயதாகும் போது எலிசபெத்துக்கு வெள்ளை மாளிகையிலே விருந்தளிக்கப்பட்டது.

பதினான்காம் வயதிலே அவளுக்குச் சொந்தமாக 'போர்டு'கள் இருந்தது. பதினாறும் வயதில் 'கெடிலாக்' காருக்கு அதிபதியானாள். அந்த வயதிலேயே இங்கிலாந்து ராணியைச் சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்தது. வயது பதினேழிலே புகழ்பெற்ற நடிகர் ராபர்ட்டெய்லருடன் இணையாக நடிக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. இப்படியாக மளமளவென்று புகழேணியில் குறுகிய காலத்தில் முன்னணிக்கு வந்த சினிமா நட்சத்திரம் உலகத்திலே வேறு யாரும் கிடையாது.

எலிசபெத்துக்கு இருபத்தொன்பது வயது முடிவதற்குள்

சுமார் இருபத்தொன்பது படங்களில் நடித்திருக்கிறாள்.

நான்கு கணவன்களை மணந்திருக்கிறாள். முதல் கணவன் பிரபல ஹில்டன் ஹோட்டல்களின் அதிபர் நிக்கி ஹில்டன். இரண்டாவது கணவன் மைக்கேல் வில்டிங். மைக்டாடு என்ற கோடீஸ்வரரை மூன்றாவது மணந்துகொண்டாள். இவளோடு குடும்ப நண்பராக நெருங்கிப் பழகி வந்த எடி பிஷர் என்பவர், மைக்டாடு விமான விபத்தில் இறந்த பிறகு எலிசபெத்தின் நான்காவது கணவரானார்.

மர்லின் மன்ரோவைப் போலில்லாமல் எலிசபெத் தன்னுடைய மணவாழ்க்கை இன்பகரமாகவே இருந்தது என்று கூறினாள்.

இது எந்த அளவுக்கு உண்மை என்பது நமக்குத் தெரியாது. ஆனால் மர்லின் மன்ரோவைப் போல நிம்மதிக்காக, இன்பத்திற்காக தூக்க மாத்திரைகளைத் துணையென்று நம்பவில்லை. எனவே நிச்சயமாக எலிசபெத் டெய்லர் தற்கொலை செய்து கொள்ளமாட்டாரென்று நம்பலாம்.

நீடித்த உழைப்பிற்கு

நேவி பேனாக்கள்

(Regd. No. 182234)

★

பவுண்டன் பேனாக்களுக்கு சிறந்தது

நேவி இங்க்

நேவி பவுண்டன் பென் கம்பெனி,
46, கீழவெளி வீதி, மதுரை.

N. B:- மின்சாரத்தினால் பேனாக்களில் தங்கள் பெயரை எழுதித் தரக்கூடும்.

மயக்கு நட்சத்திரம்

மர்லின் மன்ரோ!

காந்தச்சிலை

கவர்ச்சிக் கட்டழகி மர்லின் மன்ரோ ஒரு சமயம் கோடை காலத்தைக் குதூகலமாகக் கழிப்பதற்காக தனது மூன்ருவது கணவன் ஆர்தர் மில்லருடன் அவர்களது சொந்த எஸ்டேட்டிலிருக்கும் மாளிகைக்குப் போயிருந்தாள். ராக்ஸ்பரியிலுள்ள அந்த அழகு மாளிகை மர்லின் மன்ரோ விருப்பப்படியே அந்த ஆண்டு அலங்காரம் செய்யப் பட்டதாம். மாளிகை பூராவும் தூய வெள்ளை வர்ணம் பூசப்பட்டது. சுவர், தரை, தொங்கவிடப்பட்ட படுதாக்கள் எல்லாம் வெள்ளை நிறம். தரையில் விரிக்கப்பட்டிருந்த கம்பளமும் வெள்ளை நிறத்தில் மின்னியது. அங்கிருந்த மேஜை நாற்காலி முதலிய மரச்சாமான்கள் அனைத்தும் வெள்ளை நிறத்திலே காட்சியளித்தன. கூடத்தின் மத்தியில் இருந்த பியானோவும் வெண்ணிறம் தான். இத்தனை அலங்காரங்களுக்கு மத்தியில் ஒரு பெரிய ஹால் நடுவில் கருப்பு நிறமுள்ள நிர்வாணச் சிலையொன்று நிறுத்தப்பட்டிருந்தது. தூய வெண்மைக்கு மத்தியில் கரு நிறச்சிலை அமைந்திருப்பதின் நோக்கம் என்னவென்று ஒரு பத்திரிகை நிருபர் கேட்டாராம்.

"அங்கே சிலை! இங்கே இதோ நானிருக்கிறேன்" என்று கூறிக் கொண்டே மர்லின் மன்ரோ அந்தச் சிலை நிற்பது போல அபிநயம் பிடித்துக் காட்டினுராம். பத்திரிகை நிருபர் முகத்தில் ஈயாடவில்லை. ஏன்? சிலையின் அமைப்பும் கட்டழகியின் அபிநயமும் ஒன்று போலிருந்தது. அப்படியாஞல் சிற்பி சிலை செய்யும் போது ஆடையில்லாமல் அபிநயம் பிடித்து நின்றது யார் என்ற சந்தேகம் பிறந்தது. அது யாராகயிருக்க முடியும் மன்ரோவைத் தவிர!

இளைஞர் இதயம்

யார் இந்த மர்லின் மன்ரோ?

இந்தக் கேள்விக்கு விடை கண்டு பிடிக்க, மர்லின்மன்ரோவின் வாழ்க்கையை அலசி ஆராய்ந்த பிரபல எழுத்தாளர் மௌரி ஜோதவ்வுக்கு ஆறு ஆண்டுகள் பிடித்தன.

"மர்லின் மன்ரோ கவர்ச்சி ததும்பும் கட்டழகு பாவை. பருவ எழில் கொஞ்சும் உருவம் படைத்த அவளைப் பராமரிக்கத் தந்தை இல்லை. தன்னிச்சை

யாகக்காதலிக்க அவளுக்குஏராளமான வாய்ப்புக்கள் இருந்தன. அவளே தன் உணர்ச்சிகளையெல்லாம் அடக்கியாளும் வலிமையுள்ள ஒரு ஆண் மகனுக்காகப் பெரிதும் ஏங்கி நின்றாள். ஆனால் அவள் கரம் பற்றியவர்களெல்லாம் அவள் விருப்பத்திற்கு விடைகாண முடியாமல் அவளது வெறுப்பையே தேடிக்கொண்டனர்.''

இதுதான் 'மெளரி' தரும் ரத்னச் சுருக்கமான வரலாறு.

அமெரிக்காவின் இளைஞர் இதயமே மர்லின் மன்றோவின் அழகைக் கண்டு ரசிக்க ஏங்கிக் கிடந்தது. ஹாலிவுட் நடிகையருள் வேறு யாரும் இளைஞரது உணர்ச்சியை இந்த அளவுக்குத் தூண்டியதில்லை. ஆனால் ஹாலிவுட் படவுலகம் எத்தனையோ கவர்ச்சிப் பாவையர்களைக் கண்டிருக்கிறது. அமெரிக்கத் திரையிலே ஆயிரமாயிரம் கட்டழகுக் கன்னியர்கள் தோன்றியிருக்கிறார்கள். நார்மா ஷியரர், கிராட்டா கார்போ, ஜிஞ்சர் ரோஸர்ஸ், பெட்டி கிராபிள், ரிட்டா ஹேவொர்த், ஜேன் ரஸ்ஸல் எலிசபெத் டெய்லர்...... இந்த வரிசையிலே மன்றோவுக்குக் கடைசி இடம்தான். ஹாலிவுட்டில் மற்ற நடிகைகளுக்கு இருந்த மதிப்பு இவளுக்கு அளிக்கப் படவில்லை. ஆனால் வெளி உலகத்திலே அதிலும் குறிப்பாக இளைஞருலகத்திலே மர்லின் மன்றோவுக்கு இருந்த அளவுக்கு இதுவரைக்கும் அவ்வளவு மதிப்பு இருந்ததில்லை. இனிமேலும் ஏற்படுமா என்பது கூடச் சந்தேகம்தான்.

நயாகரா

மன்றோவின் திரைப்படங்கள் ஒவ்வொன்றும் பருவக்கவர்ச்சிக்கும் ஒரு புதிய பாடம்! கவர்ச்சிக் காட்சிகளிலே ஒரு தனி முத்திரை இருக்கும். அவள் 'நயாகரா' திரைப்படத்திலே நடித்த காட்சிகள் பூராவும் திரையிட சென்ஸார் போர்டார் அனுமதிக்கவில்லையாம். அனுமதித்திருந்தால் ஒரு வேளை ஆயிரமாயிரம் இளைஞர்கள் அந்தக் கவர்ச்சியிலே மதிமயங்கி பைத்தியக்காரவிடுதிக்கே போயிருப்பார்கள் என்று பிரபல டைரக்டர் வில்லியம் வைலர் என்பவரே கூறியிருக்கிறார்.

நயாகராவிலே மன்றோ நடந்துசெல்லும் காட்சிகள் என்றென்றும் மனதிலே பசுமையாக நிலைத்து நிற்கும். அவளது

ஒவ்வொரு அங்க அசைவிலும் ஒரு புதுமையான துடிப்பை உணருகிறோம். ஆனால் இவ்வளவு கவர்ச்சியூட்டும் எழில் நடிகைக்கு ஏற்ற வாழ்க்கை அமையவில்லை. பணம், புகழ், பெருமை, செல்வாக்கு எல்லாம் இருந்தன. ஆனால் நிம்மதி என்பது மருந்துக்குயில்லை இன்பம் எங்கே எங்கே என்று தேடியலைந்தாள். இறுதியில் மரணம்தான் அவளுக்கு நிம்மதியைத் தர முடிந்தது.

தூக்க மாத்திரை

இளைஞரின் இதயங் கவர்ந்த 'ஹாலிவுட் எல்லோரா' ஓவியம் மர்லின் மன்ரோ ஆகஸ்ட் 5-ம் நாள் தற்கொலை செய்து கொண்டாள். அவள் மரணம் பலருக்குப் புதிராக இருக்கிறது. அவளை இதயத்திலே வைத்துப் போற்றிப் புகழ்பாடிய இளைஞர் உலகுக்கு பெருத்த அதிர்ச்சியாக இருக்கிறது. மன்ரோ மறைந்த செய்தி கேட்டு மனம் பொறுக்கமுடியாமல் உயிரை மாய்த்துக்கொண்ட மானசீகக் காதலர்கள் பற்றிய செய்திகள் அன்றாடம் செய்திப் பத்திரிக்கையில் வந்துகொண்டிருக்கின்றன. உலகில் சாதாரணமாக எந்த நடிகைக்கும் இந்த அளவு சினிமா விசிறிகள் இருந்ததில்லை காரணம் பருவக் கவர்ச்சிக் காட்சிகளிலே இளைஞர்கள் உள்ளத்தை மன்ரோவின் மோகன நடிப்புபெருமளவுக்குக் கவர்ந்துவிட்டது.

ரசிகர்கள் பாவம். மன்ரோ திரையிலே தோன்றும் காட்சிகளைப்பார்த்து ரசித்து அவளையே மானசீகமாகக் காதலிப்பவர்கள் தானே! நிஜவாழ்க்கையிலே அவள் எத்தனை எத்தனை பயங்கரமான காட்டாறுகளைத் தாண்டி படவுலகிலே இந்த நிலையை அடைந்தாள் என்பது பற்றி அவர்களுக்குத் தெரியாது. அது பற்றிய கவலையும் அவர்களுக்கு இல்லை. ஆனால் மர்லின் மன்ரோ இயற்கையிலே அழகும் துடிப்பும், கண்களிலே கனிவும் காந்தமும், முகத்திலே வசீகரங் கொழிக்கும் கவர்ச்சியும் நிறைந்த காந்தப் பாவையாக இருந்த காரணத்தால் நாமக் கழனி வழியாக, சொல்லொணாத இன்னல்களை அனுபவித்து அந்தப் பரீட்சையிலெல்லாம் தேறிய பிறகே ஹாலிவுட் அழகியாக வர முடிந்தது

இளம்பிராயத்திலே அவளுக்கு ஏற்பட்ட இன்னல்கள் கொஞ்ச நஞ்ச மல்ல! தந்தை குடிகாரன்; காமுகன், தாய் புத்தி சுவாதீனமிழந்தவள். தகப்பனும் கார்

அனைவரும் விரும்புவது....
N.V.T.S.CO. T.M. No. 204913 DINDIGUL
SHAMSIA
ஷம்ஷியா
வாசனைப்பாக்கு
MFRS:- N.V.T.S.CO., P.B.No.4, திண்டுக்கல்

விபத்திலே இறந்து விடுகிறான். இளம் பிராயத்திலே நார்மா ஜீன் மார்ட்டென்சன் என்னும் நாமகரணம் சூட்டப்பட்ட இந்த அழகுச் சிறுமி அனாதையாக பலரது இல்லங்களிலே வளர்ப்புப் பிள்ளையாக வளர்ந்து வந்தாள். அவள் உடுத்துவதற்கு நல்ல துணிகள் கிடையாது. இருக்குமிடத்திற்கேற்ற இயல்பு, அதற்கேற்ற பண்பு, விதவிதமான பழக்க வழக்கங்கள்! இந்த நிலையிலே அழகு, இளமை, கவர்ச்சி இம் மூன்றைத் தவிர வேறெந்த மூலதனமில்லாத ஒருபருவப்பெண்ணின் வாழ்க்கை எப்படி இருந்திருக்க முடியும்? பருவத்தைப் பலியிட்டு அவள் நட்சத்திரப் பதவி அடைவதற்குள் அவளுக்கு வாழ்வு கசந்து விட்டது. இரவு, தனிமை, விருந்து நடனம் என்ற வார்த்தைகளைக் கேட்டாலே நார்மாவின் உடல் நடுங்கியது. ஏனென்றால் இரவு நேரத்தில் காமனுக்கு வேலை அதிகம்.

நாகரிகக் கலை வகுத்த லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்திலே நடனங்களுக்கும் விருந்துக்கும் பஞ்சமேயில்லை. காமரசம் சொட்டச் சொட்ட ஆடவரும் அழகு வனிதையரும் ஆடிப்பாடி மகிழ்ந்து கிடக்கும் அரங்குகள் ஏராளமாக இருந்தன.

இரவு வந்து விட்டால் குடிப்பதும் குடித்துவிட்டு நடனமாடுவதும் தவிர வேறு வழியில்லை. எத்தனை ஆண்டுகள் இந்த நரக வாழ்க்கை வாழமுடியும்! அநேக நாட்கள் தூக்கமே வராமல் துன்புற்றாள். முடிவு! தூக்க மாத்திரைகள் அவள் படுக்கையறைக்குள் புகுந்தன. எந்த தூக்க மாத்திரையில் தனக்கு நிம்மதி கிடைக்கும் என்று நம்பினாளோ அதே மாத்திரைகளே அவளுக்கு பரிபூரண நிம்மதியைத் தந்து விட்டது. ஹாலிவுட்டின் ஏட்டிலே ஒரு அழகிய இதழ் உதிர்ந்துவிட்டது.

மூட்டைப்பூச்சிகளை ஒழிக்க

கில்பக்



(ஆயில்)

உத்திரவாதமுள்ளது.

மூட்டைப் பூச்சிகளை
ஒரே தடவையில் ஒழித்து
மீண்டும் நீண்டகாலம் வராமல்
செய்வதில் மக்களின் நன் மதிப்பை
பெற்றது.

KILBUG MFG Co., MADURAI-9.

காத்திருந்த கணவன்

"சின்ன வயதிலேயே எவ்வளவு பெரிய கெட்டிக்காரராயிருக்கிருர் இந்த டைரக்டர்"

'இதில் என்னடி இருக்கிறது அவர் ரொம்ப படித்தவர். படப்பிடிப்பு சம்பந்தமாக ஆலிவுட் சென்று வந்தவராயிற்றே.'

"ஆமாம் ஹீரோயின் மஞ்சுளாவோடு பழகுவதைப்பார்த்தால்!"

"பெரிய இடத்துப் பெண். நமக்கு எதற்கு இந்த வம்பெல்லாம். கலை, கலை என்றெல்லாம் பிதற்றுகிருள்."

'என்ன இருந்தாலும் மஞ்சுளா அதிர்ஷ்டக்காரி! குறுகிய காலத்தில் புகழின் உச்சியில் ஏறி விட்டாள்! தற்சமயம் புக் ஆகியிருக்கும் படத்தில் பதிபக்தி, பத்தினி வேடம், மாவரைக்க, துணி துவைக்க என்று இவ்வாருக பல அருமையான காட்சிகளை எல்லாம் இந்த டைரக்டர் இவளுக்காகவே கொடுத்திருக்கிருர்.'

"ஆனல் ஒன்றையாவது இவளுக்கு நடிக்க வருகிறதா? என்று ஒருநாள், டைரக்டர் தாடி வேடிக்கையாக சொல்லிக்காட்டுவது போல் குத்திக் காட்டி விட்டாரே!

"ஏழைக் குடும்பத்து பெண் செய்கிற வேலை எல்லாம் நிசமாக கற்றுக்கொண்டால்தான் நீ இந்தப் படத்தில் நல்ல பெயர் எடுக்க முடியும் என்று டைரக்டர் தாடி மஞ்சுளாவிடம் அடிக்கடி சொல்லுவார்."

இந்த மாதிரியாக "சரோஜினி பட நிலையத்தில்" ஒருநாள் குட்டி நடிகைகள் பேசிக்கொண்டார்கள்.

ஒருவாரம் கழிந்தது. டைரக்டர் தாடியின் பிளிமத் கார் மஞ்சுளாவின் பங்களா முன் நின்றது. அதிலிருந்து டைரக்டர் தாடி மஞ்சுளாவின் பங்களாவில் கால் எடுத்து வைக்கவும், அங்குள்ள அல்சேசியன் குரைத்து அடங்கும் ஒலியைக் கேட்டு மஞ்சுளாவின் செகரட்டரி விரைந்து வந்து "அலோ டைரக்டர் சாரா. வாருங்கள், வாருங்கள்" என்று புன்னகையோடு வரவேற்ருள்!

அதற்கு டைரக்டர் மெல்ல சிரித்தவாறு "என்ன செகரட்டரி அம்மா! மஞ்சுளா ரெஸ்டில்

எழுதியவர்:
கோ. ந. கிருஷ்ணன்

இருக்கிறாளா?'' என்று கேட்டார்.

'ரெஸ்டாவது, ஒண்ணுவது நீங்கள் எங்கே ரெஸ்ட் எடுக்க விடுறீங்க!''

"ஏன் வேறு ஏதாவது கால்ஷிட் போயிருக்கிறார்களா?''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. உங்கள் படத்தை முடித்துக் கொடுக்காமல் வேறு யாருக்கும் கால்ஷிட் கொடுக்க முடியாது என்று கண்டிப்பாக பல பட முதலாளிகளிடம் கூறிவிட்டார்கள்.''

''பின் மஞ்சுளாவை எங்கே?''

அதற்கு செகரட்டரி அம்மாள் டைக்டரிடம் நெருங்கி வந்து மெதுவாக, ''ஏன்? அந்தக் கதையைக் கேட்கிறீர்கள். யாரோ ஒரு பிள்ளைக்குட்டிக்காரத் தரித்திரத்தை அழைத்து வரச்சொல்லி அய்யோ பின் கட்டுக்கு சென்று பாருங்கள். எல்லாம் உங்களுக்குப்புரியும். ஒரு சினிமா ஸ்டார் வீடா என்று அசந்து போவீர்கள்!'' என்றாள்.

''என்னம்மா புதிர் போடுகிறீர்கள். விஷயத்தை சொல்லுங்



கள்.'' என்றார் டைரக்டர் பொறுமையிழந்தவராக.

"அந்தப் பிள்ளைக்குட்டிக்காரத் தரித்திரம் துணி துவைக்கச் சொல்லி மாவிடிக்கச் செய்து, சமையல் பண்ணவைத்து மஞ்சுளா அம்மாவை அது பிழிந்து எடுத்துக் கொண்டிருக்கிறது. பங்களாவுக்குள் நுழைந்தால் அங்குதான் வேலை.''

சற்று அமைதியாக மகிழ்ச்சியோடு தனக்குள் "ரோசக்காரி! மஞ்சுளா... இனி நமக்கு வெற்றி தான்!''

வெளிப்படையாக, "நான் இப்போது அங்கே போனால்... என்று டைரக்டர் இழுத்தார்...''

"நீங்கள் வந்தால் உங்களை மட்டும் அங்கு அனுப்பும்படி மஞ்சுளாவின் உத்தரவு!'' என்று பேசியவாறு டைரக்டரும், செகரட்டரியும் பின்கட்டுக்கு சென்றார்கள்.

காலடி ஓசை. கிணற்றிலிருந்து நீரிறைக்கும் சப்தம் தேய்ந்து அடங்கும் நீரின் சலசலப்பு.

"ஹலோ மஞ்சுளா!'' என்று டைரக்டர் கூவினார்.

"டைரக்டர் தாடியா...வாருங்கள்!! என்று மகிழ்வுடன் வரவேற்றாள் மஞ்சுளா''.

மஞ்சுளா எக்ஸ்யூஸ் மீ... உன்னை மிகவும் தொல்லைக்கு உள்ளாக்கி விட்டேன். இல்லையா?'' என்றார் டைரக்டர் வருத்தத்துடன்.

"நம் கதையில் வரும் கதாநாயகி காஞ்சனாவை விடவா நான் சிரமப்படுகிறேன்.''

"சரி, சரி உங்களுக்கு டிரெயினிங் கொடுக்கும் அந்த அம்மாவை எங்கே காணோம்? என்று டைரக்டர் கேட்டார்.

"இப்போது தான் அனுப்பினேன். உங்களை நிற்கவைத்தே பேசுகிறேனே. உங்களை உட்காரவைத்து பேசுவதற்கு மேசை நாற்காலி கூட இல்லை. இது ஏழையின் வீடு சார்... என்று கூறியவாறு அங்கு கிடந்த பாயை தட்டி விரித்து அமருங்கள் சார்'' என்று கூறி அவரின் முன்னால் ஒரு இலையையும் போட்டாள்.

என்ன இதெல்லாம்...'' என்றார் அவர்.

"வீடு தேடி வந்தவர்க்கு என்னால் இயன்றது''.

"என்ன மஞ்சுளா இதெல்லாம் எதற்கு''.

"கொஞ்சம் சாப்பிட்டுத்தான் பாருங்களேன்''. என்றவாறு அவருக்கு சாப்பாடு பரிமாறினாள்.

உணவை வாய் நிறைய சுவைத்தவாறு, "ஆகா பிரமாதம் இப்படி ஒரு ருசியை அறிந்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன'' என்றார்.

"என்ன ஐந்து வருடங்களா?'' மஞ்சுளா ஆச்சரியப்பட்டாள்.

"ஆம் மஞ்சுளா...நான் வீட்டை விட்டு இந்த சினிமா உலகுக்கு வந்து ஐந்து வருடங்கள் ஆகி விட்டன. என் அம்மாவின் கைப்பாகம் இப்படித்தான் இருக்கும்'' என்றார். ஆமாம் சமையல் யாருடையது?'' என்று வினவினார்.

"அசல் என்னுடைய சமையல் தான் என்றாள்'' அவள்.

"வெற்றி! வெற்றி!!'' என்று மகிழ்ச்சிக் குரலில் டைரக்டர் தாடி மஞ்சுளாவைப் பார்த்து அந்த வீட்டு வேலை சீனைத் தவிர மற்ற சீன்கள் எல்லாம் முடிந்து விட்டன. இதில் மட்டும் தான்

எனக்கு திருப்தி இல்லாமல் இருந்தது. இனி அதைப்பற்றி கவலை இல்லை''. என்றார்.

“மஞ்சுளா அப்போ நான் போய் வருகிறேன். நாளைக் காலையில் ஒன்பது மணிக்கெல்லாம் ஸ்டுடியோவுக்கு வந்துவிடு!'' என்று சொல்லியவாறு போய் விட்டார்.

தொலைவில் புடவையின் சரசரப்பு. “மஞ்சுளா, மஞ்சுளா'' என்று கூவிக்கொண்டு செகரட்டரி பிரேமா மஞ்சுளாவின் அறையில் நுழைந்தாள்.

“போக்கிரி, எத்தனை சொந்த மடி உனக்கு நான்'' என்றாள் மஞ்சுளா.

கம்மிய குரலில், “ஏன் என்னைத் தவிர இன்னொருத்தர் வந்து பேசுகிறார் என்று...''

‘ஏய் பிரேமா, நீ செகரட்டரி வேலை பார்க்கிறாயா! இல்லை துப்பு அறியும் வேலை பார்க்கிறாயா?''

“உங்களுக்கும் டைரக்டர் தாடிக்கும் விரைவில் கல்யாணம் நடக்கப் போகிறதென்று'' இழுத்தாள் பிரேமா.

“சீ வாயை மூடு நானாவது கல்யாணம் செய்து கொள்ளப் போவதாவது அந்தக் கட்டுப்பெட்டித்தனம் எல்லாம் எனக்குப் பிடிக்காது'' என்றாள் மஞ்சுளா.

“ஒரு வேளை உங்களை அவர் நினைத்து பாவம்...''

“ஏனம்மா, உங்களுக்கு அவரை கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்று எண்ணமில்லை!'' என்று அவளை மடக்கினாள் பிரேமா.

மேற்கண்ட படத்தை மஞ்சுளா ஒரே மாதத்தில் முடித்துக் கொடுத்து விட்டாள். அந்தப் படம் இப்போது மேனகா தியேட்டரில் 100 நாட்களுக்கு மேல் வெற்றி நடை போடுகிறது.

ஒரு நாள்--

டைரக்டர் தாடியும் நடிகை மஞ்சுளாவும் “நியூஸ் ரீல்'' ஓடிய பிறகு இருட்டில் அந்தக் கொட்டகையினுள் நுழைந்தார்கள்.

‘உங்கள் பாடு தேவலைசார் ஜனங்களுக்கு மத்தியில் இருந்து பார்த்தால் தான் அவர்களுக்கு எந்தக்கட்டம் பிடிக்கிறது. எது பிடிக்கவில்லை என்று தெரியும்'' என்றாள் மஞ்சுளா.

“அப்படி சொல்லாதே மஞ்சுளா. நீயும் கூட அவர்களது ரசனையை அறிந்து கொள்வது அவசியம்!''

படம் பார்க்க வந்தவர்களி



ரூ. 15 செலுத்தி

நியூடோன் ரேடியோ

மாதத்தவணையில் பெறலாம்.

விபரங்களுக்கு :-

மூன்று எட்டு (8) ந. பை ஸ்டாம்பு அனுப்பவும்

நியூடோன் ரேடியோ கம்பெனி,

(பெரிய விளக்குத்தூண் சமீபம்)

284, ராமநாதபுரம் ரோடு, மதுரை-9.

டையே இரண்டு ஆண் குரலில் பேச்சு.

"ஆகா இப்படி ஒருத்தி மனைவியாக வாய்த்து விட்டாள் எனக்கு உலகமே தூசி!" என்ருன் ஒருவன்.

"ஹிம் இதெல்லாம் வெறும் நடிப்புத்தானே?"

உண்மையாகவே ஒருவனை இந்த மஞ்சுளா கல்யாணம் பண்ணிக்கொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவாளா"? என்ருன் இன்னெருவன்.

"என்ன சினிமா வாழ்க்கை குடும்ப வாழ்க்கையை விட ஒரு இன்பமான வாழ்க்கை உண்டா உலகில். இதெல்லாம் இந்த மஞ்சுளாவுக்கு எங்கே தெரியப்போகிறது" என்ருன் முதலாமவன்.

இன்னெரு புறத்தில் இருந்து வேறு குரல்கள்:

"எத்தனை சோதனைகள் ஆகா அந்த இடத்தில் அவள் பேசியதை கேட்டாயா? பகட்டையும் படோடோபத்தையும் விரும்பி குடும்ப வாழ்க்கைக்கு பயப்படுகின்ற கோழையைவிட கணவன் ஒருவன் கைபிடித்து அவனுடைய கஷ்ட நஷ்டத்தில் பங்கு கொள்கிற தைரியசாலியே மேல்" இது ஒரு குரல்.

"அருமையடி அருமை! கழுதை வயதாகியும் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லும் ராங்கிகாரிகளுக்கு இது ஒரு சவுக்கடி" என்ருள் ஒருவள்.

திடீரென்று மஞ்சுளா டைரக்டர் தாடியைப் பார்த்து, "போகலாமா?" என்ருள்.

"என்ன! மஞ்சுளா ஏன். இன்னும் படம் முடியவில்லையே" என்ருர் டைரக்டர்.

"இல்லை சார். என்னைப் பொறுத்தவரையில் படம் முடிந்து விட்டது." நான் ஸ்டூடியோவிலேயே போடச்சொல்லி இன்னெரு நாள் பார்த்துக்கொள்கிறேன்." என்று வெளியே புறப்பட்டாள்.

"இரு மஞ்சுளா நானும் உன் கூட வருகிறேன்" என்று டைரக்டரும் அவளைப் பின் தொடர்ந்தார்.

இருவரும் காரில் அமைதியாகச் சென்று கொண்டு இருந்தார்கள். திடீரென்று மஞ்சுளா, "டைரக்டர் சார் இருக்கிற படத்தையெல்லாம் முடித்துக் கொடுத்து விட்டு இனிமேல் வரும் எந்த ஒப்பந்தத்தையும் ஒப்புக் கொள்வதில்லை என்று தீர்மானித்து விட்டேன்" என்ருள் மஞ்சுளா.

"மஞ்சுளா" என்று திடுக்கிட்டார் டைரக்டர்.

"ஆமாம் நான் விலகிக் கொள்ளப் போகிறேன்."

"என்ன காரணம்" என்ருர் டைரக்டர்.

"புருஷனும் மனைவியுமாக வாழும் அந்தப் பாக்கியம் எல்லோருக்கும் வராதா?" என்ருள்.

"என்ன உளறல்" என்ருர் டைரக்டர் தாடி.

"பகட்டையும் படோடோபத்தையும் விரும்பி குடும்ப வாழ்க்கைக்கு பயந்து நான் ஒதுங்கியவளா?" என்று மஞ்சுளா டைரக்டரை வினவினுள்.

"மஞ்சுளா" என்ருர்.

"தாடி இனியும் நான் கோழையல்ல. எனக்கும் அந்தப் பாக்கியம் வேண்டும். அதை நீங்கள் தான் எனக்குத் தரவேண்டும்" என்று மஞ்சுளா கூறினுள்.

சற்று அமைதிக்குப் பின்:—

"கட்டாயம் கொடுப்பேன் மஞ்சுளா அதற்காகத்தானே இத்தனை நாளும் நான் காத்திருந்தேன்!" என்ருர் டைரக்டர்.

FOR BEST SELECTION OF

Quality Calendars and
Advertisement Posters
For all Trades

Please Consult :

Grams : FINEPRINT Phone : 188

SREE AMBAL
OFFSET PRINTERS

Commercial Art Designess & Calendar Suppliers

POST BOX NO. 85 SIVAKASI (S. I.)



காதலித்தால் போதுமா!

அன்புள்ள ஆசிரியருக்கு,

வர வர இந்த ஆண்கள் ரொம்பக் கெட்டுப் போயிட்டாங்க! கொஞ்சம் கூட நம்ப முடியல்லே...

முதல் முதலா சந்திக்கறப்போ அப்படி இப் படின்னு அளந்து விடுருங்க! அப்புறம் கல்யாணப் பேச்சை எடுத்ததும் காலேவாரி விட்டிடுருங்களே! ஏன் ஸார் இப்படிப்பட்ட பயந்தாங்கொள்ளி காதலர்களைப் பத்தி சிறு கதைகள் வெளியிடுங் களேன்... செய்வீங்களா?

இப்படிக்கு
மா. மோகனசுந்தரி
மதுரை-1.

[ஆ. கு: காலம் மாறுவது உங்கள் கவனத்திற்கு வந்துவிட்டது போலும்!

வீடுவரை உறவு

கலேப்பொன்னி அண்ணு!... வணக்கம்.

அக்டோபர் இதழில் வெளிவந்த "மலர்ந்த இதயம்" என்னேக் கவர்ந்தது. அதிலேவரும் ரேவதி யைப் போல எனக்கு ஒருத்தி இருந்தாள்...

ஆனுல் என் மனேவியோ என்னே வெறுக்கிருள். மீராவைப்போல இல்லே என் மனேவி... ஊர் பூராவும் என்னேக் கேவலப்படுத்துகிருள். ஆகவே மீராவைப் போன்ற தியாக உள்ளம் படைத்த பெண்களேப் பற்றிய கதைகளே வெளியிடுவீர்களானுல் — பெண் ணுலகம் திருந்த வழி ஏற்படும்.

இப்படிக்கு,
ரகுநாதன்.
சென்னே-14

ஆ. கு: ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதியா, தோழரே!

குடும்பத் தலைவன்

கலைப்பொன்னி வாத்தியாரே... சலாம்!

நம்ப மாஸ்டர் லூஸ் ராஜாமணி அபாரம்!... ஏன் வாத்தியாரே எம் ஜி ஆர், ஆக்ட் பண்ணுன "குடும்பத் தலைவன்" பிக்சருக்கு விமர்சனமா செய்திருக்கே!...

ஏய்யா...... உன் பேனாவிலே இங்க் இல்லியா எழுதறதுக்கு!

கிடக்கட்டும்... அடுத்த படம் வருதே "விக்கிரமாதித்தன்" அதுக்காச்சும் நல்லா இழுது... இன்னா!

இப்படிக்கி,
எம். கபாலி,
மீர்சாபேட்டை

ஆ. கு: விக்கிரமாதித்தன் ரிலீஸாகிவிடும் என்று இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறீர்களா?

ஒலிபரப்புக!

அன்புள்ள ஆசிரியருக்கு,

வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் ரயில் வண்டி திடீரென்று நடுக்காட்டில் நின்று விடுகிறது. ஏனென்று ஒருவருக்கும் புரிவதில்லை. ஆளுக்கொன்று பேசுகிறார்கள். கடைசியில் வண்டி நின்றதற்குக் காரணம் என்னவென்று பார்த்தால் ரயில்வே லைனில் ஏதாவது ஒரு கழுதை அடிபட்டுக் கிடக்கும். இன்னொன்று. நடுநிசி நேரத்தில் ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருக்கும் பெயர்ப்பலகைகள் சரியாகத் தெரிவதில்லை. புதிதாக வேறொரு ஊரிலிருந்து வருபவர் அது என்ன ஸ்டேஷன் என்று கண்டு பிடிப்பதற்காகப்படும் திண்டாட்டம் சொல்லி முடியாது. அந்த வண்டியில் இருப்பவர்களுக்கும் தெரியாவிட்டால் அந்தப் பிரயாணி ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் இறங்கி ஏறவேண்டியதுதான். பெரிய ஜங்ஷனில் மட்டும் ஒலிபெருக்கி வைத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதுபோல வண்டியிலேயே ஒலிபெருக்கி அமைத்து மைக் மூலமாகப் பிரயாணிகளுக்கு எல்லாவிதமான செய்திகளையும் சொல்லிக் கொண்டிருக்கலாமல்லவா?

இப்படிக்கு,
ரா. கமலநாதன், திருவாரூர்.

ஆ. கு: நல்ல யோசனைதான். முதலில் ரயில் வண்டிகள் குறித்த காலத்திற்கு வந்து சேருவதற்கு என்ன வழி என்று குழம்பிக் கொண்டிருக்கும் ரயில்வே நிர்வாகத்தினர் இதை எங்கே கவனிக்கப் போகிறார்கள்.

THE PREMIER LITHO WORKS

SIVAKASI.

★

We undertake the Printing of Labels for Soap, Matches, Beedies and other Commodities.

★

Printing of Readymade Calendars and Wall Posters for all advertisements in Photo Offset Process a Speciality.

A TRIAL WILL CONVINCE YOU!

Post Box No. 37. Telegrams : 'PREMIER' Phone No. 66.

கண்களை நம்பாதே

கீழையூர் எம்.எஸ். வாசன்.

"டாங், டாங்!'' என ஒன்பது முறை அடித்து ஓய்ந்தது நகராட்சி மணிகாட்டி. கடற்கரையிலும் கூட்டம் குறைய ஆரம்பித்தது—ஆங்காங்கு ஓரிருவரைத் தவிர.

''சே! என்ன உலகமடா இது!'' என்று அலுத்துக் கொண்டு தன் தலையில் கட்டியிருந்த முண்டாசைக் கழற்றி உதறிக் கொண்டான் ஹம்பி பின்னே இல்லையா....?

நேற்றுத்தான் அவனுக்கும் திருமணம் நடந்தது. வெளியே சென்ற அவள் இது வரையிலும் திரும்பவில்லை. இன்னும் சிறிது நேரம் சென்ருல் அவளைத் தங்கள் ஜாதியில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள் அம் மலைக் குறவர்கள்.

ஆம் அது மலைக்குறவர்கள் வழக்கம். எங்கு சென்ருலும், எப்படிச் சென்ருலும் இரவு 10 மணிக்குள் வந்து விடவேண்டும். தவறினல் அப்பெண் நடைப் பிணம் தான்'

இதை நினைத்தவுடன் அவனுக்குக் குடலைப் பிடுங்கிப் போட்டால் போலிருந்தது. நேற்று முதலிரவில் நடந்தவைகள் அவன் நெஞ்சில் நிறைந்தன; அவள் மோவாயை அவன் பற்றி நிமிர்த்த, அவள் உடல் சிலிர்க்க, அவன் மார்பில் துயின்றதை நினைக்க, அவன் கண்கள் ஏக்கத்தில் மிதந்தன.

தன் திரண்ட தோள்களில் கைகள் துண்டை இறுக்க, மனம், மனைவி ஜிப்ஸியைப் பற்றி நினைக்க அவன் அப்படியே கடற்கரை ஓரமாக நடந்தான் அப்போது—

ஓர் மயக்குச் சிரிப்பு! மந்த மாருதத்தில் கலந்து, வளையல் ஒலிகளோடு — பக்கத்திலிருந்து எழுந்தது. திரும்பிய ஹம்பி திடுக்கிட்டான்.

அங்கே—

ஒரு தோணியின் அருகிலே... நிலவின் ஒளியிலே அவன் கண்களையே அவனுல் நம்ப முடியவில்லை. கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு மறுபடியும் பார்த்தான்.

சந்தேகமேயில்லை. அந்த 'டிப்டாப்' பட்டணத்து ஆசாமியுடன் ஒட்டிச் சாய்ந்து கொண்டு, தன் கதுப்புக் கன்னங்களை அவனது ஒட்டிய கன்னங்களுடன் உராய விட்டுக் கொண்டு மயங்கித் துயில்வது அவனது...

மனைவி ஜிப்ஸி!

வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ்படிக்கத் தெரிந் தவர்கள் இந்தப் புத்த கத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல் இங்கிலீஷ் சுலபமாக படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம் 704 பக்கங்கள் கொண் டபெரிய பைண்டு புத்தகம்.

விலை ரூ. 5. தபால்செலவு ரூ. 1.25 காசு.

வாணி தமிழ் ஹிந்தி ஆசான்

தமிழைக் கொண்டு தானே ஹிந்தி சுலபமாகப் படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம்.

விலை ரூ.2.25. தபால் செலவு 85 காசு.

குடும்ப இலகு வைத்தியம்

வீட்டுச் சரக்குகளைக் கொண்டு நோய் களைப் போக்கி, ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்திய ரகசியங்களடங்கியது.

தபால் செலவோடு ரூ. 3. 50.

ஐசுவரியம் (கைத்தொழில்)

இதில் சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத் தைலம், மெழுகு வர்த்தி, ஸ்னோ, பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண் டது.

விலை ரூ. 4.00] [தபால் செலவு ரூ. 0.85

VANI BOOK DEPOT.

3, மலையபெருமாள் தெரு.

(மாடியில் ரூம் நிர். 5)

Post Box No. 239. Madras-1-

'கலைப் பொன்னி'

(திங்கள் இதழ்)

தனிப்பிரதி விலை 50 காசு.

இந்தியா, இலங்கை

ஆண்டுச் சந்தா ரூ. 6. 00.

பர்மா, மலேயா, வெளிநாடு

ஆண்டுச் சந்தா ரூ. 9. 00.

சந்தாவை M. O. செய்யவும்.

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கலைப்பொன்னி,

வெண்கலக்கடைத் தெரு.

மதுரை-1.

அவன் ரத்தம் உறைந்தது! உடலின் செந்நீர் அவ்வளவும் கண்களுக்குப் பாய்ந்து, கண்கள் அபாய விளக்காயின. உதடுகள் துடிக்க மறுபடியும் பார்த்தான்.

பருவத்தின் பூரிப்பில் செழித்து வளர்ந்த ஜிப்ஸி, கடற்கரை மணலில் துவண்டு கிடந்தாள். இன்ப மயக்கத்தில் அவளது ஒவ்வொரு அங்கங்களும் துடித்துக் கொண்டிருந்தன.

அம்மனிதன், அவளுக்குப் பக்கத்தில் ஒருக்களித்துச் சாய்ந்து கொண்டு, நிலவொளி பட்டுப் பிரகாசிக்கும் அவளது சதைப் பிடிப்பான கன்னத்தை வருடிக் கொண்டிருந்தான்.

'சடக்'கென்று தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான் ஹம்பி. அவன் உள்ளம் துரோகம், துரோகம் என அலறியது. மனம் எதையோ ஆழ்ந்து சிந்திக்கவே அவன் முகம் குழம்பித் தோன்றியது. அவன் அவர்களை நோக்கி நடந்து கொண்டிருந்தான். அவன் கையில் ஏதோ மின்னியது.

அது ஒரு—

கத்தி!

மறு நிமிடம்—

'ஐயோ' வென்ற தீனக்குரல் அவ்விருவரிடமிருந்தும் ஏகோபித்துக் கிளம்பியது. அப்புறம் பேச்சில்லை! மூச்சில்லை உயிர் அந்த 'ஐயோ' வோடு சென்று விட்டதோ?

பிதுக்கிக் கிடந்த அவர்களின் குடல்களையும், ஓடி யுறைந்த அவர்களின் உதிரத்தையும் பார்த்து வெறிச் சிரிப்புச் சிரித்தான் ஹம்பி.

அப்போது—

"ஹம்பி! ஹம்பி!" குரல் ஒலித்

தது. திரும்பியவன் திகைத் தான் அங்கே—

“மச்சான்! என்ன இன்னிக்கி ஒரே மூட்டாக்கோவமா இருக்கே. நான் பொழுதைப் போக்கிட்டு வாரேன்னு நினைச்சுக்கிட்டியா. மச்சான் வர்ர வழியிலே ஒரு திருவிழாக் கூட்டம் மச்சான் அதான் மச்சான் இவ்வளவு நேரம்!” என்று கூறிக் கொண்டே வந்தவள் இரு பிணங் களுக்கு மத்தியில் நிற்கும் ஹம் பியைப் பார்த்ததும் ‘ஹோ’ வென்று அலறினாள் அவனது உண்மையான மனைவி ஜிப்ஸி.

ஹம்பி திடுக்கிட்டான். இறந்து கிடக்கும் ஜிப்ஸியையும் எதிரே நிற்கும் ஜிப்ஸியையும் உற்றுப் பார்த்தான் அவன் முகம் இருண் டது.

மறுநாள் காலைத் தினசரிகளி லெல்லாம் இதே செய்திதான்.

“சினிமா நடிகை மின்மினியும் டைரக்டர் மான்சிங்கும் நேற்றி ரவு கடற் கரையில் கொலை செய் யப்பட்டனர். சந்தேகத்தின் பேரில் ஒரு மலைக் குறவன் பிடித்து வைக்கப்பட்டிருக்கிறான் நடிகை மின்மினி, குறத்தி மேக் கப் கூட கலைக்கப்படாமல் இறந்து கிடந்தது பரிதாபமாக இருந்தது போலீஸார் இது பற்றி மேலும் புலன் விசாரித்து வருகின்றனர்!”

ஆம் மலைக்குறவன் அவசரப் பட்டு, அறிவை அடகுவைத்து விட்டான்.

மாலை நேரம் கதிரவன் தன் செங்கதிர்களை அள்ளி அள்ளி வீசி மேற்கு திசையெங்கும் இரத்த வெள்ளக்காடாக்கிக் கொண்டே, தன் கடமையை முடித்துக்கொண்டு, நில மகளை தழுவ ஓடிக்கொண்டிருந்தான். திருச்சி தாயுமானவர் ஸ்வாமி கோவிலின், பொன்னாலான கும்பத்தின் மேல் சூரியனின் செங்கதிர் ஒளிபடவே அவை ஜெகஜோதியாய் பிரதிபலித்தது காண்போர் மனதைக் கவர்ந்தன.

மலையின்மேல் ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கும் சிவசங்கரனின் கையில் ''பிட்டர்ஹனிமூன்'' (Bitter Honey Moon) புத்தகம் பிரித்தபடி இருந்தது. அவன் மனத்திரையில் பத்து பதினைந்து தினங்களாக அதேஇடத்தில் பார்த்துவரும் யுவதியின் சந்திரவதனம் வந்து நின்றது.

களங்கமில்லாத அந்த மதிமுகம் தரும் காதல் போதையில் தன்னை மறந்திருந்தான். குறுகுறுத்த அவளின் நீண்ட நீல கயல்விழிகள் அவனைக் கிறுகிறுக்க வைத்தன. அவளுடைய குதிகால்களைத் தொட்டுத் தழுவி முத்தமிட தவம் கிடந்த நீண்ட அவளின் கரும் கூந்தலின்மேல் அவன் பொறாமைப்பட்டான். தேன் கசியும் அவளின் உதடுகளைப் பார்க்கும்போது அவனின் அதரங்கள் துடித்தன. அகன்ற அவள் நெற்றியில் சிறு மயிற்குழாய் அடிக்கொரு தடவை வந்து போய் முத்தமிட்டுக்கொண்டிருந்தது.

ஒரு கையில் ஸ்வாமிக்கு பூஜைக்கு பிரசாத கூடையுடனும், மறு கையில் நான்கு வயது நிரம்பாத குழந்தையைப் பிடித்தபடி அவள் வருவதைக்கண்டான் சிவசங்கரன்.

இன்று எப்படியும் அவளிடம் பேசி, தன் உள்ளத்தில் எழும் உணர்ச்சியை அப்படியே அவளிடம் கொட்டி விட வேண்டுமென அவன் துடித்துக்கொண்டிருந்தான். எப்படி அவளிடம் பேசுவதென குழம்பினான். இரு வாரமாக இதே குழப்பத்தினால் தானே அவளிடம் தன் விருப்பத்தைச் சொல்ல முடியாமல் தத்தளித்தான்... ஆனால் இன்று அவனை சோதிக்க வினாயகக் கடவுளுக்கு விருப்பமில்லை போலும்...!

நிலாவொளியில் அங்கு இருந்த மரத்தடியில் அவள் உட்கார்ந்திருந்தாள். அவளுடன் வந்த சிறுமியோ தண்ணீர் குடிக்க அருகேயிருந்தகுழாய்க்கு ஓடினாள் குழந்தை ஓடுவதைக் கண்ட அம் மங்கை ''ப்ரேமா ஓடாதே. கீழே விழப்போறே'' என்று கத்திக்கொண்டே சிறுமியை பிடிக்க ஓடினாள். அதற்

காதலுக்குப் பின்னால்

புத்தன்

குள் குழாய் அருகே போய் விட்டாள் அக் குழந்தை. பாசி பிடித்திருந்த அந்த இடத்தில் அச் சிறுமியின் பாதம் பாவாமல் வழுக்கி விழவே ''ஐயோ'' என்று அலறினாள் குழந்தையை தூக்கி அணைத்தாள் அந்த யுவதி. குழந்தையின் அழு குரலைகேட்ட சிவசங்கரனும் ஓடி வந்தான் குழந்தைக்கு காலில் சிறு காயம் ஏற்பட்டு, இரத்தம் கசிந்தது. அம்மங்கையோ செய்வதறியாது தவித்தாள் சிவசங்கரன் தாமதிக்காமல் தன் அழகிய கைக்குட்டையை நீரில் நனைத்து அச் சிறுமியின் காயத்திற்கு கட்டுப்போட்டான். யுவதி நன்றியுடன் சிவசங்கரனைப் பார்த்து வணக்கம் கூறினாள். சிவசங்கரனுக்கு உள்ளமே பூரித்தது.

''நீங்கள் இன்று வெகு நேரம் கழித்து வந்திருக்கிறீர்களே ...?''

''இன்று தாயுமானவருக்கு அர்ச்சனை செய்து கொண்டு வர நேரமாகிவிட்டது. ஆமாம் நீங்கள் நான் இங்கு வரும் நேரத்தைக் குறித்து வைத்திருக்கிறீர்களோ?''

''இல்லை, இல்லை நான் தினந்தோறும் மாலை வேளையில் இங்கு வரும்போதெல்லாம் நீங்கள் கொஞ்சம் முன்னதாகவே வந்தி

"ஆங்கில போதகன்"

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் பிறர் உதவியின்றி ஆங்கிலத்தில் சுலபமாக பேசுவதற்கும், எழுதுவதற்கும் கற்றுக்கொள்ள முடியும். 900 பக்கங்களுக்கு மேல் உள்ள இந்தப் புத்தகம் நன்கு பைண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூ. 4-00

வி. பி. செலவு ரூ. 1-15

திருமகள் புக் டிப்போ

3, மலையபெருமாள் தெரு,

சென்னை-1

ருப்பிர்கள் அதனால் தான்..." என்று தன் மனத்தவிப்பை மறைமுகமாக வெளியிடலானான்.

"நீங்களும் இங்கு வந்து பொழுது போக்குவதை நானும் கவனித்திருக்கிறேன். வெகு நேரமாகி விட்டது. நான் வருகிறேன்" என்றுகூறி கரம்கூப்பினாள். பதிலுக்கு அவன் வணக்கம் செலுத்துவதற்குள் அவள் நகரலானாள்.

சிவசங்கரனுக்கு ஓர் அளவு திருப்தி ஏற்பட்டாலும், அவள் இவ்வளவு விரைவில் திரும்பிப் போய் விட்டாளே என்று வருந்தினான் ஏதோ முடிவுக்கு வந்தவனாய் அவள் கூடவே தொடர்ந்து நடந்தான். அவளோ, இவனை திரும்பியும் பாராமல் மலையினின்று இறங்கி தெப்பக்குளம் தாண்டி ஆண்டாள் வீதியில் நுழைந்தாள். சிவசங்கரனும் அவள் நிழலென பின் தொடர்ந்தான். அவ்வீதியின் இறுதியில் இருக்கும் ஒரு சிறு வீட்டிற்குள் நுழைந்த அம்மங்கை, சற்றே நின்று திரும்பி பார்த்தாள். தூரத்தேயிருந்து தன்னைப்பார்க்கும் சிவசங்கரனைக் கண்ட அவள் தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

வழக்கம்போல் அன்று மாலை சிவசங்கரன் மகிழ்ச்சியோடு மலை உச்சியில் அவளுக்காக காத்திருந்தான். சிறிது நேரத்திலேயே அவளும் குழந்தை ப்ரேமாவுடன் சிவசங்கரன் அருகிலேயே வந்து உட்கார்ந்து விட்டாள். பழம் நழுவிப் பாலில் வீழ்ந்ததுபோல் இருந்தது சிவசங்கரனுக்கு.

"ரொம்ப நேரமாகக் காத்திருக்கிறீர்களோ".

"இப்போது தான் வந்தேன்" என்று கூறிக்கொண்டே, தான் வாங்கி வந்திருந்த முல்லைப் பூவை எடுத்து அவளிடம் தயங்கியபடியே கரம் நடுங்கக்கொடுத்தான். அவள் மகிழ்வோடு வாங்கி, குழந்தை ப்ரேமாவின் தலையில் அழகாக வைத்தாள்.

அந்த மல்லிகைப்பூ தன் உயிரோவியத்தின் தலையை அலங்கரிக்கும் என்று எண்ணிய சிவசங்கரனுக்கு அவள் செய்தது ஏமாற்றத்தையே கொடுத்தது. அவள் மனதைத் தெரிந்து கொள்ள எண்ணியவனாய் "தாங்கள் பூ வைத்துக்கொள்வதில்லையா" என்றான்.

ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே "நான் பூ வைத்துக் கொள்ளும் வழக்கமில்லை" என்றாள்.

சிறிது நேரம் அங்கு அமைதி குடிகொண்டது.

"சிலர் தனியாகப் போகும் பெண்களைப் பார்த்து பல்லிளிப்பதும், கேலியாக அவர்களைப் பற்றி பேசுவதும், அப்பெண்களின் காதில் விழும்படி தற்பெருமையாக தாங்கள் சாதித்திராத அசகாய சூரத்தனங்களை

யெல்லாம், தாங்களே செய்தது போல் தற்பெருமை அடிப்பதும், அந்தப் பெண்களை வண்டென சுற்றித் திரிவதையும் தாங்கள் பார்த்திருப்பீர்கள். அவர்களைப்பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்'' என்றாள்.

சிவசங்கரனுக்கு அஸ்தியில் சுரம் கண்டது. தன்னைத்தான் மறைமுகமாகத் தாக்குகிறாளோ என எண்ணி பிறகு சமாளித்தவனாய், ''வாலிபத்தின் கோளாறு என்பதோடல்லாமல், சகோதரிகளே இல்லாது தனிக்கட்டைகளாக பிறந்திருப்பார்கள். காலிகள் என்றே அந்த வாலிபர்களை அழைக்கலாம். ஆனால் நான்...'' என்று மேலே பேச முடியாமல் தடுமாறினான்.

''நோ, நோ. உங்களைப் பற்றி சொல்லவில்லை. உங்களின் நேர்மை எனக்கு தெரிந்ததாலேயே இங்கு இன்று உங்களுடன் பேசுகிறேன். இருந்தாலும், சிற்சில சமயம் நல்லவர்களுக்கும் சபலம் ஏற்பட்டு விடுகிறது. அவர்களையும் அறியாமலேயே செய்யும் விஷமங்கள் அந்தப் பெண்களுக்கு இழுக்கை தேடிக்கொடுக்கிறது'' என்றாள் வேறு திசை பார்த்த வண்ணம்.

''அதனால் நான் உங்களை சில சமயம் தொடர்ந்து வந்தது உங்களுக்கு இழுக்கை தருகிறது என்று சொல்கிறீர்கள், இல்லையா?''

''உண்மை மிஸ்டர்! நீங்கள் தமாஷாக என் கூட வந்திருக்கலாம். ஆனால் உலகம் அதை உணராமல் என்னைத் தவறாக எடை போட்டுவிடும். இனி இது போல் என்னை பின்தொடரவேண்டாம் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளவே இங்கு இன்று வந்தேன்'' என்றாள்.

சிவசங்கரனுக்கு சிறிது நேரம் என்ன பேசுவதென்றே தெரியவில்லை. தன் உள்ளத்தில் அவளை வைத்து இரவு பகலாக பூஜிப்பது தெரியாமல் இப்படிப் பேசுகிறாளே என்று வருந்தினான். பிறகு துணிவுடன் ''உங்களைச் சுற்றிவரும் அந்த நல்லவனை உங்களை மணந்து கொண்டால் களங்கத்திற்கு இடமில்லாமல் போகுமல்லவா?'' என்றான்.

அவள் கன்னங்கள் சிவந்தன. நாணத்தால் அவள் தலை தானாகவே குனிந்துகொண்டது. ''உண்மையாக தாங்கள் என்னை மணந்து கொள்வீர்களா.?'' என்றாள்.

''கட்டாயம் மணந்து கொள்வேன். உன்மேல் கொண்டுள்ள அன்பு நான் இறந்தாலும் மாறாது'' என்று உணர்ச்சி வசப்பட்டவனாக கூறினான்.

அவள் முகம் மலர்ந்தது.

''நீங்கள் இவ்வளவு நல்லவராகயிருப்பது என்பாக்கியமே. இருந்தாலும் என்னை தாங்கள் மறந்துவிடுவதே நல்லது. என்

மோட்டார் சைக்கிள்: ஹலோ! சசி!

சசி பிளசரை வேகமாக ஓட்டிய படி: அய்யோ மண்டு அத்தான்! நீங்க என் மாமா மகன் என்பதற்காக உங்களை திருமணம் செய்து கொள்ள முடியாது! நான் என் ''லவ்வரை'' சந்திக்கப் போறேன். நீங்க போங்க!

னால் உங்களை மணக்க முடியாது'' என்றாள் கண்களில் நீர் மல்க. சிவசங்கரனுக்கு மூச்சே நின்று விட்டது போலிருந்தது.

''நான்மணமாகாதவள். ஆனால் பிரேமா என்னுடைய மகள்'' என்றாள். அவள் கண்கள் குளமாயின.

சிவசங்கரனுக்கு அவள் சொன்ன வார்த்தைகள் பேரிடியாக இருந்தன. இப்போது தான், அவள் பொட்டு வைத்துக் கொள்ளாததும், தலையில் மலர் வைத்துக்கொள்ளாததும், சிவசங்கரன் நினைவிற்கு வந்தன. திகைப்போடு அவளைப் பார்த்த வண்ணம் ''பிரேமா தங்கள் மகளா!'' என்று அடித் தொனியில் கேட்டான்.

''பிரேமா தான் என் அன்பு மகள் என் பெயர் சிவகாமி' என் கணவர் எங்கிருக்கிறாரோ தெரியவில்லை. உலகிற்கு நான் ஒரு விதவை என்றே சொல்லிக் கொண்டு என்னைக் காத்து வருகிறேன். இனியாவது என்னை மறந்து ஒரு நல்ல குலமங்கையை மணந்து நீங்கள் நல்வாழ்வு வாழுங்கள்'' என்றாள். அவள் கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடிற்று.

''உன்னை இந்த அவலநிலைக்கு உள்ளாக்கியவன் யார்? சிவகாமி...'' என்றான் சிவசங்கரன். அவள் முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். சிவசங்கரன் அதற்குமேல் அவளை ஒன்றும் கேட்க விரும்பவில்லை.

சிவசங்கரனுக்கு தன் அண்ணன் சேகரைத் தவிர வேறு நாதியில்லை. சேகரோ மதராஸில் ஒரு கம்பெனியில் வேலையில் இருந்தான். விசேஷ தினங்களைத் தவிர மற்றைய நாட்களில் சகோதரர்கள் இருவரும் பார்த்துக் கொள்ளமுடியாத நிலையில் அவர்கள் உத்தியோகமும், சூழ்நிலையும் அமைந்திருந்தன. தனியாக வேகாலம் கடத்தும் சிவசங்கரன், தன் அண்ணனை எதையாவது சாக்கிட்டு பார்த்து வருவான் சிவகாமியைத் திருமணம் செய்து கொண்டதைக் கூட தன் அண்ணன் சேகரிடம் சொல்லவில்லை.

மாதங்கள் உருண்டோடின. தீபாவளிக்கு இன்னும் இருவாரங்கள் தான் இருந்தன. தீபாவளிக்கு அண்ணன் சேகரை வரவழைத்து தான் திருமணம் செய்து கொண்டதைச் சொல்லி விட சிவசங்கரன் எண்ணி அண்ணனைத் தவறாமல் தன் தலைதீபாவளிக்கு வரும்படியும், தான் திருமணம் செய்து கொண்டது பற்றியும் கடிதம் எழுதினான்.

பொழுது விடிந்தால் தீபாவளித் திருநாள். அன்று மாலை சிவசங்கரன் திருச்சி ஜங்ஷன் பிளாட்பாரத்தில் தன் அண்ணாவின் வருகையை, ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

ஹலோ! மேடம்! என் மனைவிக்கு வெள்ளெழுத்து. கண்ணாடிக்கு பிரேம் போடவந்தோம். நல்ல பிரேமா செலக்ட் பண்ணி எடுத்துக் கொடுங்கோ.....

புகை வண்டியும் அன்று குறித்தநேரத்தில் வந்தது.

முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து இறங்கிய சேகரை சிவசங்கரன் வரவேற்று, தன் வீட்டிற்கு ஒரு டாக்ஸியில் அழைத்துக்கொண்டு போனான். வீட்டுவாசலில் பிரேமா சில குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். சிவசங்கரன் காரை விட்டு இறங்கி வருவதைக் கண்ட பிரேமா "அப்பா" என்று அன்புடன் கத்திக்கொண்டே அவனிடம் ஓடிவந்து கால்களைக் கட்டிக்கொண்டாள். சிவசங்கரன் பிரேமாவைத் தூக்கிக் கொண்டான். சேகருக்கு இந்தக் காட்சி குழப்பத்தைக் கொடுத்தது. சிவசங்கரனின் முகத்தை அவன் பார்த்ததும், சிவசங்கரனின் சிரம் சற்றே தாழ்ந்தது.

டைரக்டர்: அட என்னம்மா நீ ஒரு மனைவி கணவனிடம் எப்படி நடக்க வேண்டுமோ அது போல இவருடன் நடிக்கச் சொன்னால் பத்திரகாளி வேஷம் போட்டுவிட்டாயே!

நடிகை: வீட்டில் என் கணவரிடம் நடந்து கொள்வதுபோல் தாங்க நடித்தேன்,

"சங்கரா! இக்குழந்தை ......"

"என் குழந்தைதான் அண்ணா நான் ஒரு விதவையைத் தான் மணந்து கொண்டேன் என்று தங்களுக்கு தெரிவித்திருந்தால் தாங்கள் இங்கு வராமல் இருந்து விடுவீர்களோ என்றே கடிதத்தில் எழுதவில்லை" என்றான் சிவசங்கரன்.

சேகருக்கு ஓர் அளவு உள்ளத்தில் வருத்தமிருந்தாலும், சமாளித்துக் கொண்டு, 'பலே சங்கரா! இவ்வளவு சீர்திருத்த வாதியாக இருப்பாய் என்று நான் எண்ணவில்லை. ரொம்ப சந்தோஷம்" என்று கூறியபடியே சிவசங்கரனுடன் அவன் இல்லத்திற்குள் புகுந்தான்.

"சிவகாமி! சிவகாமி!! சீக்கிரம் காப்பி கொண்டு வா" என்றான் சிவசங்கரன், உள்ளே வேலை செய்து கொண்டிருக்கும் தன் மனைவியிடம்.

"சிவகாமி" என்று தன் தம்பி சங்கரன் அழைக்கவே, சேகர் முகம் சற்றே விகாரமடைந்தது. "சிவகாமி, சிவகாமி" என்று அவன் காதுகளில் எதிரொலிக்கலாயின. ஆவலுடன் தன் தம்பி சிவசங்கரனின் மனைவி சிவகாமியின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். காப்பிக் கோப்பையைக் கரங்களில் ஏந்தியவண்ணம் சிவகாமி வந்தாள். சேகரைப் பார்த்த சிவகாமி ஒரு கணம் திகைத்து நின்றாள். அவள் உள்ளத்திலே ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது.

சிவகாமி விடியற்காலையிலேயே எழுந்து தீபாவளி பண்டிகைக் கான பலகாரங்களைச் செய்து கொண்டிருந்தாள். அவள் உடம்பு ஏதோ யந்திரம் போல் வேலை செய்ததே தவிர மனம் அவளின் பழைய வாழ்க்கை சரித்திரங்களை எண்ணி எண்ணி வேதனைப் பட்டுக்கொண்டிருந்தது. உடலும் உள்ளமும் ஏதோ பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்தது.

தொப்பென்று ஜன்னல் வழியாக வந்து விழுந்த கடிதத்தைக் கண்ட சிவகாமி திடுக்கிட்டாள்.

கைகள் நடுங்க, உடல்பதற கீழே வீழ்ந்திருந்த கடிதத்தை எடுத்துப் பார்க்கலானுள்.

அன்புள்ள சிவகாமி!

இப்படி உன்னை அழைப்பதற்கே தகுதியில்லாதவன் எழுதுகிறேன். உனக்கு பெரிய துரோகம் செய்துவிட்டேன். அதை நான் எண்ணும்போது என் மனச்சாட்சி என்னைக் கொல்லுகிறது. என் காமவேட்கையில் உனக்கு நான் செய்த துரோகத்திற்கு என் அருமை தம்பி சிவசங்கரன், அவன் உன்மேல் கொண்டுள்ள தெய்வீக காதலால் ஈடு செய்து விட்டதைக்காண என் உள்ளம் சற்று ஆறுதலடைகிறது. நீயும் என்னை மன்னித்துவிடு. என் தம்பிக்கு என் செய்கை தெரிந்தால், அவன் இறந்தே போய்விடுவான். என் மகள் ப்ரேமாவிற்கு தெரிந்தாலோ, ஒரு காமுகனின் மகளா நான்...என்று எண்ணி எண்ணி வேதனைப் படுவாள்.

ஆகவே, என் துரோகச் செயல் நம்முடன் மடியட்டும். என்னையும் மன்னித்து மறந்து விடு. இந்த பாவி உனக்கு எழுதிய இந்த கடிதத்தையும் உடனே எரித்து விடவும்.

சேகர்.

கடிதத்தை படித்த சிவகாமியின் மனமும் ஜுவாலையாக எரிந்து கொண்டிருந்தது. கையில் இருந்த கடிதமும் தானுக எதிரே எரிந்து கொண்டிருக்கும் அடுப்பில் வீழ்ந்து எரிந்து கருகியது.

இழந்த சக்தியை மீண்டும் அளிப்பது

வீரகேசரி மாத்திரை

இல்வாழ்க்கையில் இன்பமில்லாமல் இடர்ப்படும் வாலிபர்களுக்கும், வயோதிகர்களுக்கும் மிகச்சிறந்த மாத்திரை.

மிதமிஞ்சிய உஷ்ணத்தினுலும், அமித போகத்தினுலும், தாது நீர்த்துப் போகுதல், சொப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) நரம்புத் தளர்ச்சி, நாடிதளர்தல், தாதுக்குறைவு. சக்திக்குறைவு இவைகளை நீக்கி, இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி, சர்வநாடி நரம்புகளுக்கும் வலுவைக் கொடுக்கவல்ல மிகச் சிறந்த மாத்திரை.

24 மாத்திரை புட்டி ரூ. 6-00
50 „ „ ரூ. 12-00

லேபனம் (Oil)

குறி சிறுத்துப்போகுதல், சுருங்கும் தன்மையடைதல், தளர்ச்சியடைதல் உறுதியின்மை ஆகியவைகளுக்கு மேற்பூச்சு.
1 அவுன்சு புட்டி ரூ. 4-00

தயாரிப்பவர் :— சித்த வைத்திய பண்டிட்

S. V. R. கண்டர் R. I. M. P.

இராஜாளி எண்ணை டிப்போ, தம்மண்ண செட்டி ரோடு, அரிசிப்பாளையம் சேலம்-2 (S. India)
(வெளியூர் வாசிகள் தேவைக்கு எழுதவும்)

ஆசை வெல்லாதது!

இதயத்தில் இன்ப ஊற்று பெருக்கெடுக்க டவுன் ஹால் ரோடில் வந்து கொண்டிருந்தார் சந்திரசேகரன். அப்பாடா கூட்டங்களெல்லாம் ஊருக்கு சென்று விட்டது இன்னும் நான்கு நாளைக்கு ஜாலியாக லெட்சுமியுடன் பேசிக்கொண்டிருக்கலாம் அப்பா ஒருவார்த்தை தனியாகப் பேச முடிந்ததா அவளிடம். அவளைச் சுற்றி ஒரே கூட்டந்தான் மறைந்து மறைந்து எத்தனை நாளைக்குப் பேசமுடியும் இன்று வீட்டில் அவரும்லெட்சுமியுந்தான். மனதில் குது குதுப்பு உண்டாயிற்று அவருக்கு. அவளுக்குப் பிடித்த முல்லைப் பூச்சரம் இரண்டு முழம் வாங்கிக்கொண்டார். திண்டுக்கல் வெற்றிலை வாசனைப் பாக்கு பழம் பலகாரம் இத்யாதி எல்லாம் பை நிரம்பி விட்டது.

தன் கையாலேயே பூவை அவளுக்குச் சூட்டவேண்டும் அவள் வாயில் பலகாரத்தை ஊட்ட வேண்டும் என்று கற்பனை செய்தபடியே நடந்து கொண்டிருந்தார். இவ்வளவு ஆசையுள்ள மனுஷன் எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு சாது மனிதரைப்போல் மாடியை விட்டுக் கீழே இறங்காமல் எப்படித்தான் இருந்தாரோ தெரியவில்லை.

வேலையெல்லாம் முடித்துக் கொண்ட லெட்சுமியும் அடுக்களையிலே படுத்துக்கொண்டு விடுவாள். இன்று வருவாள் மாடிக்கு நாளை வருவாள் என்று எதிர் பார்க்கும் சந்திரசேகரனும் ஏமாந்துதான் போவார். பாவம் அவள் எனனசெய்வாள். வேலைத் தொந்தரவுகள் ஜாஸ்தி காலையில் நான்கு மணிக்கு எழுந்தால் இரவு பத்து மணி வரை சரியாக இருக்கும்.

வேலைக்கு ஆளைப்போட்டாலும் அவளுக்குப் பிடிக்கிறதில்லை தானே பார்த்து நிலை நிறுத்துவதில் அவளுக்கு அலாதி ஆசை. தொலையட்டும் என்று அவரும் விட்டு விட்டார். அவருடைய தேவைகளெல்லாம் சொல்லாமல் ரெடி பண்ணிவைக்கும் லெட்சுமி இரண்டு நிமிஷம் அவருடன்பேச மாட்டாள். ஏக்கமடைந்த அவர் முகத்தை ஏறிட்டும் பார்க்கமாட்டாள் தப்பித் தவறி அவர் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்றபடி வருவாள் ஒரு நிமிஷம் என்பார் சந்திரன் ஊக்...கூம் எனக்கு கொள்ளை வேலை கிடக்கு என்ன விஷயம் சீக்கிரம் சொல்லுங்கள்.

கதவு அசைகிறதே யார் அது...?

ஒரு குழந்தை வந்து எட்டிப் பார்க்கும். என்னடா ராஜா அவன் கூட சிரிக்கிறான் பாருங்கள் என்றபடி குழந்தையுடன் வெளியேறி விடுவாள் லெட்சுமி. மக்கு ஜெடம் ஏதாவது தெரிகிறதா இவளுக்கு மனுஷன் எவ்வளவு ஆசையாகக் கூப்பிட்டான் என்னவென்று கேட்போம் ஒருவார்த்தை. கர்மம் கர்மம் என்று தலையில் அடித்துக்கொள்ளுவ

எழுதியவர்: ராஜம்

தைத் தவிர வேறு என்ன செய்ய முடியும் அவரால்.

குப்பண்ணுவின் குரல் அவரை இந்த உலகத்திற்கு கொண்டு வந்தது!

என்னது சார்வாள் ஆத்தில் எல்லாரும் ஊருக்குப்போய விட்டார்கள க்கும் நீங்கள் மட்டும் ஜாலியாக ஊர் சுற்றுகிறீர்களா. இல்லை யில்லை அவளும் இருக்கிருள்......ஹி.. ஹி... நாணம் மேலிட அசட்டுச் சிரிப்பை உதிர்த்தார் சந்திரன். அடி சக்கை அப்படியா அதானே பார்த்தேன் உம் உம் சீக்கிரம் போங்கள் ஆத்துக்கு இல்லா விட்டால் தேவிக்கு கோபம் வந்துடு மோன்னே குப்பண்ணு நழுவி விட்டார்.

அன்று வெள்ளிக்கிழமையான தால் மீனுக்ஷியம்மனின் கோவிலில் ஒரே கூட்டம் பெண்களெல்லாம் வளையல் கடையில் நின்று கொண்டு பேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். லெட்சுமிக்கும் வளையல் என்ருல் உயிராயிற்றே அவள் ஆசைப் பட்டு கேட்கும் பொழுது அவர் வாங்கித் தருவதேயில்லை அந்த ஆசையை இப்



பொழுது நிறைவேற்றிஞல் என்ன.

இரண்டு டஜன் பம்பாய் வளையல் அவர் பையில் அடைக்கலமாயிற்று துரித கதியில் நடையைக்கட்டிஞர்வீட்டுக்கு அவரையும் முந்திக்கொண்டு ஒரு டாக்சி அவர் வீட்டுவாசலில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கியவர்கள் யார்? சாட்ஷாத் அவருடைய பேத்தியும் அவள் கணவனுந்தான்.

"ஹல்லோ தாத்தா சௌக்கியமா" என்று கேட்டுக்கொண்டே அவர் கையிலிருந்த பையை வெகு சுவாதீனமாக வாங்கிக் கொண்டு உள்ளே சென்ருள் அந்த பம்பாய் பேத்தி. உலகமே அவர் காலின் கீழிருந்து நழுவி விட்டதுபோல் தோன்றியது சந்திர சேகரனுக்கு. யாருக்கும் தெரியாமல் பல்லைக் கடித்துக்கொண்டே பேத்தியைப் பின் தொடர்ந்தார்.

அவர் வாங்கி வந்த சாமான்களை பிரித்துப் பார்த்த பேத்தி "தாத்தா நான்வரப்போவது உங்களுக்கு எப்படித் தெரியும்? எனக்குப் பிடித்தமான வளையல், முல்லைப் பூச்சரம் எல்லாமே வாங்கி வந்திருக்கிறீர்களே" என்று ஆச்சரியம் மேலிடக் கேட்டாள்.

தாத்தா அசடுவழியச்சிரித்தார்

காபி டிபன் முடிந்த பிறகு அடுத்த தெருவில் இருக்கும் உறவினர் வீட்டுக்கு பத்மாவும் அவள் கணவனும் சென்று விடடனர். மெல்ல லெட்சுமியை அணுகி அவள் காதில் ஏதோ கிசுகிசுத்தார் சந்திரசேகரன்.

"அழகாயிருக்கிறது. இன்னும் உங்கள் ஆசை கிழடாகவில்லையா! பிள்ளைத்தாச்சிப் பெண் வந்திருக்கா அவளுக்குப் பிடிக்கிற பட்சணங்கள் எல்லாம் செய்து கொடுக்கணும். பதிலுக்குக்காத்திருக்கவில்லை லெட்சுமி.

வாங்கி வந்த சபா டிக்கெட் இரண்டும் பரிதாபமாய் மேஜையின்மேல் கிடந்தன.

ஏன் சாகவில்லை

-புத்தன்-

பட்டிக் காட்டுக்குச் செவ இருக்குற பொண்டுகளுக்கு என்ன தெரியுதூன்றேன்? அம்மவூருக்கு பயாஸ் கோப்பு வந்துருக்குது வாகுட்டி போயிட்டு வருவோம்ன்றேன். புருஷன் கூட சோடியாப் போனு மட்டுமருவாதி இருக்கா தூன்ரு. பட்டணக்கரையில இருக்குற பொண்டுகளைசைக்கோள் மோட்டார்ல பின்னுக்கு ஏறிக்கிட்டு பொழுது சாயிற வரை ஊர்க்காட்டச் சுத்திப்பிட்டு நாடவம், பயாஸ் கோப்புண்டு பாத்துப்புட்டு ரவைக்கி கௌப்புக்கடையில ஆணும் பொண்ணும் ஒருமிக்க நெல்லுச் சோத்தத்துன்னுப்பிட்டுப் படுக்குதுக. ஒவ்வொரு பொம்பள ஊரையே வித்துப்பிட்டு வந்துர்ரு. எனக்கு வாக்கப்பட்ட துப்புக்கெட்ட கழுத, கூப்புடு தொலையில இருக்குற ரயிலுக்கெடிக்கிப்போயி ஒரு திக்கட்டு எடுத்துக்கிட்டு அயித்த வீட்டுக்கு போக பயமாயிருக்கூண்ரு. ஒத்தேல போயி பசுவுல ஏறமாட்டேன்ரு. நான் காசக்காசுன்னு பாக்காம எனக்கு ஒரு பட்டுச் சட்டையும் அவளுக்கு ஒரு சிலுக்கு லவுக்கத்துணியும் வாங்கிக்கிட்டு வந்து போடுடீன்றேன். லவுக்க போட வெக்கமாயிருக்கூண்ரு. வாக்குல கெட்ட கழுதய போக்குலவுட்டுத் திருப்புவோமுண்டு பாத்தா... நான் பட்டுச் சட்டை போடுறது புடிக்காம நெதசரி சண்டைக்கி கச்ச கட்டிக்கிட்டு வர்ரு. அவளுக்குப் பேய்தான் புடிச்சிருக்கோ என்ன எழவோ? நானும் மந்திரிச்சிப் பாத்துப்புட்டேன் துன்னூரு போட்டும் பார்த்துப்பிட்டேன். ஒண்ணும் சரிப்பட்டு வரக்காணோம். இவளக் கட்டிக்கிட்டு மாரடிக்கிறதுக்கு கத்திய எடுத்துக் குத்திக்கிட்டுச் சாவலாம்ன்றேன்.

[பட்டிக்காட்டு மைனர் பக்கிரிசாமி பட்டுச் சட்டையில் இரத்தக்கறை படும் என்பதற்காக கத்தியால் குத்திக்கொண்டு சாகவில்லை.]

புதிய வெளியீடு

ஐயோ செத்தேன்!

அலறினாள் மங்கை!

சிரித்தான் சிங்காரம்!

செத்தாளா?

பிழைத்தாளா?

உயிருக்கு மன்றாடு

மலிவுப்பதிப்பு

104 பக்கம் :: விலை 50 காசு

கலைப்பொன்னி

(போன் நிர். 4001)

வெண்கலக்கடைத் தெரு :: மதுரை-1.

நெஞ்சையள்ளும் காதல் கடிதங்கள்

விலை ரூ. 1-50

தயாரிப்பு : சந்திரமோகன்.

விலை சற்று அதிகமோ என்று தோன்றினாலும் படிக்க ஆரம்பித்ததும் அக்குறை மறந்து விடுகிறது. 'மாஜி காதலிக்கு' எழுதப்பட்ட காதல் கடிதம் நெஞ்சைத் தொட்டு அப்படியே மலைத்துப்போக வைத்துவிடுகிறது. இளமைப் பருவத்தில் பிளவோ ஒருவரைக் காதலிக்கிறோம். பிறகு நெடு நாளைக்குப்பிறகு எதிர்பாராத சூழ் நிலையில் சந்திக்கிறோம். அப்பொழுது உண்டாகும் உணர்ச்சிகளைக் கடிதம் அப்படியே பிரதிபலிக்கிறது. அடுத்த வீட்டுப் பெண்ணுக்கு என்ற கடிதம் வேடிக்கையானது. கவிஞன் விபச்சார விடுதியில் உள்ள பெண்ணுக்கு எழுதியகடிதம் ஜனாதிபதி ராஜேந்திரபிரசாத் முன்பு ஒரு பிரசங்கத்தில் வெளியிட்ட கருத்தை நிறை வேற்றுவதாக இருக்கிறது. இந்த மாதிரி பெண்களின் வாழ்க்கையை ஆராய்ந்து வெளி உலகத்திற்குத் தெரியவைக்கவேண்டும் என்று அவர் கூறினார். மொத்தத்தில் புத்தகம் பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது. படிப்பதற்கு சுவையாக இருக்கிறது. இளைஞர்கள் மட்டுமல்ல முதியவர்களும் கூட மிகவும் விரும்புவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

கல்விக்களஞ்சியம்

எழுதியவர் எஸ். பி. ராமச்சந்திரன்

மலிவுப் பதிப்பு விலை ரூ. 2-0-0.

க்யூபா, அர்ஜென்டைனா என்ற நாடுகளைப் பற்றிப் பத்திரிகையில் படித்து விட்டு இந்த நாடுகள் எந்தக் கண்டத்தில் இருக்கின்றன? எவற்றிற்குப் பெயர்போல நாடுகள்? என்றெல்லாம் புரியாமல் விழிக்கிறோம்.

பையன் "ஏம்பா கி, பி, 1526-ல் என்ன நடந்தது? என்று கேட்கும்போது நாமே சரித்திர புத்தகத்தைத் தேடிக்கொண்டு ஓடுகிறோம். தாவரங்கள் எப்படி சுவாசிக்கின்றன என்று கேட்டுவிட்டலோ? தீர்ந்தது நம்பாடு நாம் பள்ளிக்கூடத்தில் படித்ததெல்லாம் அங்கேயே தான் மறந்துபோய் விட்டதே.

இந்திய அரசியல் சட்டம், விண்ணியல், மனோதத்துவம், ரசாயனம், பௌதிகம் இவற்றைப் பற்றி யெல்லாம் பேசவேண்டியதே இல்லை.

ஆனால், இந்தப் புத்தகம் ஒன்று கையில் இருந்தால் எதையும் நாம் கவலைப்பட வேண்டியதே இல்லை. 400 கேள்வி பதில்களில் உலகத்தைப் பற்றிய எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

இந்த மலிவுப் பதிப்பு ஒவ்வொருவீட்டிலும் இருக்கவேண்டிய செல்வம்.

வெளியிட்டது :

தாமரை நூலகம், 2. அருணாகாலனி, சென்னை-26.

[மதிப்புரைக்கு அனுப்புவோர் இரண்டு புத்தகங்கள் அனுப்பவேண்டுகிறோம் - ஆசிரியர்]

பதில்

சினிமா நடிகர்களும், சீமைச் சீமாட்டிகளும் சிரித்த முகத்தோடு பாராட்டும் தாஜ்மஹாலை 20000 வேலையாட்களைக்கொண்டு 22 வருடங்களில் கட்டிமுடித்த ஷாஜஹான் பஞ்சாப்பில் பஞ்சம் வந்தபோது கவலைப்படாமலிருந்ததை நேரு கண்டித்திருக்கிறார். ஆனால் தாஜ்மஹாலைக் கட்டியதற்காகப் பாராட்டியிருக்கிறார். ஆனால் காந்திஜி தாஜ்மஹாலைப் பாராட்டவில்லை.

தன் காதலிக்காக கலைக்கோபுரத்தை எழுப்பிய ஷாஜஹானை அவருடைய மகன் ஔரங்கசீப் சிறையில் அடைத்தான் ஒருநாள். அப்போது தன் மகனிடம் ஷாஜஹான் இன்னொரு மகன் தாராவை ஒரே ஒரு தடவை பார்க்க வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டார். அதற்கு ஒப்புக்கொண்ட ஔரங்கசீப் தன் சகோதரன் தாராவின் தலையை வெட்டி தங்கத்தாம்பாளத்தில் வைத்து தன் தந்தையிடம் காட்டினான். தந்தை தடுமாறினார். பதவிக்காக சரித்திரத்தில் தந்தைக்கும் மகனுக்கும் நடந்த இப்படிப்பட்ட ஜாலங்கள் அநேகம் உண்டு.

புதுமையான நிகழ்ச்சிகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் கேள்விகளை பழைய பஞ்சாங்க மாடலில் கேட்காமல் புதுவருடக்காலண்டர் டைப்பில் எழுதுங்கள். பேனாவின் முனை பேப்பரை முத்தமிடுமுன் சிறப்பான கேள்விகளுக்கு பத்துரூபாய் பரிசு உண்டு என்பதையும் மறந்துவிட வேண்டாம்.

C. ராணிபாய் சிங்கப்பூர் 5.

கடவுள் எப்போது சிரிப்பார்? எப்போது அழுவார்?

அழகான மனைவி நள்ளிரவில் கணவனின் நினைவாக இருக்கும் சமயம் கணவன் தாசியிடம் சிற்றின்பப்பாடத்தை தயார் செய்யும்போது கடவுள் அவனைப்பார்த்து சிரிப்பார்!

பிரசவத்தின் போது தாயின் வயிற்றில் குழந்தை வெளியே வரமுடியாமல் குறுக்கே படுத்தபடி இறந்துவிடும் சமயம் ஆண்டவன் அழுவார்.

*

N. லலிதா சிலோன் 3.

மெத்தை என்பது என்ன?

குழந்தைகளுக்கு அது விளையாட்டு மைதானம். நோயாளிகளுக்கு சாகும் வரையில் தூங்கும் தொட்டில். நடிகைகளுக்கு பணத்தை வாரி வாரிக் கொடுக்கும் பொன் விளையும் பூமி. கணவனும் மனைவியும்விடியும் மட்டும் தங்குமிடம்!

*

K ராஜேஸ்வரி பம்பாய் 6.

உலகத்திலேயே அழகான ரோடு எது?

நடிகைகளின் புருவங்கள்!

மரம் செடி கொடிகளில் தோன்றாத அதிசயமான பூ எது?

சிரிப்பூ! எந்தப் பெண்ணும் இந்தப்பூவை தலையில் வைத்துக்

கொள்ள முடியாதே! வாயிலேயே தோன்றி வாய்க்குள் மறைந்துவிடும் பூ!

*

R. R. பாலா. பெங்களூர் 3.

மர்லின் மன்ரோவின் இடது கன்னத்தில் ஒரு மச்சம் உள்ளதே அதன் பொருள் என்ன?

பெண்களுக்கு இடது கன்னத்தில் ஒரு மச்சம் இருந்தால் எவரையும் மதிக்காமல் இருப்பார்கள். வாழ்க்கையின் மத்திய காலத்தில் இவர்களுக்கு கெட்ட பெயர் உண்டாகும். அதிகமான செல்வம் வரும். ஆனால் குழந்தைகள் பிறந்தால் சில குழந்தைகள் இறந்துவிடும். இளமையில் இவர்கள் வறுமையால் வாட நேரிடும். மர்லின்மன்ரோ வாழ் நாளில் பட்ட கஷ்டங்களுக்கு இந்த இடது பக்க மச்சமேதான் காரணம். வாழ்க்கையின் சென்டர் வயதான 36ல் இறந்து விட்டாளே! தயாரிப்பாளர்களிடம் கெட்ட பெயரை ஏற்படுத்திக்கொண்டாளே!

*

இருசகோதரர்கள் திருமங்கலம்.

நடிகர்கள் பிளாக் மார்க்கட்டில் பணம் வாங்குவது உண்மை தானா?

பிரபல நடிகர்கள் ஒரு படத்துக்கு மூன்று லட்சம் வாங்கினால் ஒப்பந்தத்தில் ஒரு லட்சம் என்று தான் போடுவார்கள். பாக்கிப் பணத்தை பிளாக்கிலேயே வாங்கிக்கொள்கிறார்கள். இந்தப்பணத்தில் தங்கக் கட்டிகள் வாங்குகிறார்கள். ஐஸ் போட்ட ஆப்பிள் வாங்க முடிகிறது. தனக்கும் தன்னுடைய காருக்கும் தண்ணிபோட உதவுகிறது. செக்ஸ் வகையில் செலவாகிறது. சர்க்காருக்குச் சேர வேண்டிய பணத்தை இப்படிப் பாழாக்கும் நடிகர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல மாட்டோமே!

*

M. தர்மர் மதுரை 1.

T. S. பாலையா, ராசகோபால், வி. கே. ராமசாமி, வீரப்பா, பிரேம் நசீர் இவர்களை யெல்லாம் எங்கே காணோம்?

பாலையா M. R. ராதாவின் பாக்கட்டில் இருக்கிறார். ராஜ கோபால் ராதாவின் காலடியில் நசுங்கிப்போய் விட்டார். ராமசாமி ராதாவின் சிகரட் பாக்கட்டில் கிடக்கிறார். ராதாவின் பின்னால் வீரப்பா ஒளிந்துகொண்டிருக்கிறார். பிரேம்நசீரைத்தான் ராதா கண்ணாடியாகப் போட்டிருக்கிறார். ராதாவிடும் மூச்சில் உருண்டோடிப்போன உதவி நடிகர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்! சாகாமல் சாகிறார்கள்!

*

சின்ன பெர்னட்ஷா விருதுநகர்.

சினிமாவில் M. R. ராதா பெண்களை விரட்டுகிறாரே தன்னுடைய வீட்டிலும் அப்படித் தானா?

செப்டம்பர் மாதம் 16-ம் தேதி ராதா தன்னுடைய மானேஜர் கல்யாணத்துக்கு மதுரைக்குப் பக்கத்திலுள்ள வில்லாபுரத்திற்கு வந்திருந்தார். கல்யாண வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள வீட்டில் ராதா ஹாயாகயிருந்தபோது அவருடைய மனைவியார் சிறிது தூரத்தில் காரில் வந்து இறங்குவதைக் கண்ட ராதா விறு விறு என்று நடந்து சென்று மனைவியை வரவேற்றதைப் பார்த்தால் ஒரு ஆபீசரைப் பியூன் எதிர்கொண்டு பார்ப்பதைப் போன்றல்லவா இருந்தது. வீட்டு

சென்ட்ரல் கவர்மெண்டுக்கு ராதா அடங்கி நடக்க ஆரம்பிச்சிட்டாரே! அவருடைய மனைவியார் ஒவ்வொரு கையிலும் டசன்கணக்கில் வளையல்போட்டு வந்திருந்தாரே! அந்த அம்மையார் போட்டிருந்த நகை நட்டுக்களை அரை லட்சத்துக்கு மதிக்கலாமே!

*

M. சாமிராஜ் திண்டுக்கல்.

அவனு இவன் ஒரு படமா?

டைரக்டர் பாலசந்திரனுக்கு மட்டும் அது ஒரு படம். இதைப் போல் தயாரிக்கப்போகிறவர்களுக்கு அது ஒரு பாடம். படம் பாத்த ரசிகர்களுக்கு அது ஒரு கண்டம். படம் நடக்கும் தியேட்டரில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு சோதனை காலம். கறுப்புக்கண்ணாடி போட்டுக் கொண்டு பார்க்கவேண்டிய படம் – ஓசியில்!

*

மா. கண்ணன் ஈரோடு.

சரோஜாதேவி, தேவிகா இருவரில் யாரை மணக்கலாம்?

ஓ ஹோ! நம்ம பள்ளி டீச்சர் சரோஜாதேவியைத்தானே கேக்குறீங்க. அந்தப் பொண்ணுக்கு போன ஆவணியில்தான் கல்யாணம் நடந்தது. பரவாயில்லை. போர்ட்டர் பொன்னுசாமி மகள் தேவிகாவைக் கட்டலாம். தலைமட்டும்தான் வழுக்கை அந்தப் பிள்ளைக்கு வயது முப்பதுகூட ஆகலியே. நீங்க வந்தீங்கன்னு போர்ட்டர் கவலை நீங்கிடும். நாங்க வேணும்னு ரெக்கம்டேஷன் செய்றோம். ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்துலேயே கல்யாணத்தை முடிச்சிடலாம்! டாட்டா!

*

S. ஹமீத்சுல்தான் சென்னை 13.

இந்தியாவில் இப்பொழுது ஆங்கிலேயர் ஆட்சிஇருந்தால்?

ஓடும் ரயிலில் சாராயக்கடை இருக்கும். ஒவ்வொரு வார்டுகளிலும் தாசிவீடுகள் இருக்கும். கிராமங்களில்கூட டூரிங் டாக்கீசில் இங்கிலீஷ் நிர்வாணப்படங்கள் தான் ஓடும். இன்று இருக்கும் அணைக்கட்டுகளைக் காணமுடியாது. இன்று மந்திரிகளாக இருப்பவர்கள் சிறையில் இருப்பார்கள். சிறையில் இருக்கவேண்டியவர்களில் சிலருக்கு மந்திரி பதவி கிடைக்கும். சுகாதாரம் குறைந்து சூதாட்டம் நிறைந்துவிடும். புதுப்புது கோவில்கள் உண்டாகும் பள்ளிக்கூடங்கள் உண்டாகாது. ஆண்கள் பல மனைவிகளோடு சட்டப்படி கும்மாளம் போட்டுக்கொண்டிருப்பார்கள்!

*

V. K. சுப்ரமணியம் சிலோன்.

எனது கையில் ஆயுள் ரேகையின் மத்தியில் ஒரு புள்ளி இருக்கிறது. பலன் என்ன?

கருப்புப்புள்ளியாக இருந்தால் அந்த வயதில் வியாதி உண்டாகும். எதிர்பாராத ஆபத்தும் ஏற்

கில்பக்
மூட்டைப்பூச்சிகளை ஒழிக்க உத்திரவாதமுள்ளது

படலாம். புள்ளி சற்று லேசாக இருந்தால் பணக்கஷ்டமும் குடும்பக்கவலைகளும் உண்டாக லாம். இந்தப்புள்ளிகள் வெள்ளை யாக இருந்தால் அவைகளால் நன்மைதான் ஏற்படுமே தவிர கெடுதல்கள் ஏற்படாது.

*

சி. சு. தேவராசன் சிறுதையூர்.

இந்த உலகத்தில் பெண்கள் விரும்பாத பொருள் ஏதாவது உண்டா?

மாமியார் என்ற பொருளை பெண்கள் விரும்புவதில்லையே!

*

காட்டும் அன்புக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

கணவனிடம் அன்பைக் காட் டும் சமயம் அவளுக்கு எண்ணி யது உடனே கிடைத்துவிடும். கடவுளிடம் அன்பைக் காட்டும் சமயம் கடவுள் அவளிடம் ஏமாறு வதில்லை.

*

திராவிடத்தம்பி இலங்கை.

படித்தவன் யார்? படித்தவர் யார்? படிக்காதவன் யார்? படிக் காதவர் யார்?

மற்றவர்களுக்குப் புரியாதபடி கையெழுத்துப் போடுபவன்தான்

நடிகரின் மனைவி: கறுப்புப் பணம் வாங்குகிறீர்கள் என்பது உண்மை தான் போலிருக்கிறது நோட் டெல்லாம் ஒரே கறுப்பா இருக் கிறதே!

நடிகர்: அட நீ ஒண்ணு பேனு மூடி கழன்று ரூபாய் நோட்டெல்லாம் மை ஆகி விட்டது!

எஸ். ஆர். துரைசாமி இலங்கை.

எம். ஜி. ராமச்சந்திரனுடைய டெலிவரி நம்பர் என்ன?

எம். ஜி. யாருக்கு இதுவரை டெலிவரியே ஆகவில்லையே. இரண்டு மனைவிகளைக் கூட கட் டிப்பார்த்தார். ஒரு குழந்தை கூட பிறக்கவில்லை. ஏழை களுக்கு பலவித நன்மைகளைச் செய்யட்டும் என்பதற்காக இறை வன் அவருக்கு டெலிவரியே இல் லாமல் செய்துவிட்டாரே!

*

M. சிங்காரவேலு சிலோன்.

ஒரு பெண் கணவனிடம் காட் டும் அன்புக்கும், கடவுளிடம்

படித்தவன். சாதாரணமாக யாரும் படிக்கக்கூடிய படி தெளி வாகக் கையெழுத்திடுபவர்தான் படித்தவர்!

கையெழுத்துப் போடு என்று சொல்லும்போது போஸ்ட் மேனி டம் இளித்தபடி கட்டைவிரலைக் காட்டுபவன்தான் படிக்காதவன். தபாலில் என்ன எழுதியிருக் குன்னு படிச்சிச் சொல்லு தம்பி என்று மரியாதையாகச் சொல்லு பவர்தான் படிக்காதவர்!

*

B. கல்யாணசுந்தரம் ஈரோடு.

பஞ்சாயத்தார் ஐவருக்கும் பிடித்தமான பத்து தமிழ்சொற் கள் எவை? ஏன்?

உண்மை, அழகு, பணம், இறப்பு, கற்பு, மனைவி, தாய், தந்தை, கல்வி, குழந்தை! ஏன் என்று சொல்லாமலேயே தெரியுமே!

*

S. S. D. ராஜன் சிறுதையூர்.

அண்ணாவின் கைரேகையைப் பார்த்து உங்களால் தி. மு. க. வின் எதிர்காலத்தை சொல்ல முடியுமா?

முடியும். அண்ணாவின் புகழ் கடைசி வரைக்கும் நிலைக்குமா என்பதையும், அண்ணாவின் முடிவு ஏசுவைப்போல், காந்தியாரைப்போல், ஆப்ரகாம் லிங்கனைப்போல் இருக்குமா அல்லது புத்தரைப்போல் இருக்குமா என்பதையும் சொல்ல முடியும். அண்ணாவின் ஆயுளைக் கரெக்ட்டாகச் சொல்லுவோமே! அண்ணாவின் ஆயுளில் தானே தி. மு. க. அடங்கியிருக்கிறது.

*

யு. எம். எஸ். ஹனன் இலங்கை.

பெண்கள் திருமணமின்றி வாழமுடியுமா?

வாழலாம். கர்ப்பத்தடை முறைகளை அடிக்கடி சந்திக்காமல் இருக்கவேண்டும். தன்னையுமறியாமல் மாதவிடாய் திடீரென்று நின்றுவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். தப்பித் தவறி ஜன்னல் பக்கமாக பக்கத்து வீட்டுக்காரரும் அவருடைய மனைவியும் கனவு உலகத்தில் இருப்பதைப் பார்த்துவிடக் கூடாதே! கல்யாணம் நடக்காத ஊரில் குடியிருக்கவேண்டுமே!

*

P. N. பார்த்தசாரதி வந்தவாசி.

இந்த உலகத்திலேயே மிகவும் நல்லவன்யார்? கெட்டவன் யார்?

பிறந்ததும் அன்றைக்கே இறந்துவிடுபவன் தான் நல்லவன்! உலகத்தைப் பார்க்காமல் தாயின் வயிற்றில் இறந்து தாயையும் கொன்றுவிடுகிறானே அவன்தான் கெட்டவன்!

*

V. சுப்பையன் திருவனந்தபுரம்.

பெண்களுக்கு மாதத்தில் ஒரு தடவை வருவதும். மாமாங்கத்திற்கு இரண்டு தடவை வருவதும் எது?

மாதத்திற்கு ஒரு தடவை வருவது மாதவிடாய். மாமாங்கத்திற்கு இரண்டு தடவை வருவது பொதுத் தேர்தல்.

நடிகையின் கணவர்: சுவாமிஜி என்னை வாழ்த்துங்கள்!

சாமியார்: கவலை கொள்ளாதே கூஜா தூக்கும் இந்த கரங்கள் விரைவில் கமண்டலம் தூக்கும் பிற்கால வாழ்வுக்கு இது ஒரு நல்ல பயிற்சி! நானும் ஒரு காலத்தில் உன்னைப்போல் ஒரு நடிகையின் பின்னால் திரிந்தவன்தான் அப்பனே!

இரா. தியாகராசன் திருச்சி 3.

16-7-30-ல் பிறந்தேன். எதிர் காலம் எப்படி என்பதை...?

புதிய விஷயங்களைக் கண்டு பிடிக்கும் சக்தி அதிகமாக இருக்கும். வியாபாரத் துறையில், முக்கியமாக யந்திர சம்பந்தப்பட்டவைகளில் பணத்தை ஏராளமாக சம்பாதிப்பீர்கள். இளமையில் கல்யாணம் செய்துகொண்டால் மனைவியை விட்டுப் பிரிந்து வாழ வேண்டிய நிலைமை ஏற்படும். புதிய நண்பர்களோடு பழகும் போது கவனமாக இல்லாவிட்டால் அவர்களுடைய கெட்ட குணங்கள்வந்து குடிபுகுந்து பல ஏமாற்றங்கள் வரும்.

முக்கியமான நம்பர் 2, 7.

நல்ல தேதிகள் 11, 16, 20, 25 29.

உங்களுடைய 16, 20, 25, 29 34, 38, 43, 47, 52, 56, 61-வது வயதுகளில் நல்ல சம்பவங்கள் நடைபெறலாம்.

*

K. அர்ச்சுனன் துலுக்கபட்டி.

சில போலீஸ்காரர்களைக் கண்டு பயந்து போனேன். பிறகுதான் கனவு என்று தெரிய வந்தது. என்ன விசேஷம்?

கனவில் போலீஸ்காரர்களைக் கண்டால் உங்கள் குடும்பத்தில் கலகம் ஏற்பட்டு பிறகு அமைதி உண்டாகும். வீணாகக் கலாட்டாவை அடக்க கனவில் கண்ட போலீசுக்கு போன் செய்துவிடாதீர்கள்.

*

பி. குமாரசாமி திருவெற்றியூர்.

தண்ணீரில் நாம் எதனால்நீந்த முடிகிறது?

நம்முடைய உடலில் உள்ள கொழுப்பு ஜலத்தைவிட லேசாகவும், சுவாசப் பைகளில் காற்றும் இருப்பதால் நாம் நீந்துகிறோம். வாழ்நாளெல்லாம் வாழ்க்கைக் கடலில் நீந்திக்கொண்டுதானே இருக்கிறோம்.

*

M. A. சிக்கந்தர் B.A. மதுரை 1.

மர்லின்மன்றோ இறந்ததைப் பற்றி தங்கள் கருத்தென்ன?

நடிகை உலகத்திலிருந்து ஒரு நிர்வாண உருவம் தொலைந்தது என்று கருதலாமே! லாஸ் இருந்தாலென்ன போனாலென்ன!

*

K. L. கன்னியப்பன் மலாயா.

சினிமாப்பெண்கள், குடும்பப் பெண்களாக முடியுமா?

முடியாது. சினிமாப்பெண்கள் கல்யாணமான பின்பும் நடிக்கிறார்கள். காதல் சீன்களில் கையைப் பிடிக்கவும் கட்டி அணைக்கவும் இடம் கொடுக்கிறார்கள் ஒரு குடும்பப்பெண் இப்படி மற்றவர்களுடன் இருக்கக் கண்டால் அதற்கு என்ன பட்டம் என்பது தெரிந்த விஷயம்தானே. குடும்பப் பெண்கள் வேண்டுமானால் சினிமாப் பெண்ணாக மாறலாம். நீங்க இந்தியாவரும் சமயம் M. R. ராதாவிடம் இது பற்றி ஐடியா கேட்டுப்பாருங்களேன்!

*

N. அல்லாபிச்சை இளையாங்குடி

வீடுவரை...? வீட்டில் இருக்கும் வரை...?

வீடு வரை நிம்மதி! வீட்டில் இருக்கும் வரை தொந்தரவு!

மு. மாரியப்பன் பல்லடம்.

உண்மைத் தொழிலாளி யார்? அவன் விருப்பம் என்ன?

மனிதனுடைய இரண்டு கண்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் சம்பளம் வாங்காமல் எல்லா விஷயங்களிலும் உழைக்கும் உண்மைத் தொழிலாளி இவன் தான். அவனுடைய விருப்பம் இயற்கைக்காட்சிகளைக் கண்டு ரசித்தபடியே இருக்கவேண்டும், நல்லவைகளையே படிக்கவேண்டும் பிறர் மனைவிகளைப் பார்க்கவே கூடாது என்று தான் விரும்புகிறான். எங்கே, அவனை சும்மா விடமாட்டேங்கிறாங்களே! வாழ்க்கையெல்லாம் அவனுக்கு ஏமாற்றம் தானே!

*

கோ. பார்த்தசாரதி
திருநெல்வேலி 6.

என்னுடைய வலதுகை நடு விரலின் மேல் வரையில் கருப்பு மச்சம் இருக்கிறதே?

சிரமமான பொறுப்பில் இருந்து வரவேண்டிய நிலைமை இருக்கும். அதனால் உங்களுக்கு நன்மையே உண்டாகும். தைரியமாக இருக்கலாமே!

*

சி. ரமேஷ் பட்டுக்கோட்டை.

நடிகை மதுபாலாவைக் கனவில் கண்டேன். எப்படி?

நடிகையைக் கனவில் கண்டால் வாழ்க்கையில் வெற்றி ஏற்படும். மதுபாலா விவாகரத்து செய்து விட்டு உங்களை மணப்பார் என்று மனப்பால் குடிக்கவேண்டாம்!

*

S. நவநீதன் திருப்பூர்.

கனவில் எனக்கு ஒருவர் தாம்பூலம் மடித்துக் கொடுப்பதாகக் கண்டேன். இரவு மூன்று மணி இருக்கும்?

இப்படிப்பட்ட கனவு கண்டால் உங்களுக்கு வேறொரு பெண்ணுடன் பழக்கம் ஏற்படும் என்று பொருள். எந்தப் பெண்ணுடைய வாழ்க்கை நாசமாகப் போகிறதோ!

*

V. மணிவண்ணன் காஞ்சீபுரம்.

உலகத்திலேயே பெரிய கடிகாரம் இருகிறதா?

அமெரிக்காவில் இருக்கிறதே! நியூயார்க்கில் உள்ள இந்த கால்கேட் கடிகாரத்தின் பெரியமுள் 29 அடி 3 அங்குல உயரமும், சிறிய முள் 19 அடி 8 அங்குலமும் உள்ளது. இரண்டுமுள்ளின் எடை 3925 பவுண்டு. பெண்டுலம் 8 அடி நீளம். மின்சாரத்தால் ஓடும் இந்தக் கடிகாரத்தில் 345 விளக்குகள் உள்ளன. நம்ப நாட்டில் நடைபெறும் மகாநாட்டில் தானே இத்தனை விளக்குகளைப் பார்க்க முடிகிறது!

*

G. மனோகரன் சென்னை 8.

என் நண்பருடைய கையின் கட்டை விரலுக்கு அடியில் உள்ள பாதத்தில் முக்கோணக் குறி இருக்கிறதே?

கட்டை விரலுக்கு கீழே உள்ள பாகம் சுக்கிரமேடு என்பது. சுக்கிர மேட்டில் முக்கோணக் குறி இருப்பதால் உங்கள் நண்பர் காதல் சம்பந்தமான விஷயத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்று அர்த்தம். முக்கோணக் குறியை வைத்துக் கொண்டு யாரை யாவது காதலித்தால் அந்தக் காதல் வெற்றியடையாது என்று சொல்லி விடுங்கள்.

சிவராஜ் இலங்கை.

சிலர் தங்கள் காதலிகளிடம் உனக்காக என் உயிரை வேண்டுமானாலும் தருகிறேன் என்று சொல்லுவது எதற்காக? யாராவது அப்படி உயிரைக் கொடுத்திருக்கிறார்களா?

காதலர்கள் தங்கள் உயிரைத் தவிர மற்ற பொருள்களையெல்லாம் பழைய காதலிகள் பறித்துக்கொண்டு விட்டதால் தான் கடைசிக் காதலியிடம் அப்படிக் கூறுகிறார்கள். காதலியை அடையாததினால் உயிரை விடுபவர்களும், காதலியை அடைந்தபின் உயிரை மாய்த்துக்கொள்பவர்களின் பட்டியலும் பத்திரிக்கைகளில் இடம் பெற்றுக்கொண்டே வருகிறதே!

*

H தேவசகாயம் தூத்துக்குடி.

முத்தம் கொடுப்பது நல்லதா?

அமெரிக்க வாலிபர்கள் 4 மாணவர்களையும், 20 பெண்களையும் வைத்து முத்த ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அதன்படி ஒரு முத்தம் கொடுத்தால் வாழ்க்கையின் வயதில் 3 நிமிடங்கள் குறைந்து விடுவதாகக் கண்டுபிடித்திருக்கிறார்களே. நம்முடைய மாணவர்களை இந்த ஆராய்ச்சியில் விட்டால் பள்ளிக்கூடங்கள் காலியாகக்கிடக்குமே!

*

கி. மணிவண்ணன் கோவை 12.

மணப்பெண்ணைப் பார்த்து எப்படித் தேர்ந்தெடுப்பது?

முகம் பருத்து இருக்கக் கூடாது. இருந்தால் அப்பெண்ணிடம் கெட்ட குணம் இருக்கும். சிறுத்த முகமாக இருக்கவேண்டும். கண்கள் ஒன்று சிறுத்தும் இன்னொன்று பருத்தும் இருந்தால் கொடியவள். கண்கள் வட்டமாக இருக்கவேண்டும். மூக்கானது ரொம்பவும் சிறியதாக இருக்கக்கூடாது. அப்படியிருந்தால் சிற்றின்ப ஆசை குறைவாக இருக்கும். மூக்கு சற்று நீண்டே இருப்பது நல்லது.

வாய் சிறுத்து அழகாக இருப்பது நல்லது. வாய் கறுப்பாக இருந்தால் சீக்கிரத்தில் வறுமையான வாழ்வு வரும். இப்படிப்பட்ட மணப்பெண் உங்களுக்கு கிடைக்கும் போது அந்த ஆண்டு கி. பி. 2000 மாக இருக்குமே!

*

P. மணி; சென்னிமலை.

கனவில் நடக்கும்போது செருப்பில் ஒட்டை விழுவதாகக் கண்டேன்?

பழைய செருப்போடு நடப்பதாகக் கண்டால் வாழ்க்கையில் தரித்திரமான நிலைமை ஏற்படும். டோண்ட் ஒர்றி மணி. பெர்னாட்ஷா கூட முதலில் ஒட்டைச் செருப்போடுதான் திரிந்தார்.

*

பூபதி; மதுரை.

வானத்தில் பறப்பதைப்போல் கனவு கண்டேன்?

கனவு கண்ட நேரத்தை சொல்லாமல் விட்டுவிட்டீர்களே. பறப்பதைப்போல் கனவு கண்டதால் உங்களுக்கு விரைவில் சாவு சங்கதி வரும்!

*

அ. வெ. சேதுராமன்;
சென்னை-11.

ஆசைத்தம்பியின் அரசியல் பற்றி தங்கள் அபிப்ராயம் என்ன?

சென்ற செப்டம்பர் மாதம் ஆசைத்தம்பி ஒரு பார்ட்டிக்கு கடன் பாக்கியைக் கொடுக்க வேண்டிய தேதியன்று M. R. ராதாவிடம் சென்று சாமர்த்தியமாக ராதாவின் காரை ஒரு இடத்திற்குப் போய் வரவேண்டும் என்று சொல்லி வாங்கிக்கொண்டு போய் அந்தக்காரை கடன்காரரிடம் ஒப்படைத்ததாகவும், தம்பி தன்னையே ஏமாற்றிவிட்டதாகவும், மறுநாள் தேடிப்பிடித்து கேட்டதாகவும் ராதா ஒருவரிடம் சொன்னதைக் கேட்டோம். அரசியலுக்கும் ஆசைத்தம்பிக்கும் எவ்வளவு இடைவெளி விழுந்து விட்டது பார்த்தீர்களா!

*

S. S. தமிழ்மதி; சிறுதையூர்.

நடிகைக்கு யார்மேல் கண்?

வீட்டில் இருக்கும்போது நாய்களின்மேல்! வெளியே புறப்படும் சமயம் தாயார்மீது! காரில் போகும் சமயம் பக்கத்தில் இருக்கும் டைரக்டரின் மேல் பார்வை விழும். ஸ்டுடியோவில் மேக்கப் மேனைப் பார்ப்பார். படப்பிடிப்பில் காமிரா மேனை விழுங்குவார். சூட்டிங் முடிந்ததும் கதாநாயகன் மீது பார்வையைப் போடுவது. இடையிடையே செக் வாங்கும் சமயம் பார்வையில் படத்தயாரிப்பாளர் செத்துக்கிடப்பார்!

D. அண்ணாதுரை; சென்னை-3.

இதுவரையில் காதல் சம்பந்தமாக யாருக்காவது கைரேகையைப் பார்த்து சொல்லியிருக்கிறீர்களா?

ஓ...! சென்ற செப்டம்பர்மாதம் ஒரு நண்பரின் கையைப்பார்த்து அவர் ஒரு பெண்ணைக் காதலித்து வந்து கல்யாணம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டபோது அந்தத் திருமணம் நடக்காமல் போய்விட்டது என்று சொன்னோம். அவர் ஒப்புக்கொண்டு தன் காதலி ஒரு நர்ஸ் என்றும் அவள் எதிர்பாராத விதமாக இறந்துவிட்டாள் என்றும் சொன்னார். அந்தக் காதலர் சென்னை அசோக் லேலண்ட் கம்பெனியில் வேலைபார்த்து வருபவர். காதலி சென்னை ஸ்டேன்லி ஆஸ்பத்திரியில் நர்சாக இருந்தவர்!

*

M. ஞானமாணிக்கம் கோட்டூர்.

கிராமபோன், ரேடியோ, டெலிவிஷன் இம் மூன்றையும் எவற்றிற்கு ஒப்பிடலாம்?

கணவன் - மனைவி - மாமியார் மூவருக்கும் ஒப்பிடலாம். மனைவி சொல்வதைக் கேட்டுப்பாடுபவன் கணவன். தூரத்தில் உள்ள ரேடியோ ஸ்டேஷனைப்போல் உள்ள தாயைப் பின் பற்றும்

மனைவிதான் ரேடியோ. வீட்டில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளையும் மாமியார்மூலம் தெரிந்து கொள்ளலாமே. அது ஒரு இண்டியா டெலிவிஷன்.

*

E. அருள்; சேலம்-1.

அரசியல் கட்சிப் போராட்டத்தில் மன்னிப்பு எழுதிக் கொடுப்பவர்களைப் பற்றி நாம் என்ன நினைத்துக் கொள்வது?

மன்னிப்பு எழுதிக்கொடுத்து வரும் கட்சியில் எத்தனை கோழைகள் இருக்கிறார்கள் என்று முடிவு செய்துகொள்ள வேண்டியது தான்.

*

S. மனோரமா; மதுரை-9.

டெல்லியில் பெண்கள் ஆட்சிக்கு வந்தால் முதல் சட்டம் எதுவாக இருக்கும்?

ஒரு மனைவி இருக்கும்போது இன்னொரு கல்யாணம் செய்தால், மனைவி இருக்க வேறு ஆசை நாயகியை வைத்திருந்தால் அதற்கு மரண தண்டனை என்ற சட்டம் வரும். ஆண்களுக்கு சொத்து உரிமை இல்லை என்ற சட்டமும் இயற்றப்படும். கடைசியாக மணமான பின் பிறந்த வீட்டை விட்டு இனிமேல் ஆண்கள் தான் வெளியேற வேண்டும் என்ற சட்டமும் இடம்பெறும்!

*

மு. பெ. மணிவேல்;
திருக்காட்டுப்பள்ளி.

கைரேகை பார்க்க பணம் எவ்வளவு செலுத்த வேண்டும்? முன் அனுமதி பெற்று வர வேண்டுமா?

கைரேகை பார்க்க பணம் வாங்குவதில்லை. ஆபீசில் யாருக்கும் ரேகை பார்ப்பதும் கிடையாது. கைரேகையைப்பற்றி எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக கல்யாண வீட்டில் இருக்கும் சமயம் பார்ப்போம். ரயிலில் போய்க்கொண்டிருக்கும் போது அறிமுகமில்லாதவர்களுக்கு சொல்லுவோம். சினிமா மாட்னி காட்சிக்காக க்யூவில் நிற்கும் சமயம் சில பாய்ண்டை சொல்லுவதுண்டு. பகலில் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பொழுது போக்காக பார்த்துச்சொல்லாமல் இருப்பதில்லை. இதுவரையில் 2000க்கு மேற்பட்டவர்களைச் சந்தித்துவிட்டோம். இதை எப்போதும் பஞ்சாயத்தார் பதிலில் சந்தியுங்கள். நேரில் வந்துவிடவேண்டாம்!

*

A. துரைவெள்ளைச்சாமி;
திருக்காட்டுப்பள்ளி.

நானும் என் காதலியும் சினிமாவில் நடிக்கப் பிரியப்படுகிறோம்? தங்கள் அபிப்பிராயம் என்ன?

உங்கள் காதலியோடு ஸ்டுடியோ சென்றதும் காதலியை காமிரா டெஸ்ட் செய்வார்கள். அப்போது உங்கள் காதலி சிலருக்கு காதலியாக மாறிவிடுவார். முகவெட்டு காமிராவுக்கு நன்றாக அமைந்து விட்டதும் படம் எடுப்பதற்குள் தயாரிப்பாளர் ஒத்திகை பார்ப்பார். அப்போது காதலி ஒரு குழந்தைக்கு தாயாக வேண்டிய நிலைமை ஏற்படும். பாதிப் படம் எடுத்து முடிப்பதற்குள் அட்வான்ஸ் பணத்துக்காக காதலி ஜில்லா உரிமையாளர்களின் சில நாள் மனைவியாக இருக்க நேரிடும். படம் எடுத்து முடிவடைந்ததும் படம் பெட்டிக்குள் போய் படுத்துக்கொள்ளும். உங்கள் காதலியும் நீங்களும்

பரிசுபெற்ற கேள்வி!

இரா. ஆடலரசன் சிதம்பரம்.

உலகத்திலேயே சிறந்த அறிஞன் யார்? படு முட்டாள் யார்?

பிறர் சொல்வதைக் கேட்பவன் போல் நடிப்பவன் தான் சிறந்த அறிஞன். பிறர் கேட்க விரும்பாதபோது சொல்லிக்கொண்டே இருப்பவன்தான் முட்டாள்.

நடந்தே ஊர் போய் சேர்ந்து விடவேண்டியதுதான்! காதலி தானே மனைவி இல்லையே. யார் வாழ்க்கை நாசமாப்போனல் உங்களுக்கு என்ன!

*

V. சத்தியசீலன்; நெய்வேலி.

நம்பர் 44 நம்பர் 17 இவைகளைப் பற்றி என்ன சொல்லப் போகிறீர்கள்?

முதல் உலக யுத்தத்தில் முசோலினியின் உடலில் 44 குண்டுக்காயங்கள் பட்டன. ஆஸ்பத்திரியில் முசோலினி தனக்கு மயக்கமூட்டும் குளோராபாம் வேண்டாம் என்று சொல்லி விட்டு ஒரு புஸ்தகத்தை வாங்கிப் படித்துக்கொண்டிருந்தார். பிறகு ஆபரேஷன் முடிந்து விட்டது என்று சொன்னபிறகுதான் புஸ்தகத்தை மூடினர். அது தான் 44.

ஆப்ரகாம் லிங்கனின் சமாதியை 17 தடவை தோண்டி எடுத்து மாற்றி வைத்ததைத் தான் நம்பர் 17- ஞாபகப்படுத்துகிறது!

*

P. நாராயணசாமி; சிந்திப்பட்டு.

காயகல்பம் என்ருல் என்ன?

வயதான கிழவன் நிம்மதியாகச் சாகப்போவதைத் தடுத்து மறுபடியும் இல்லற வாழ்க்கையில் சீரழிந்து வாழட்டும் என்பதற்காக நாட்டு வைத்தியர்களால் கண்டு பிடிக்கப்பட்ட மூலிகை தான் காயகல்பம் என்பது-பழைய குபேர குசேலா என்ற படத்தில் P.U. சின்னப்பா கூட இந்தக் கல்பத்தை சாப்பிட்டாரே. மனுஷன் சீக்கிரமா போய் விட்டாரே!

*

தாஜுத்தீன்; கொடிக்கால் பாளையம்.

காதலை பிறர் கண்களில் படாமல் மறைக்க முடியுமா?

காதல் கடிதங்களை தபால் காரரிடம் படித்துக்காட்டும் படி கேட்காமல் இருப்பது. இது ஒரு முறை.

பட்டப்பகலில் மாடி வீட்டில் இருவரும் எதிர் மாடியில் நின்று கொண்டு ஜாடை காட்டும் சமயம் தெருக்களில் ஜனங்கள் கூடி விடாதபடி பார்த்துக்கொள்வது. இது இன்னெரு வழி.

சினிமாவுக்குப் போகும் சமயம் காதல் கடிதத்தை காதலன் எடுத்துக் கொள்வதற்காக பின் ஜடையில் சொருகி வைத்திருக்கும்

போது டிக்கட் கிழிப்பவர் கையில் சிக்கிக்கொள்ளாதபடி கவனித்துக் கொள்வது இது வேறுவழி.

காதலனும் காதலியும் சமாதிக்குள் ஒளிந்து கொள்வது இது தான் சிறப்பானது!

*

K. சின்னு டைலர்; உதகை

வலது கையின் ஆள்காட்டி விரலுக்கு கீழ் ஒரு மச்சம் இருக்கிறது?

ஆள்காட்டி விரலுக்கு கீழே உள்ள இடம்தான் குருமேடு என்பது அந்த மச்சம் கறுப்பாக இருந்தால் உங்களுடைய செல்வமும் செல்வாக்கும் தொலைந்து, கஷ்டமான நிலைமையில்தான் இருக்க நேரிடும். ரிசர்வ் போலீசைக்கொண்டு வந்து பாதுகாத்தாலும் இந்த கருப்பு மச்ச ரௌடியின் சேஷ்டைகளை அடக்கிவிட முடியாதே!

*

புஸ்பா; ஆவடி.

கொடுங்கோல் ஆட்சிக்கும் மக்கள் ஆட்சிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

மக்கள் அனைவரும் ஒருவனால் சங்கடப்படும் வாழ்வுதான் கொடுங்கோல் ஆட்சி. ஜனங்கள் எல்லோரும் சேர்ந்து கொண்டு, ஆட்சி புரியும் சிலரை வதைப்பது தான் மக்களாட்சி என்பது.

*

S. தேவராஜ்; கோவை.

கோவில்களில் உள்ள தெய்வ விக்கிரகங்கள் பேச ஆரம்பித்தால் என்ன ஆகும்?

தன்னை வணங்குபவன் குடிகாரனாக இருந்தால்-உன் மனைவி மக்களை முதலில் கவனித்துவிட்டு வா என்று சொல்லும்.

பிக்பாக்கட் அடித்து விட்டு வருபவனாக இருந்தால்- அட பாவிப்பயலே பாக்கட் அடிச்சது அடிச்சே நல்ல மனுஷனிடமா அடிக்கணும் ஒரு கஞ்சப்பயகிட்ட அடிக்கப்படாது என்று கேட்கும்.

கற்பிழந்த பெண் வணங்கினால்-கணவனிடம் கோவிலுக்குப் போய் வருவதாகச் சொல்லிவிட்டு விபச்சாரம் செய்து முடித்துவிட்டு வந்து என் முன்னால் நிற்காதே போ என்று கூறும்.

சிரித்த முகத்தோடு குழந்தைகள் வணங்கினால் குழந்தைகளே! அயோக்கியர்கள் வந்து போகும் இடத்துக்கு இனிமேல் நீங்கள் வராதீர்கள் என்று சொல்லிவிட்டு குழந்தைகளோடு விக்கிரகங்களும் சென்றுவிடுமே!

*

S. S. கந்தசாமி; கொழும்பு-5.

நான் ஒரு உதவி போஸ்ட் மாஸ்டர். 30—10—33-ல் பிறந்தேன். எதிர்காலம் பற்றி சொல்லுங்கள்?

நீங்கள் ஜாதகத்தை அனுப்பிவிட்டீர்கள். ஜாதகம் பார்ப்பதில்லை. ஜாதகத்துக்குப் பதிலாக நியூமராலஜியின் படி சொல்லியிருக்கிறோம். உங்களுக்கு முக்கியமான நண்பர்கள் அல்லது மனைவி அல்லது காதலிமூலம் பணம் கிடைக்கும். நீங்கள் நீண்ட நாட்களாகச் செய்து வரும் தொழிலை விட்டு விட்டு வேறு தொழிலுக்குப் போக வேண்டியது வரும்.

உங்களுடைய 21- 24- 30- 33- 39-42-48-51-60-66 வயதுகளில்

குஷியான நிகழ்ச்சிகளை சந்திப்பீர்கள். 3-6 - உங்களுக்கு முக்கியமான நம்பர். மாதங்களின் 12-15-21-24-30 தேதிகளை அடிக்கடி உபயோகப்படுத்தலாமே!

*

S. பெரியதம்பி; சிவகாசி.

M. R. ராதா ஒரு படத்துக்கு எவ்வளவு வாங்குகிருர்?

முதலில் பதினைந்தைப் போட்டுக் கொள்ளுங்கள். பிறகு வரிசையாக சைபர்களைப் போடுங்கள். ஆனல் நான்கு சைபர்களுக்கு மேல் போட்டுவிடக் கூடாது. நான்கு சைபருக்கு குறைவாகப் போட்டால் ராதா கோபித்துக்கொள்வார். நாலு சைபருக்கு மேலே போட்டால் அவ்வளவு தொகையை வாங்கும் நடிகர்கள் இந்தியாவிலேயே இல்லாமல் போய் விடுவார்கள். எந்தக் காரணத்தைக்கொண்டும் சைபர்களை பதினைந்தாம் இலக்கத்தின் இடது பக்கமாகப் போட்டு விடக்கூடாது அப்படிப் போட்டால் எக்ஸ்ட்ரா நடிகர்கள் வாங்கும் ரேட்டாகிவிடும்!

*

M. மாணிக்கம்; மானமதுரை.

மந்திரி காமராஜ் சாதாரணமானவராக இருந்தும் இவ்வளவு புகழையும் கீர்த்தியையும் அடைந்த காரணம் என்ன?

காமராஜரின் வலது கையின் ஆள் காட்டி விரலுக்கு கீழே உள்ள சாலமன் என்ற குருவளையம்தான் அவருக்கு புகழையும் கீர்த்தியையும் கொடுத்திருக்கிறது. காமராஜர் எங்களிடம் கையை காட்டியதில்லை. தேனியில் நடந்த விருந்தில் காமராஜர் கலந்துகொள்ளும் சமயம் லாவகமாக இந்த சாலமன் ரேகையைப் பார்த்துவிட்டோம்!

*

K. கிருட்டிணன்; நாகர்கோவில்.

வறுமையால் வருந்தும் ஒரு ஏழைத் தொழிலாளிக்கு இனமாகக் கிடைக்கும் பத்து ருபாய்க்கு எத்தகைய மதிப்பைத் தருவான்?

சீட்டாடும் பாட்டாளியாக இருந்தால் சாப்பிடாமல் ஒரு இரவில் காலிசெய்துவிடுவான். சிங்காரிப்பிரியனுக இருந்தால் ஓர் இரவை மட்டும் வெளியே கழித்துவிடுவான் சினிமாப்பிரியனுக இருந்தால் மூன்று படங்கள் பார்த்துவிட்டு ஏமாறுவான். சீமைச் சரக்குப் பிரியனுக இருந்தாலோ வாந்தி எடுக்கும் மட்டும் குடிப்பான். சீக்குக்காரனுக இருந்துவிட்டால் நாட்டு வைத்தியருக்குப் போய்ச்சேரும் இனம் வாங்கும் சமயம் மனைவியும் கூட இருந்தால் அந்த ரூபாய் சேலையாக மாறிவிடும்!

*

டி. பாலன்; சென்னை-15.

தென்றல் வீசும் படம் போனிங்களா அண்ணுச்சி?

சத்தம் போடாதீங்க பாலன். பக்கத்துவீட்ல ஒருவர் குடும்பத்தோட போய் பார்த்துவிட்டு வந்தார். வந்ததும் வராததுமா அவருடைய மனைவி இப்படிப் பணத்தைப் பாழாக்கிவிட்டீர்களே என்று சண்டைபோட ஆரம்பிச்சிட்டாங்க. இப்படிப்பட்ட தூங்குமூஞ்சிப் படத்துக்கு பொம்பளைங்கல கூட்டிக்கிட்டுப் போகலாமான்னு வேறு கேட்டாங்க. அன்று முதல் மனுஷன் வெளியேதான் கட்டிலைப்போட்ட

படி படுத்துவர்ராரு தம்பி! பாவம் சிவில்வார் இன்னும் ஓயவில்லே!

*

M. துரைசாமி; திருநெல்வேலி-6

பணமும், காதலும் இல்லாவிட்டால் உலகம்...?

பணம் இல்லாவிட்டால் லோபிகள் அத்தனை பேரும் மடிந்து விடுவார்கள். காதல் இல்லாமல் இருக்குமானால் மணமாகாத வாலிபர்கள் பைத்தியமாக உலாவுவார்கள். மணமுடித்துக் கொண்டவர்கள் இரவில் மட்டும் கண் விழித்தபடியே இருப்பார்கள்!

*

கி. நடராஜன்; பொள்ளாச்சி.

டைரக்டர் ஸ்ரீதர் காதலிக்க நேரமில்லே படத்துக்கு கதா நாயகன் தேர்வு நடத்தியபோது பட்டதாரிகள் கலந்து கொண்டார்களா?

I. A. S. படித்தவர்கள் மூன்று பேரும், B. A., B. L., —B. Com — B. Sc. — M. A. — B. E. எல்லோரும் வந்தார்கள். 2000 பெண்களின் விண்ணப்பம் வந்தது. மொத்தம் 8000 பேர்கள் கலந்து கொண்டார்களே! இந்த நூற்றாண்டில் சினிமாவை ஒழித்துவிட முடியுமா?

*

சி. விஜயலட்சுமி;
பாண்டிச்சேரி-1.

பஸ்ஸில் போகும்போது வாந்தி எடுக்காமல் இருக்க என்ன செய்யலாம்?

ஆலோமீன் என்ற மாத்திரையைப் போட்டுக் கொள்ளுங்கள் வாந்தி வராது. மணமான பெண்களுக்கு இன்னொரு வாந்தி வருமே அதற்கு இந்த மாத்திரையை சாப்பிட வேண்டாம்.

T. M. அசோக்குமார்; மாயவரம்

சிகரட் குடிப்பதாகக் கனவு கண்டேன்?

எடுத்த காரியங்கள் வெற்றியடையும். வாழ்க்கை நன்றாக அமையும். என்ன சிகரட் பிடித்தீர்கள். எம். ஆர். ராதா மாதிரி பிளேயர்சா!

*

J. விஸ்வநாதன்; சிதம்பரம்.

என் மனைவி கனவில் கப்பலைக் கண்டாள். என்ன விசேஷம்?

மணமான பெண்கள் கப்பலைக் கண்டால் ஆண்குழந்தை பிறக்கலாமே! இதுதான் முதல் தயாரிப்பா விஸ்வம்!

*

அ. நல்லதம்பி;
கொடைக்கானல்.

காட்டில் சிங்கத்தைப் பார்த்து விடுகிறோம். அப்போது அந்த சிங்கம் பாயப்போவதை எப்படி அறிந்து கொள்வது?

சிங்கம் பாய்வதற்கு முன் அதன் வால் மேலே திடீரென்று எழுந்து சுழலும். அதன் கண்கள் அகலமாகும். கண்களில் பச்சை நிறம் அதிகமாகும். அதன் உடல் குறுகும். கடைசியில் அதன் அடிவயிறு சுருங்கும். அப்போது பாயும். பாயும்போது பார்த்து சற்று விலகி விட்டால் அதனால் நம் மீது பாய முடியாமல் போய்விடும். இதெல்லாம் யார் கவனிக்கப் போறாங்க. சிங்கம்னு சொன்னதுமே பலருக்கு பாடையைக் கட்ட வேண்டியது வருமே!

*

R. A. நாகராஜன்; மதுரை.

M. G. ராமச்சந்திரனுக்கும் எரால் பிளினுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

எம். ஜி. ராமச்சந்திரன் பெண்களை கற்பழித்ததாக இதுவரை வழக்கு நடைபெறவில்லை. எரால் பிளின் மூன்று தடவை கற்பழிக்க முயன்றதாக அவர் மீது வழக்கு தொடரப்பட்டது.

ஹாலிவுட்டில் எரால்பிளினை ஸ்திரீலோலன் என்று அழைப்பார்கள். கோடம்பாக்கத்தில் எம். ஜி. ராமசந்திரனை கரெக்ட் பேர்வழி என்று சொல்லுவார்களே!

*

கமலா, விமலா; குன்னூர்.

பெண்களில் மணமானவர்கள் காலில் மிஞ்சியை ஏன் போடுகிறார்கள்?

பல பெண்கள் கூடி இருக்கும் சமயம் பெண்பார்க்க வந்தவர் மணமான பெண்ணையே பார்த்து விட்டுப் போகாதபடி செய்வதற்காகவே மணப்பெண்ணுக்கு மிஞ்சியைப் போடுகிறார்கள். விதவைகளின் கால்களில் மிஞ்சியே இருக்காதே!

*

ரெ. ராமசாமி; மலாயா.

சில பெண்கள் மழையும், வெயிலும் இல்லாத நேரத்திலும் குடை பிடித்துச் செல்வதேன்?

தலையில் கயிற்றைப் போட்டு கட்டியிருக்கும் டோபா மயிரின் தோற்றத்தை கண்டு கொள்ளாமல் இருப்பதற்காக இருக்கலாம்.

*

வி. மதிவாணன்; தஞ்சமாலீம், மலாயா.

காதல் மன்னன் என்றால் யார்?

கட்டிய மனைவியை விட்டுவிட்டு மற்ற பெண்களோடு கும்மாளம் போட்டு விட்டு மறுபடியும் உடல் நலம் கெட்டு மனைவியின் காலடியில் வந்து கிடப்பவன்தான் காதல் மன்னன் என்பவன்.

*

M. கிறிஸ்டோர்பர்; நாகபட்டினம்

பெர்ட்ராண்ட் ரஸ்ஸலைப்பற்றி இரண்டே லயன் மட்டும் சொல்லவும்?

தன்னுடைய இரண்டாவது மனைவியை விவாகரத்து செய்துவிட்டு தம்முடைய மாணவியையே மூன்றாவதாக மணந்துகொண்ட தத்துவஞானி. ஆசிரியர்களையே நம்பக்கூடாது போல் இருக்கே!

*

மி. சிந்தாமணி; உசிலம்பட்டி.

என் கணவர் ஐந்து ஆண்டுகளாக குஷ்டத்தினால் அவதிப்படுகிறார். என் வயது 21. என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவரைப் பார்த்தால்...?

கணவர் மூன்று வருடம் தீராத குஷ்டத்தினால் பீடிக்கப்பட்டவரானால் கல்யாண ரத்து செய்து கொள்ள சட்டம் இடம் தரும். உங்கள் கணவர் ரத்தக்கண்ணீர் கதாநாயகன் நிலைமையில் இருந்தால் அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு நடவடிக்கை எடுப்பது நலம். மனம் வேறு மணத்திற்கு ஒப்புதல்அளிக்காவிட்டால் தனிமையில் வாழ்ந்தால் ஆயுள் குறைந்துவிடும்.

நளாயினியை நினைத்துக் கொண்டு கணவனைக் கூடையில் அள்ளிப்போட்டுக்கொண்டு சுற்றவோ, மந்திரி குமாரி என்ற படத்தில் மாதுரிதேவி தன் கணவனை மலை உச்சியிலிருந்து தள்ளிவிடுவதைப் போலவோ செய்துவிடாதீர்கள்!

*

புதிய வெளியீடு

மணமகள் மறைந்தாள்!
மணாளன் புலம்பினான்!
மணமேடை சிரித்தது!
மாயா ஜாலமா?
மன்மத லீலையா?

மர்மக்கைகள்

மலிவுப்பதிப்பு

120 பக்கம் :: விலை 50 காசு

கலைப்பொன்னி

(போன் நிர். 4001)

வெண்கலக்கடைத் தெரு :: மதுரை-1.

வெளியிலிருந்து வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்த செந்தில்நாதனைப் பார்த்ததும், அவன் மாமனுர் ரகுபதி, "என்னுங்க மாப்பிள்ளை, நீங்க என்ன சிறுபிள்ளைத்தனமாக நடக்குறீங்க? நீங்க செய்ற காரியம் முட்டாள்தனமானதாகவல்ல இருக்கு..." என்று கோபமாகப் பேசினுர்.

எதிர்பாராத வகையில் உண்டான மாமனுரின் இந்தத் திடீர் தாக்குதலால் திகைப்படைந்து நின்றுவிட்டான் செந்தில்நாதன்.

எதற்காக அவர் என்றுமில்லாத அளவு கோபமாகப் பேசுகிறுர் என்று செந்தில்நாதனுல் புரிந்துகொள்ள முடியவில்லை.

"ஏன்! என்ன நடந்தது? எதற்காக இவ்வளவு படபடப்புடன் பேசுறீங்க?"... என்று அமைதியாகவே கேட்டான் செந்தில்நாதன்.

"என்ன நடந்ததுன்னு வேறு கேட்குறீங்க. செய்றதையும் செய்துவிட்டு, ஒன்றும் தெரியாததுபோல நடிக்கிறுப் போலே இருக்கு." அவர் பேசிய பேச்சில் கோபம் குதித்து விளையாடிக் கொண்டிருந்தது.

எழுதியவர்:
இரா. தியாகராசன்

"உங்களிடம் நடித்து எனக்கொன்றும் ஆகவேண்டியதில்லை. என்ன நடந்ததுன்னு சொல்லாமே நீங்க பாட்டுக்கு ஆத்திரப் படுறதிலே அர்த்தமில்லை." செந்தில் நாதனும் கோபமாகவே பேசினுன். தன்மான உணர்வு தலைதூக்கி நின்றது செந்தில்நாதனிடம்.

"கோபப்படுறதிலே பிரயோசனமில்லிங்க மாப்பிள்ளை. எந்தக் காரியத்தைச் செய்தாலும், செய்யறதுக்கு முன்னுலே பின்விளைவைப் பற்றி எண்ணிப் பார்க்கிற அறிவுஇருக்கணும்..."

"பிறர் உபதேசத்தைக் கேட்டு அதன்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற நிலையில் என் சுய அறிவு மழுங்கிப் போய்விடவில்லை. என்ன நடந்தது என்பதைச்சொல்லுங்கள் முதலில்..." செந்தில்நாதன் பேச்சில் கண்டிப்புக் கலந்திருந்தது.

தந்தைக்கும் கணவனுக்குமிடையில் ஏற்பட்ட தகராறை கதவு மறைவிலிருந்து பார்த்தபடியே, முடிவு என்னவாகுமோ என்ற அச்சத்தோடு, கைகளைப் பிசைந்து கொண்டு நின்றிருந்தாள் காந்திமதி. இருவரின் கோபமான போக்கும் எந்த

அளவில் போய் நிற்குமோ என்ற அச்சம் அவளைக் கலங்க வைத்தது.

"உங்கள் நண்பன் எவனுக்காகவோ, ஐயாயிரம் ரூபாய்க்கு வட்டிக்கடையில் கூட்டுக் கையெழுத்துப் போட்டிருக்கிங்களாமுள்ள..." நிதானமிழந்தவராய் கத்தினார் ரகுபதி.

"ஆமாம், அதனாலென்ன? வியாபாரத்தில் அவனுக்குக் கொஞ்சம் நட்டமுண்டாகி விட்டது; அதனால் கடன் வாங்கினான்." என்றான் செந்தில்நாதன்

"அவன் கடன் வாங்குவதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. நீங்க ஏன் கையெழுத்துப் போட்டிங்க? யாரைக்கேட்டுப் போட்டிங்கன்னு கேக்குறேன்" என்று வெறிகொண்டவர் போல பேசினார் ரகுபதி.

"சொந்தப் புத்தியிருந்ததால் ஒருவரையும் கேட்காமல் போட்டேன்" என்று சொல்லிவிட்டு, பார்வையை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டான் செந்தில்நாதன்.

"நாளைக்கு அவன் பணம் கொடுக்கலேன்னு யார் கடனைக் கட்டுறது? கொஞ்ச நஞ்சமிருக்கின்ற என் சொத்தையெல்லாம் பிடுங்கிக் கடன்காரன்கிட்டே கொடுத்துட்டு, என்னை நடுத்தெருவில் நிக்கவைக்கலாமுன்னு பாத்திங்களா?" என்ன பேசுகின்றோம் என்றெண்ணிப் பார்க்காமல் ஆவேச வார்த்தைகளைக் கொட்டினார் ரகுபதி.

"உங்கள் சொத்தை நம்பி நானொன்றும் கையெழுத்துப் போடவில்லை. தயவுசெய்து இனியும் அதைப்பற்றி அதிகமாகப் பேசவேண்டாம்" என்று கூறிவிட்டு, கோபமாக தன் அறையை நோக்கிப் போனான் செந்தில்நாதன்.

கூடத்தில் நின்று சினங்கொண்ட வேங்கையைப் போல் உறுமிக்கொண்டிருந்தார் ரகுபதி.

ஆத்திரமாக எழுந்த சிறு பொறி, பயங்கரத்தீயாக மாறிவிட்டதை எண்ணி வருந்தி, அதைத் தடுக்கும் வகையறியாது, கலக்கத்துடன் கதவு மறைவிலேயே நின்றுகொண்டிருந்தாள் காந்திமதி!

"காந்திமதி!" என்று உரக்கக் கத்தினார் ரகுபதி.

பயந்த முயல் புதர் மறைவிலிருந்து எட்டிப்பார்ப்பது போல், கதவு மறைவிலிருந்து தலை மட்டும் வெளியே தெரியும்படியாக மெதுவாக எட்டிப்பார்த்தாள் காந்திமதி.

"கேட்டியா உன் புருஷன் பேசினதை யெல்லாம்?" தன் தந்தையின் கோபம் தணியாமல் இருந்ததைக் கண்டு, காந்திமதி பதிலொன்றும் கூறாமல் மௌனமாக நின்றுகொண்டிருந்தாள்.

கணவனுக்கும் – தந்தைக்குமிடையில் தலையிட்டு ஒரு சுமுகமான நிலையை உண்டாக்க முடியாத நிலையில் அவள் தவித்துக்கொண்டிருந்தாள். இருவரும் முன்கோபக்காரர்கள். என்ன செய்ய முடியும் அந்தப் பேதைப் பெண்ணால்?

அன்று இரவு, வழக்கம்போல் அவள் படுக்கையறைக்குள் நுழைந்த போது, செந்தில்நாதன் சிந்தனையில் ஆழ்ந்தவனாய் தலையை இருகைகளாலும் தாங்கிப்பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

பயந்து பயந்து அறைக்குள் நுழைந்த காந்திமதியை அவன் ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை. மெதுவாக அவனருகில் சென்று, அன்பாக அவன் தோளின்மீது

கைவைத்து "ரொம்ப கோபம் போல் இருக்கிறது" என்று கொஞ்சலுடன் கூறினுள். அவன் அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்துவிட்டு, மீண்டும் தலையைக் கவிழ்த்துக்கொண்டு சிந்திக்கத் தொடங்கிவிட்டான்.

அன்று பகலில் உண்டான புகைச்சல் அவனைத் திக்குமுக்கலாட வைத்துவிட்டது.

"அப்பாவின் குணம்தான் தெரியுமே, நீங்களாவது கொஞ்சம் தணிந்து போயிருக்கக்கூடாதா? அவர்தான் முன்கோபக்காரர்..." அவன் என்ன சொல்லுவானே என்ற பயத்துடன் இது போலக் கூறினுள் காந்திமதி.

அவள் பயந்தது போலவே நடந்துவிட்டது. "எதற்காக தணிந்துபோக வேண்டும்? எனக்கும் கொஞ்சம் மானம் இருக்கிறது; அதைப்பூருவும் நான் இன்னும் இழந்துவிடவில்லை".

எண்ணெய்ச் சட்டியில் போட்ட கடுகு பொரிவதைப் போல படபட வென்று பேசி எரிந்து விழுந்தான் செந்தில் நாதன்.

செந்தில் நாதனுக்கும் காந்திமதிக்குமிடையில் ஆரம்பமான பேச்சு வார்த்தைகள் முற்றி, செந்தில்நாதன் வீட்டை விட்டு வெளியேறும் நிலைக்கு வந்துவிட்டது.

"ரகுதிபதியின் மகள் தானே நீயும்? அந்த இரத்தம் தானே உன் உடலிலும் ஓடும்? தகப்பனுக்கு மகள் தப்பாமல் பிறந்திருக்கிருய். சீச்சீ...உங்கள் முகத்தில் கூட விழிக்கக் கூடாது." என்று கோபமாகக் கூறிவிட்டு வெளியேறிவிட்டான் செந்தில் நாதன்.

காந்திமதி கற்சிலைபோல் கண்ணீர் வடித்துக்கொண்டு நின்ருள். அழுவதைத் தவிர அவ

ளால் அப்போதிருந்த நிலையில் வேறொன்றும் செய்ய முடியவில்லை. அவன் கூறிய ஒவ்வொரு கொடிய சொல்லும், பழுக்கக் காய்ச்சிய இரும்பை இதயத்தில் சொருகுவது போலிருந்தது காந்திமதிக்கு.

நடிகை: என்னை மணப்பதற்கு முன் நீங்க என்ன வேலை செய்து கொண்டிருந்தீங்க!

கணவன்: "ஐஸ்" வண்டி தள்ளிக்கிட்டு இருந்தேன்.

வீட்டை விட்டு வெளியேறிய செந்தில் நாதன் திரும்பி வரவே இல்லை. ஒரு நாள், இரண்டு நாளென்று நாட்கள் ஓடி வாரங்களாகி, வாரங்கள் வளர்ந்து மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகவும் உருமாறி விட்டன.

தனியறை ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அலுவலகம் செல்வது, அலுவலகம் முடிந்ததும் அறைக்குள் வந்து அடைந்து கொள்வதுமாக செந்தில்நாதன் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தான். மாமனார், மனைவி ஆகியவர்கள் முகத்தில் விழிக்கக்கூடாதென்ற வைராக்கியம் வளர்ந்தோங்கி நின்றன அவனிடம்.

செந்தில்நாதனுக்கும், ரகுபதிக்குமிடையில் சமரசம் செய்து வைக்க முனைந்தவர்கள் எல்லோரும் இறுதியில் தோல்வியைக் கண்டனர். பிடிவாதமாக இருந்தான் செந்தில்நாதன். காந்திமதியை தற்செயலாக ஒரு நாள் கடைவீதியில் கண்டபோதும், முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டு வேகமாக அங்கிருந்து போய் விட்டான். தன் கணவன் தன்னைப் பார்த்தும் பார்க்காததுபோல் முகத்தைத் திருப்பிக்கொண்டு போய் விட்டதை எண்ணியெண்ணி காந்திமதி அன்று முழுவதும் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

காலம் ஓடியது. நத்தை வேகத்திலல்ல! மின்சார வேகத்தில்.

பிரிவின் வேதனை அவள் இதயத்தைக் கசக்கிப்பிழிந்து கொண்டிருந்தாலும், அது பிறர் கண்ணில் படாதபடி அடக்கிக் கொண்டு வாழ்ந்து வந்தாள் காந்திமதி.

செந்தில் நாதன் கூட்டுக் கையெழுத்திட்டு வாங்கியிருந்த கடன் கொடுபடாமல் இருந்தமையால் கடன் கொடுத்தவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைக்குள்ளானார்கள்.

கடன்காரர்களின் தொல்லையைத்தாங்கமுடியாமல் செந்தில் நாதனின் நண்பன், கடன் கொடுத்தவர்களுக்கு 'மஞ்சள் கடுதாசி' கொடுத்துவிட்டு நிம்மதியாக உட்கார்ந்து விட்டான்.

செந்தில் நாதனிடம் கூட்டுக் கையெழுத்து வாங்கிக்கொண்டு கடன் கொடுத்தவர்கள் மட்டும் மஞ்சள் கடுதாசிக்காக கவலைப் படவில்லை. தங்களின் கடனுக்காக செந்தில் நாதனை நெருக்க ஆரம்பித்தார்கள். இப்படி நடக்குமென்று செந்தில்நாதன் எதிர் பார்க்காததால், மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் வேதனையடைந்து கொண்டிருந்தான்.

இந்தச் செய்தி காட்டுத் தீ போல் பரவி ரகுபதியின் காதுகளில் விழுந்தது. அவர் மூலமாக காந்திமதியறிந்து சொல்லொணா வேதனைப்பட்டு தூண்டில் புழுவாகத் துடித்தாள்.

தன் தந்தையிடம், எப்படியா

வது இந்தக் கடனைத் தீர்த்து, அவருக்கு எந்த வகையான தொல்லையுமில்லாமல் செய்ய வேண்டும் என்று கூறி கண்ணீர் சிந்தி வாதாடினாள்.

"உன்னை மறந்துவிட்டு ஊதாரியாகத் திரிந்து கொண்டிருப்பவனுக்காக நீ இவ்வளவு அனுதாபப்படுகிறாயா காந்திமதி?" என்று தன் மகளைப்பார்த்து கேட்டார் ரகுபதி.

"அவர் எப்படி இருந்தாலும் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அவர் என் கணவர்; என்னை தொட்டுத் தாலி கட்டியவர். அவரோடு கூடி வாழுகின்ற வாழ்வு எனக்குக் கிடைக்காமல் போயிருக்கலாம். ஆனால், நாங்களிருவரும் கணவன் மனைவி என்பதை யாரும் மறுக்க முடியாது. எங்கள் வாழ்க்கையில் வீசிய புயல் எங்களிருவரையும் பிரித்துவைத்திருக்கிறது. என்றாவது ஒரு நாள் நாங்களிருவரும் இணைந்து வாழும் பாக்கியம் கிடைக்குமென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அப்படியே அந்தப் பாக்கியம் கிடைக்கா விட்டாலும், அவர் மனைவி என்ற பெரும் பேறுடனேயே நான் வாழ விரும்புகிறேன்".

ஆவேசம் கொண்டவளைப் போல பேசி முடித்துவிட்டு, தன் தந்தையின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள் காந்திமதி. மகளின் மனவுறுதியைக் கண்டு அதிர்ச்சியடைந்தார் ரகுபதி. பின் ஒரு முடிவுடன் ரகுபதி வெளியேறினார்.

எந்தக் கடனின் பொருட்டு பூசல் ஏற்பட்டு ஆறாண்டுகளுக்கு முன் வீட்டை விட்டு வெளியேறினானோ, அந்தக்கடன் தீர்க்கப்பட்டு, ஆறாண்டுகளை தனிமையில் கழித்துவிட்டு மீண்டும் மாமனார் வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தான் செந்தில் நாதன்.

ரகுபதியின்வீடு அன்று என்றுமில்லாத கலகலப்புடன் காட்சியளித்தது. மகளின் வாழ்வு மறுமலர்ச்சி யடைந்துவிட்டதென்று மனம் மகிழ்ந்து பூரித்துப் போயிருந்தார் ரகுபதி. பிரிவின் கொடுமைக்குக் கல்லறை கட்டியாகிவிட்டதென்று களிப்புக் கடலில் நீந்தி மகிழ்ந்தவளாகக் காட்சியளித்தாள் காந்திமதி ஆனால்...

செந்தில் நாதன் மட்டும் சூனியத்து பால் வெளியில் பிரயாணம் செய்பவன் போல், மகிழ்ச்சியற்ற நிலையில், தன் அறையைவிட்டு வெளியில்கூட தலைகாட்டாமல் வருத்தத்துடன் இருந்தான். அவன் யாரிடமும் பேசவுமில்லை.

ஒருவகையாக அன்றையப் பகல் பொழுது சென்றது. இரவின் வருகையை எதிர்பார்த்து ஏங்கிக்கிடந்த காந்திமதியின் இதயத்தில் இன்ப உணர்வுகள் பூத்து மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருந்தன.

முதலிரவன்று படுக்கையறையில் கணவனைச் சந்திக்கச் செல்லும் புதுமணப்பெண் போல, தன்னைச் சிங்காரித்துக்கொண்டு, கையில் பால் செம்புடன், காந்தி மதி, செந்தில் நாதன் தங்கியிருந்த மாடியறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள். அவளுக்



கணவன்: ஆஹா நன்றாகயிருக்கிறதே! ஏது இந்தப் புது உடை!
நடிகை: உடையா இது! நம் வீட்டுக் குடை!!

ளம் ஆனந்தத்தால் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. ஓர விழிப் பார்வையை செலுத்தி செந்தில்நாதன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்று பார்த்தாள்.

செந்தில்நாதன் படுக்கையில் குப்புறப்படுத்துக் கொண்டிருந்தான். அறைக்கதவைத் தாளிட்டு விட்டு அவனருகில் சென்றாள் காந்திமதி.

கடிகாரத்தின் டிக் டிக் என்ற சத்தத்தைத் தவிர வேறு எந்த வகையான சத்தமுமின்றி அந்த அறை அமைதியில் ஆழ்ந்து கிடந்தது.

ஆறுண்டு காலமாக பிரிவு என்ற வேதனைப் புழுக்கத்தால் அவதிப்பட்டதை மறந்து இன்பத் தடாகத்தில் நீந்தி மகிழ்ந்து இளைப்பாறலாம் என்று ஆசைக் கோட்டை கட்டியிருந்தாள் காந்திமதி. செந்தில்நாதன் நடந்து கொண்ட முறையால் அந்தக் கோட்டை இடிந்து தரை மட்டமாகி விட்டது.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. காந்திமதியின் நெஞ்சம் குமுறிக் கொண்டிருந்தது. நிம்மதியாக உறங்குபவன் போல் கண்களை மூடிக்கொண்டு அமைதியாகப் படுத்திருந்தான் செந்தில்நாதன்.

காந்திமதி தலையைத் தூக்கி தன் கணவன் தூங்கி விட்டானா என்று பார்த்தாள். அவன் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருப்பதாக அவளுக்குப் பட்டது. எழுந்துசென்றுவிளக்கைப்போட்டுப் பார்த்தாள். செந்தில்நாதன் உறங்குபவன்போல்தான் படுத்திருந்தான். மேஜையருகில் சென்று காகிதத்தை எடுத்து விறு விறு என்று எழுதினாள். எழுதி முடித்த பின் ஒருமுறை அதைப் படித்துப் பார்த்தாள். பின், அதை மடித்து மேஜை மீது வைத்துவிட்டு, செந்தில்நாதன் அருகில் வந்து, அவன் பாதங்களைத்தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டு, எரிந்துகொண்டிருந்த மின் விளக்கை அணைத்துவிட்டு சத்தம் கேட்காமல் அறைக் கதவைத் திறந்து கொண்டு அங்கிருந்து மெதுவாக வெளியேறினாள்.

உறங்குபவன் போல் நடித்து பாசாங்காகப் படுத்துக்கொண்டிருந்த செந்தில்நாதன், நடந்தவைகளனைத்தையும் ஜாடையாகப் பார்த்துக் கொண்டுதான் இருந்தான்.

நேரம் சென்றுகொண்டிருந்தது. அறையைவிட்டு வெளியில் சென்ற காந்திமதி திரும்பி வரவில்லை. அவன் மனம் துணுக்குற்றது. தான் பாராமுகமாக நடந்துகொண்டமையால் அவள் கோபமடைந்து, அந்த அறையை விட்டு வெளியில் போய் வேறு எங்காவது படுத்துக் கொண்டுவிட்டாளோ என்று எண்ணினான். மேஜையருகில் அமர்ந்து என்னவோ எழுதிக் கொண்டிருந்தாளே அது என்னவாக இருக்குமென்று அறிந்து கொள்ள ஆவல் உண்டானது. எழுந்து விளக்கைப் போட்டு விட்டு மேஜையருகில் சென்று பார்த்தான். மேஜைமீது மடித்து வைக்கப்பட்டிருந்த கடிதத்தை எடுத்து பதட்டத்துடன் படித்தான். அது அவனுக்கு எழுதப்பட்ட கடிதம்தான். பரபரப்புடன் கடிதத்தைப் படித்தான்.

ஆவித் துணைவரே! தங்கள் அன்பை எதிர்பார்த்து ஆறுண்டு காலமாய் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தேன். என் இதயத் துடிப்பின் எதிரொலி உங்கள் காதில் விழுந்திருக்காது.

ஆறாண்டு காலம் சுமை தாங்கியாக வாழ்ந்தேன். ஆமாம், என் இதயத்தில் ஏற்றிவைக்கப் பட்டிருந்த சுமையை இறக்கிவைக்க முடியாமல் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தேன். அந்தத் துடிப்பின் வேகத்தை உங்களால் உணர்ந்து கொண்டிருக்க முடியாது.

“ஆண்கள் அவசரக்காரர்கள். பெண்கள் சபல புத்தியுள்ளவர்கள்” என்பார்கள். அது நம்மைப் பொறுத்த வரையில் பொறுத்தமானதாகவே அமைந்துவிட்டது.

வாழ்க்கையில் வழக்கமாக ஏற்படக்கூடிய சிறிய பூசல்களைக் கண்டு தாங்கள் ஆத்திரப்பட்டு விட்டீர்கள். இல்லையில்லை அவசரப்பட்டு விட்டீர்கள் ஆனால் பெண்ணாகிய நான் என்ன செய்யமுடியும்? ஆண்களுக்கு ஆத்திரமுண்டானால் வீட்டை விட்டு வெளியேற முனைந்து விடுகிறார்கள். பெண்ணாகிய நான், உங்களைப்போல், அவசரமோ ஆத்திரமோ பட முடியுமா? அதனால்தான் சபலப் புத்தியுடன் உங்கள் அன்பை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தேன். என்றாவது ஒருநாள் உங்களின் பரிபூரண அன்புக்குப் பாத்திரமாவோம் என்று இன்பக் கோட்டைக் கட்டியிருந்தேன்.

ஆறாண்டு காலப் பிரிவின் வேதனையைக்கூட அந்த இன்ப நினைவுகளால்தான் ஓரளவு மறந்திருந்தேன். ஆனால்...,

ஆனாலென்ன, இயற்கையாகப் பெண்களுக்குள்ள நாணத்தைக் கூட ஒதுக்கி வைத்துவிட்டு, தங்களிடம் அன்புப் பிச்சைக்காக ஓடோடி வந்தேன். ஓடோடி வந்த என்னை எட்டி உதைத்து விட்டீர்கள். என் இன்பக்கோட்டையை இடித்துத் தகர்த்து விட்டீர்கள்.

எவருடைய அன்புக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தேனோ, அவரே என்னை அலட்சியப் படுத்திவிட்ட பிறகு, இனியும் நான் யாருக்காக வாழ வேண்டும்? ஆகவே நான் என் வாழ்க்கையை முடித்துக் கொள்வதென்று முடிவு செய்து விட்டேன்.

இறுதிவரை உங்கள் நினைவாக இருந்து உங்கள் அலட்சியப் போக்கால், ஆவியைப் முடித்துக்கொண்ட இந்த அபலையை மன்னித்து விடுங்கள்.

தங்கள் வெறுப்புக்குள்ளான

அபலை

காந்திமதி.

எங்களின் குறுகிய காலத் தயாரிப்பான “பருவக்குமரி” என்ற திரைப்படத்தில் நடிக்க வயதான கிழவிகள் தேவை! நடிகைகளின் பாட்டிகள் விண்ணப்பிக்க வேண்டாம்.

‘தயாரிப்பாளர்’

பீஷ்மர் பிக்சர்ஸ்

கடிதம் முழுவதையும் படித்து முடித்தவுடன் "காந்திமதி" என்று அவன் தன்னையுமறியாமல் கத்திவிட்டு, தட தடவென்று மாடிப்படிகளில் இறங்கிஓடினான்.

கடிதம் எழுதி வைத்து விட்டு அறையினின்றும் வெளியேறிய காந்திமதி, கீழே உள்ள ஒரு அறைக்குள் சென்று தான் அணிந்திருந்த நகைகளையெல்லாம் கழட்டி வைத்துவிட்டு, உறங்கிக் கொண்டிருந்த தன் தந்தையின் பாதங்களைத்தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டு, வீட்டைவிட்டு வெளியேறுவதற்காக வாசல் கதவை திறந்து கொண்டிருந்த சமயம், மாடிப் படிகளில் வேகமாக ஓடிவரும் சத்தங்கேட்டு தயங்கி நின்றாள். மாடிப்படிகளிலிருந்து இறங்கியோடி வந்த செந்தில்நாதன், காந்திமதியின் கையைப் பிடித்துக் கொண்டு, "என்ன காரியம் செய்யத் துணிந்து விட்டாய் காந்திமதி? இந்தப்பாவி மீது நீ இவ்வளவு அன்பு வைத்திருக்கிறாயா? என்னை மன்னித்துவிடு காந்திமதி, என்னை மன்னித்து விடு." என்று அவன் கூறி முடிப்பதற்குள் காந்திமதி, 'அத்தான்' என்றலறி, அவன் வாயை தன் தளிர்க் கரத்தினால் பொத்தினாள்.

"உன்னை அளவுக்கு மீறி தொல்லைக்குள்ளாக்கி விட்டேன் காந்திமதி. உன் அன்பைப்பற்றி நான் தவறாகக் கணக்குப் போட்டு விட்டேன், என்னை மன்னித்துவிடு..." என்று வருத்தத்தோடு கூறினான் செந்தில் நாதன்.

"மீண்டும் என்னை வேதனைக்குள்ளாக்க வேண்டுமென்பது உங்கள் ஆசையா அத்தான்? எனக்குப் புதுவாழ்வு கிடைத்து விட்டதென்று பூரித்துப்போய் இருக்கும் என்னை, மீண்டும் அழ வைத்து வேடிக்கை பார்க்காதீர்கள்." என்று கூறி, அவன் மார்பின் மீது தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

விழித்து எழுந்த ரகுபதி "இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்றார்.

பதிலொன்றும் பேசாமல், காந்திமதியை அன்புடன் அணைத்தபடியே மாடியறைக்கு அழைத்துச் சென்றான் செந்தில் நாதன். ஆறாண்டுகளுக்கு முன் மகளின் முகத்தில் கண்ட பேரொளியை அன்று மீண்டும் கண்டார் ரகுபதி. காந்திமதியும் செந்தில்நாதனும் படிகளில் ஏறிச்செல்வதையே, கண்ணிமைக்காமல் பார்த்தபடி அசையாமல் பதுமைபோல் நின்று கொண்டிருந்தார் ரகுபதி. வறண்டு போயிருந்த அவரது உதடுகள் விரிந்த காட்சி அந்த மங்கிய ஒளியிலும் நன்றாகத் தெரிந்தது.

பெண்: நானும் நாலுவருஷமா நடையா நடக்கிறேன். உங்கள் படத்திலே எனக்கு ஒரு 'சின்ன' பாத்திரமா கொடுத்து நடிக்க வையுங்கோ.

படாதிபதி: ???

புதிய வெளியீடு

பாய்ந்து வந்தது கத்தி!
பறந்து சென்றது பைங்கிளி!
படுக்கையிலே சிரிப்பு!
பாலத்திலே ஒப்பாரி!

பாலத்தடிப் பிணம்!

மலிவுப்பதிப்பு

120 பக்கம் :: விலை 50 காசு

கலைப்பொன்னி

(போன் நிர். 4001)

வெண்கலக்கடைத் தெரு :: மதுரை-1.

நம் கண்முன் பரந்து கிடக்கும் புவியிலே பல அரிய சஞ்சீவி மருந்துகள் சிதறிக்கிடக்கின்றன. ஆனால் நாமோ ஒரு சாதாரண வயிற்று வலிக்குகூட வைத்தியரின் உதவியை நாடி நோயைத் தீர்த்து கொள்ள ஏராளமாகப் பணத்தை செலவு செய்கிறோம். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் எளிய முறைகளைக் கையாண்டால் அனாவசியமாக வைத்தியரின் உதவியை நாட வேண்டிய அவசியம் ஏற்படாது. பணமும் மிச்சமாகும்.

ஒரு பொருள் பல மருந்துகள்

எவ்வளவு நாள்பட்ட கண் நோயாக இருந்தாலும் சரி, கோழி முட்டையின் வெள்ளை திரவத்தை (அம்புலி) இரண்டு சொட்டு கண்ணில் விட்டு வந்தால் போதும். மங்கிய கண் பார்வை தெளிவு பெறும். தினமும் காலை எழுந்தவுடனோ அல்லது இரவில் படுத்துக்கொள்ளும் முன்போ கோழி முட்டையின் வெள்ளை திரவத்தை இரண்டு சொட்டு கண்ணில் விட்டுக் கொண்டு அப்படியே கண்களை மூடிக்கொண்டு பதினைந்து நிமிடங்கள் படுத்திருக்க வேண்டும். மாலைக் கண், குறைந்த பார்வை, கண் எரிச்சல், நீர் வடிதல் முதலிய கோளாறுகள் நீங்கி

வைத்தியம்

கண்பார்வை தீட்சண்யம் அடையும். இம் முறையைக் கையாண்டால் ஒரே மாதத்தில் பலன் காணலாம்.

பொடுகு, சிரங்கு முதலியவைகளுக்கு

ஒரு கோழி முட்டையை உடைத்து ஒரு கிண்ணத்தில் ஊற்றிக்கொண்டு, மஞ்சள் கரு வெள்ளை அம்புலி இரண்டையும் ஒன்றாகும்படி கலககிக்கொண்டு தலையில் தேய்த்து கொள்ள வேண்டும். ஐந்து நிமிஷங்கள் ஊறிய பிறகு குளிந்த நீரால் தலை ஸ்நானம் செய்து விடலாம். ஒருநாள் விட்டு ஒருநாள் இவ்விதம் செய்து வந்தால் பொட்டு பொடுகு, சிரங்கு எல்லாம் சரியாகி தலைமுடியும நன்றாக வளரும். தலை எண்ணை பிசுக்காக இருந்தாலும் முட்டையை உடைத்து தலைக்கு தேய்த்துக் குளித்தால் சோப்பு போட்டது போல் எண்ணை பிசுக்கு நீங்கி கூந்தல் சுத்தமாகிவிடும். சாதாரணமாக குழந்தைகளுக்கு தலையில் வரும் ஒரு வித கட்டுவப்பத்து, கரப்பான்கடி முதலியவைகளுக்கும் மேற்கண்ட முறை சிறந்த பயன் அளிக்கும்.

கண்வலிக்கு

நன்றாகத் தொதித்துக்கொண்டிருக்கும் வெந்நீரில் ஒரு முட்

வீட்டுக்காரர்: இந்தாபுள்ளே! நாளைக்கி காலையில அம்மி கொத்த வந்திடு அந்தக் கழுதை கூட அம்மாவீட்டுக்குப் போய்த் தொலைந்திடுவா!

டையை நன்ருகக் கழுவி சுத்தம் செய்தபிறகு மெதுவாக போடவும். முட்டை உடைந்து விடாமல் ஜாக்கிரதையாக போட வேண்டும். சரியாக மூன்று அல்லது நான்கு நிமிஷம் பொறுத்து முட்டையை எடுத்து அதன் மேலோட்டை உரித்து எடுத்து விடவும். முட்டை பதமாக வெந்து வேகவைத்த உருளைக் கிழங்கு போல் இருக்கும். ஒரு சுத்தமான கத்தியினுல் இதை இரண்டாக வெட்டி, இரண்டு கண்களிலும் வைத்து அது கீழே விழுந்து விடாமல் இருப்பதற்காக ஒரு மெல்லிய துணியை கண்ணைச் சுற்றி கட்டிவிடவும். அப்படியேஉறங்கிவிடலாம். கண் கட்டை நீக்கியபிறகு காலையில் பார்த்தால் கண் சிகப்பெல்லாம் முக்கால் வாசி மறைந்து இருக்கும். மறுமுறையும் முட்டையை வேகவைத்துக் கட்டினுல் கண் வலி முற்றிலும் குணமாகி விடும்.

ஆரோக்கியம் அடைய

கோழி முட்டை ஒரு நல்ல 'டானிக்' போன்றது. டைபாய்டு புளூ முதலியவற்ருல் உடல் மெலிந்து சத்தில்லாமல் இருப்பவர்கள் கோழி முட்டையை தினமும் சாப்பிட்டு வரலாம். முட்டையை உடைத்து ஒரு கிண்ணத்தில் ஊற்றிக்கொண்டு சிறிது சர்க்கரை, பால் சேர்த்து ஒரு ஸ்பூனுல் எல்லாம் ஒன்று சேர நுரைவரும் அளவிற்கு நன்ருக அடித்தபிறகு அப்படியே ஊற்றிக் குடித்து விடவேண்டும். காய்ச்சியபால், பசும்பால் எது வேண்டுமானுலும் உபயோகித்துக் கொள்ளலாம். கொதித்துக் கொண்டிருக்கும் வெந்நீரில் கோழிமுட்டையை போட்டு மூன்று அல்லது நான்கு நிமிஷம் வேகவைத்து மேலோட்டை உரித்துவிட்டு, மிளகும், உப்பும் பொடிசெய்து போட்டும் சாப்பிடலாம். வேகவைத்து சாப்பிடுவது சற்று சிரமம். முட்டையை அப்படியே உபயோகிப்பதைவிட பால் சேர்த்தோ அல்லது வேகவிட்டோ உபயோகிப்பது தான் விரைவில் நல்ல பலனைத் தரக் கூடியது. களைப்பு, தளர்ச்சி எல்லாம் நீங்கி உடலும் புஷ்டியாகும் வேறு எவ்வித டானிக்கும் தேவை இல்லை. முட்டையை அப்படியே சாப்பிடப் பிடிக்காதவர்கள் 'ஆம்லெட்' செய்து சாப்பிடலாம். சாப்பிட ருசியாக இருக்கும்.

முகம் பளபளப்பாக

குளிக்கும் முன் கோழி முட்டையின் வெள்ளை அம்புலியை (திரவம்) முகத்தில் தடவி மாலிஷ் செய்வது போல் தேய்க்க வேண்டும். சற்று நேரத்தில் கடலை மாவு அல்லது சோப் போட்டு முகம் கழுவி விடலாம். ஒரே வாரம் உபயோகித்தால் கூட

போதும். முகம் பளபளப்பாக மின்னும். கோழிமுட்டை ஒரே வஸ்துதான். ஆனால் அதில் அடங்கி இருக்கும் குணங்களோ ஏராளம்.

உஷ்ணம் தணிய

ஒரு ஸ்பூன் வால்மிளகை எடுத்து காம்பு நீக்கிப் பச்சை இளநீரில் ஒரு மணி நேரம் ஊற வைத்து, இளநீரையும் வால்மிளகையும் சாப்பிட்டால் உடம்பில் அதிகமாக இருக்கும் உஷ்ணம் தணியும். தினமும் வெறும் வயிற்றில் இவ்விதம் சாப்பிட்டு வந்தால் கபச் சூட்டினால் ஏற்படும் காங்கை நீங்கிவிடும். பால் குடிக்கும் போது சர்க்கரைக்குப் பதில் பனங்கற்கண்டு, அல்லது பனவெல்லத்தை உபயோகித்தால் நல்லது. ஒரு கிண்ணத்தை சுத்தமாகக் கழுவி, கிண்ணத்தின் உள்பாகத்தில் வெண்ணெயைத்தடவி, பால் கறக்கும்போது கிண்ணத்தில் சிறிது கறந்து வாங்கி அப்படியே குடித்துவிட்டால் சூடு அறவே நீங்கி குளிர்ச்சி அடையும். காய்ந்த நெல்லிமுள்ளியை அரைத்து தலையில் தேய்த்துக் கொண்டு குளிர்ந்தநீரில் தலைக்குக் குளிக்க வேண்டும். உஷ்ணத்தினால் தலை முடி உதிர்வது நின்று வளரும்.

இருமலுக்கு

சூட்டினால் ஏற்படும் இருமலுக்கு, ஒரு டீ ஸ்பூன் மிளகை எடுத்து பொடியாக்கி, மூன்று ஸ்பூன் தண்ணீர்விட்டு கொதிக்க வைத்து கெட்டியானதும், சிறிது தேன் விட்டுக் கலந்து சாப்பிட்டால் வறட்டிருமல் நின்றுவிடும். சூடான பசும்பாலில் வேண்டிய அளவு சர்க்கரைபோட்டு மிளகை பொடி செய்து, சிறிது மஞ்சள் பொடியும் போட்டு ஒருசேர ஆற்றிய பிறகு குடிக்கலாம். சாப்பிடவும் நன்றாக இருக்கும். இருமலும் குறையும். அதிமதுரத்தைக் கஷாயம் போட்டு குடித்தால் வறட்டிருமல் தீரும். கறுப்பு உருளைத் துண்டுகளைப் போலிருக்கும் அதிமதுரப்பாலை (இது எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்) வாயில் அடக்கிக் கொண்டால், அதிகமாக இருமுவது சற்று குறையும்.

தலைவலிக்கு

முற்றிய இஞ்சியை அம்மியில் அரைத்து, நெற்றியில் பற்றிட்டால் தீராத தலைவலியும் தீரும். மிளகைப் பொடி செய்து, ஒரு கரண்டியில் அதை சிறிது தண்ணீருடன் கொதிக்க வைத்து எந்த இடத்தில் தலை வலிக்கிறதோ அங்கு பொறுக்கும் சூட்டில் பத்து போடலாம். தலைமுடி உள்ள நடுமண்டையாக இருந்தாலும் பரவாயில்லை. கொத்துக்



"இந்தக்கதையில் வரும் கதாபாத்திரங்கள் முழுவதும் கற்பனையே! இப்போது இருப்பவர்களையோ அல்லது இறந்தவர்களையோ வைத்து எழுதப் பட்டதல்ல" என்ற குறிப்புடன் கதை வந்தது.

அதைத் திருப்பி அனுப்பிய ஆசிரியர் கீழ்க்கண்ட குறிப்பை எழுதியிருந்தார்:

"நீங்கள் குறிப்பிட்டிருக்கும் அதே காரணத்திற்காகவே உங்கள் கதையைப் பிரசுரிக்க இயலாததற்கு வருந்துகிறோம்."

கடலையை வெந்நீரில் ஊற வைத்து, வெண்ணை போல் அரைத்து போட்டுக்கொண்டால் தலைவலி உடனே குணமாகும். சிறிது நல்லெண்ணையை புகையும் அளவிற்கு காயவைத்து மூன்று காய்ந்த மிளகாய், அரை ஸ்பூன் பச்சை அரிசி, பத்து மிளகுஎல்லாவற்றையும் காய்ந்த எண்ணையில் போட்டு ஒரு துண்டம் இஞ்சியைத் தட்டிப் போட்டு இறக்கிய பிறகு, மிதமான சூட்டில் தலைக்கு தேய்த்து ஸ்நானம் செய்தால் மண்டைநீர், தலைப்பளு எல்லாம் சரியாகிவிடும் நல்லெண்ணையை காய்ச்சி இறக்கியவுடன் சிறிது பச்சைக் கற்பூரத்தைப் போட்டு வெதுவெதுப்பான சூட்டில் தலைக்குத் தேய்த்துகொண்டு அதிகம் ஊறுமல் வெந்நீரில் தலை முழுகினுல் தலைகனம், மண்டைச் சளி ஜலதோஷம் எல்லாம் சரியாகி விடும்.

சுளுக்கு, வீக்கம் முதலியவைகளுக்கு

காலணு அளவிற்கு முசாம்பரத்தை பொடி செய்து ஒரு எலுமிச்சம் பழத்தை ஒரு பாத்திரத்தில் பிழிந்து, அதில் இந்த முசாம்பரத்தூளைப் போட்டுக் காய்ச்சினுல் முசாம்பரம் கரைந்து பிசின் போலாகி விடும். இதை வீக்கம் உள்ள இடத்திலும், சுளுக்குள்ள இடத்தின் மேலும் காலையிலும் மாலையிலும் தடவி வந்தால் போதும். எப்பேற்பட்ட வீக்கம், சுளுக்காக இருந்தாலும் குணமாகிவிடும்.

கட்டிகள் குணமாக

சீந்திற்கொடி இலையை அனலில் வதக்கிக் கட்டிகளின் மீது வைத்துக்கட்ட கட்டிகள் பழுத்து உடையும். கட்டிகள் உடைந்தவுடன் அவரை இலையைக் கசக்கி கட்டிகளின் மீது வைத்து கட்டினுல் உள்ளே இருக்கும் கெட்ட ரத்தம் எல்லாம் வெளியே வந்து வீக்கம் குறைந்து குணமாகி விடும். விஷ மூங்கில் இலையை விளக்கெண்ணை தடவி, அனலில் வாட்டிய பிறகு ரத்தக்கட்டியின் மீது வைத்து கட்டினுல் கட்டி உடைந்து விடும். ராஜ பிளவையாக இருந்தாலும் இதை வைத்துக் கட்டலாம்

ரத்தக்காயம், ரணங்களுக்கு

எப்படிப்பட்ட ரணமாக இருந்தாலும், நாமக் கட்டியை பொடி செய்து போட்டால் இரண்டே நாளில் ரணம் ஆறிவிடும். அடிபட்டு ரத்தம் பெருகுமிடத்தில் சிறிது சிறுமண்பொடியை அந்த இடத்தில் வைத்து அமுக்கி விட்டால் ரத்தப்பெருக்கு நின்று, காயமும் சரியாகி விடும்.

சாதாரணமாக அடிக்கடி வரக்கூடிய சில வியாதிகளுக்கான எளிய மருந்துகளை உபயோகித்து நோய்களை நாமே எளிதில் தீர்த்துக்கொள்ளலாம். நம் சக்திக்கு மீறியபோது டாக்டர் உதவியை நாட வேண்டுமே யன்றி, மற்றபடி மேலே கொடுக்கப்பட்டிருக்கும் பயன்தரக்கூடியமுறைகளைக் கொண்டு நாமே நம் குடும்பத்திற்கு வைத்திய உதவி அளிக்கலாம். இதனுல் பணச் செலவும் இல்லை. நல்ல பலனும் உண்டாகும். மேலே கொடுக்கப்பட்டிருக்கும் எளிய முறைகளைக் கடைப்பிடித்து குடும்பத் தலைவிகள், தங்கள் குடும்பத்தில் மகிழ்ச்சியை நிலவச்செய்யவேண்டும் என்பதே என் விருப்பம்.

புதிய வெளியீடு

மாளிகையிலே மணவிழா!
மயானத்திலே விருந்து!
மன்னன் மயங்கினான்!
மரணவாசல் திறந்தது!

மகராஜன் வீட்டு மருமகள்

மலிவுப்பதிப்பு

120 பக்கம் :: விலை 50 காசு

கலைப்பொன்னி

(போன் நிர். 4001)

வெண்கலக்கடைத் தெரு :: மதுரை-1.

இவைகள் பேசினால்!
ராகவன்
ஐயோ! எங்களை வாங்காதீங்க! நாங்களெல்லாம் ஒரே-புழுத்தல்!
நல்ல, இளங்-காயிங்க!
ஐயோ! நான் கால் பர்ஸ்!
பெண்ணே! இவனை நம்பாதே! இவன் காதலித்து கைவிடப்பட்டோர், கணக்கிலடங்கா! எல்லாம், எனக்குத் தெரியும். இவன் காதலிக்கெல்லாம் கடிதம் எழுதினவன் நான் தானே!
கண்ணே! நான் உன்னை கைவிட மாட்டேன்
டிக்கட் கேட்டு வாங்குங்கள்
ஐயோ! என்னை வாங்காதே! நான் கள்ள நோட்டு

லூஸ் ராஜாமணி துப்பறிகிறார்

கோமாளி

எம். ஜி. ஆர். சிவாஜியின் படம் என்றால் தினசரி சலிப்பில்லாமல் பார்க்கும் ரசிகர்கள் ஒருவரோடொருவர் மோதிக்கொள்வதையும் பார்த்திருக்கிறோம்- அவர்கள் நடிகர் பைத்தியங்கள்.

சிலர் தனக்குப் பிடித்தமான நடிகையின் போட்டோவை மணிபர்சில் கல்யாணமான பிறகும்கூட சொருகி வைத்துக் கொள்வார்கள். அவர்கள் நடிகை மீது கிறுக்குப் பிடித்தவர்கள்,

நாடகம், டீ பார்ட்டி நடக்கு முன் தனக்கு வேண்டியவர்களிடம் பல்லைக்காட்டி இலவசமாக டிக்கட் பெறுவதை வழக்கமாகக் கொண்டவர்களும் இருக்கிறார்கள்- அதுகள் ஓசிப் பைத்தியங்கள்,

ரயிலில் போகும் சமயம் வண்டியெல்லாம் காலியாகக் கிடந்தாலும் கதவுப்பக்கமாக உட்கார்ந்து கொண்டு கால்களை புட் போர்டில் வைத்தபடி பிரயாணம் செய்பவர்களும் ஒரு விதமான புட்போர்டு பைத்தியங்கள் தான்.

இப்படிப்பட்ட பைத்திய லிஸ்ட்டில் சேர்ந்தவன் தான் லூஸ் ராஜாமணி. ஒரு துப்பறியும் கிறுக்கு டிடெக்டிவ் மேதை, மர்மஅரசன், கிறுக்கன், முட்டாள், எல்லாமே அவன் தான். குத்தும் வெட்டும் எப்போதும் நடக்க வேண்டும் என்று விரும்பும் விசித்திரமான பைத்தியம்தான் லூஸ்ராஜாமணி!

மூன்லைட் ஸ்டுடியோவில் புதிதாக வேலைக்குச் சேர்ந்த ராஜாமணி போன் மணி இடைவிடாமல் அடிப்பதைக் கேட்டு சிடுசிடுப்புடன் ரிசீவரைக் கையில் எடுத்தான்.

"ஹலோ! ...... ஹலோ!"

"யார் பேசறது!"

"இது மூன் லைட் ஸ்டுடியோ தானே."

"அட பின்னே என்ன அமாவாசை ஸ்டுடியோவா. விஷயத்தைச் சொல்லய்யா" இது ராஜாமணி.

"யாரு இப்படி முணு முணுப் போடு பேசறது. நான் யாரு தெரியுமில்ல?"

"ஸ்டுடியோவை சுத்திப் பார்க்கணுங்கிற யாராவது ஒரு கிறுக்கா இருக்கும். ஏய்யா உனக்கு காதுல மிஷின் மாட்டியிருக்கா. என்ன விஷயம்?" ராஜாமணி அவசரப்படுத்தினான்.

கமலா: ஏண்டி ராதா! இன்றைக்கு சரஸ்வதி பூஜையாச்சே! நம்ம சிநேகிதி சரஸ்வதி வீட்டிலே எப்போ பூஜை செய்யப் போறாளாம்.

ராதா: தினசரி அவங்க வீட்டிலே சரஸ்வதி பூஜை நடந்து கொண்டுதானடி இருக்கு!

“சின்ன ஜமீன்தார் பேசறது. வந்து......... நடிகை ஊர்மிளா இருந்தா...... நான் கூப்பிட்டதாகச் சொல்லணும்...அவசரம்.”

“நீங்கள்லாம் மனுஷங்கதானா. சின்ன ஜமீன், பெரிய ஜமீன்னு வரிசையா மாறி மாறி நடிகையைத் தலைமை தாங்கவும், மலை மேலேபோய் சுத்திப் பார்த்து விட்டு வர கூட்டிக்கிட்டுப் போயிட்டா நாங்க கால்ஷீட் வாங்குவது எப்படி.” படக்கென்று லூஸ் ரிசீவரை வைத்து விட்டு வெளியே வந்தான்.

“என்ன ராஜாமணி, உள்ளே என்ன விஷயம்?” டைரக்டர் அவனிடம் கேட்டார்.

“பெரிய நியூசென்ஸ் சாப் போச்சு டைரக்டர். பெரிய எழவாய்ப் போச்சு. விடியறதுக்கு முன்னாலேயே போன் போடுறாங்க. ‘ஸ்டுடியோவ்ல தொழிலாளி ஸ்டிரைக் என்ன ஆச்சி’ ‘ஏழுதீபாவளியா தயாராகும் படம் ஏன் வரவில்லை’ என்று யாருமே கேட்கக்காணோம், ‘நடிகை இன்னக்கி என்ன சேலை கட்டி வந்தார்.’ ‘கல்யாணம் செய்வாளா’ ஒரு பத்திரிக்கையில் ஏற்கனவே குழந்தை உண்டென்று போட்டிருப்பது உண்மைதானா,’ ‘இப்ப வந்தா பேசலாமா’ன்னு தான் கேட்டு உயிரை வாங்குறானுங்க,’ முதலாளிபோயும்போயும்எனக்கு இந்த போன் வேலை கொடுத்தாலும் கொடுத்தாரு...” சலித்தபடி சொன்னான் டிடெக்டிவ். ஏங்க டைரக்டர் எப்படி இந்த பீல்டுல இருக்கீங்க” என்றான் தொடர்ந்து.

“பாத்தியா ராஜாமணி. எவ்வளவு மோசமான பீல்டுன்னு. ரெண்டு மாடுகளை மேய்ப்பவனுக்கு இருக்கும் நிம்மதிகூட எங்களுக்கு இல்லையப்பா. இன்னக்கி காலையில் எட்டு மணிக்கு கால்ஷீட். இது வரையில் கதாநாயகனைக் காணவில்லை. பாவம் தயாரிப்பாளர் புனுகு பூனை மாதிரி ஸ்டுடியோ காம்பவுண்டு கேட் பக்கமா உலாவியபடிதான் இருக்கார்.” என்றார் திறமை வாய்ந்த டைரக்டர்.

“பழைய ஸ்டார்களையே ஏன் கட்டிக்கிட்டு அழுகிறாங்க டைரக்டர்” லூஸ் அவரிடமிருந்து ஒரு சிகரட்டை எடுத்து வைத்துக் கொண்டான்.

“தலையில் அடிச்சி... அடிச்சி சொன்னா தயாரிப்பாளர் கேட்டாத்தானே. நம்ப சொல்லும் போதும் சரிங்கறாங்க. நடிகை சொல்லும்போது கேட்கறாங்க. முடிவில்............................ நமக்குத் தோல்விதான்” என்று சொல்லிவிட்டு கவலை தோய்ந்த முகத்துடன் டைரக்டர் சென்றார்.

“அண்ணாத்தே ராஜாமணி, உன்னை கதாநாயகி கூப்பிட்டாங்க” என்றான் அரைக்கட்டை மணி.

“டேய் பாலிஸ் பாய்! இங்கே வாடா. ஒம்பேருதானே அரைக் கட்டை மணி” அவன் சட்டைப்

பையில் உள்ள அரைக்கட்டை சிகரட்டுகளை எடுத்தபடி கேட்டான்.

"கரெக்ட் அண்ணுத்தே" அரைக்கட்டையின் வழக்கமான பதில்.

"ஏண்டா டேஞ்சர் பெல்லோ, ஸ்டுடியோவில நடிகர்கள், டைரக்டர்கள் குடிச்சிப் போடுற சிகரட் துண்டுகளையெல்லாம் பொறுக்கிக் கொண்டு போய் சைனு பஜார்ல விக்கிறயாமே. நிஜமாத் தானுடா?" லூஸ் அவன் காதைப் பிடித்து திருகியபடி கேட்டான்.

"நான் என்ன பண்றது அண்ணுத்தே முழு சிகரட் விலைக்கு வித்துப்போகுது ஸ்டுடியோவல. சரக்கு டிமாண்டா கிடைச்சா பிளாட்பாரங்களில் கிடைக்கும் பிட்டுகளையும் எடுத்து கலந்து ஜமாளிச்சிடுவேன் அண்ணுத்தே" என்ருன் மணி மளமளவென்று.

அவன் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டே லூஸ் கதாநாயகி தங்கியிருக்கும் ரெஸ்ட் ஹவுசிற்குள் நுழைந்தான்.

"வாப்பா ராஜாமணி! சௌக்கியமா" நடிகையின் தாயார் சிரித்த முகத்தோடு கேட்டாள்.

"என்னம்மா எதுக்கு கூப்பிட்டீங்க" என்ருன் லூஸ்.

"ஏம்பா உனக்கு கைரேகை பார்க்கத் தெரியுமாம்ல. நம்ப புள்ளே கையைப் பாரப்பா" என்ருள் நடிகை ஊர்மிளாவின் தாயார்.

ஊர்மிளாவின் இடது கையை ராஜாமணி கூர்ந்து சில நிமிடங்கள் பார்த்துவிட்டு ஒரு சிகரட்டை பற்ற வைத்தபடி, "நம்ப ஹீரோயினுக்கு முப்பது வயதுக்கு மேலே தான் கல்யாணம் நடக்கும்மா."

"கல்யாணம் தாமதமா நடக்கணும்னு தான் ஏழுமலையானை வேண்டிக் கிட்டேனப்பா" என்ருள் நடிகையின் தாயார் வெற்றிலையை வாயில் திணித்தபடி.

"நிஜமாவா ராஜாமணி" என்ருள் ஊர்மிளா பற்கள் தெரிய.

"ஆமா ஹீரோயின். கல்யாண ரேகை இருதய ரேகைக்கு பக்கத்தில் இல்லாமல் ரொம்பவும் உயரத்தில் இருக்கிறதினுலே லேட்டாதான் நடக்கும் புகையை வெளியே விடாமல் மறுபடியும் ஒரு இழு இழுத்தான் அம்மா உங்க புள்ளே... யாரையோ சதா காதலித்துக் கொண்டிருக்காங்க. அது ஒண்ணும் பலிக்காது ஏமாற்றமாகத் தான் முடியும். கல்யாணத்துக்கு பிறகு நடிகைக்கு குழந்தையே பிறக்காதம்மா" என்ருன்.

"அது எப்படி சொல்றே ராஜாமணி" தாயும் மகளும் கேட்டார்கள்

"நடு விரலின் கீழே உள்ள சனி மேட்டில் கிராஸ் குறி இருப்பதால் குழந்தையே பிறக்காதம்மா." என்ருன் லூஸ் நடிகையின் கையில் உள்ள ஆப்பிளைப் பறித்தபடி.

பாமா! ஆண்களிலும் இரக்க சிந்தையுள்ளவர்கள் இருக்கிஞர்கள் என்பதை ஒப்புக் கொள்கிருயா?

"நாசமாப்போன குழந்தையே வேண்டாம்பா. நமக்கு எதுக்கு குழந்தையும் குட்டியும்" என்றாள் நடிகையின் தாயார் ராஜாமணிக்கு பத்து ரூபாயைக் கொடுத்தபடி.

"ஏம்மா செக்ரட்டரி, உங்க சுண்டு விரலுக்கு கீழே உள்ள புதன் மேட்டில் கருப்புப்புள்ளி இருக்கே. பலபேர்களை மோசம் செய்திருப்பீர்கள் போல் இருக்கே" என்றான் லூஸ் பணத்தை வாங்கிக் கொண்டே.

"அட நாசமாப் போனவனே! ஏங்கிட்ட பணத்தை வாங்கிக்கிட்டு என்னையே குறைவாப் பேசுறியா" விளையாட்டுக் கோபமா செக்ரட்டரி ஆப்பிளை விட்டெறிந்தாள்.

ராஜாமணி நெளிந்து கொடுத்து சாமர்த்தியமாக வெளியே வந்தான்.

"ராஜாமணி... என்னப்பா... எவ்வளவு நேரமா உனக்காக காத்துக்கிட்டு இருக்கிறது. தபால்களையெல்லாம் வாங்கிக் கோப்பா" என்றார் நீண்ட நாட்களுக்குப் பின் வந்த போஸ்ட்மேன்.

"வாய்யா வா! என்னய்யா போஸ்ட்மேன் மற்றவர்களுடைய கடிதங்களை உடைத்துப் பார்த்துவிட்டு அதில் தவறான கடிதமா இருந்தா அந்தந்தப் பார்ட்டியிடம் கொடுத்து பணம் சம்பாதிச்சியாமே. ஒம் மேலே போட்ட டிஸ்மிஸ் கேஸ் என்ன ஆச்சி? அவரை ஒரு போடு போட்டான்.

"பென்ஷன் வாங்குகிற டயம் பாத்து பிடியாதவங்க செய்த சதி ராஜாமணி" என்று தப்பித்தார் போஸ்ட்மேன்.

"புருடா விடாதே மேன். நீ எம்டி ஆள்தானே. உனக்கு கிடைக்கிற சம்பளத்துல எப்படிய்யா ரெண்டு பேபி டாக்ஸி உம்பேர்ல ஓடும்" போஸ்ட்மேனை மடக்கினான்.

"ஏய் ராஜாமணி, தபால்களை எடுத்துக்கிட்டு ஆளை விடப்பா. கும்பிடுறேன்." என்று மடங்கினார் போஸ்ட்மேன்.

வெளவாலின் இறக்கையைப் போன்ற புதிய செவர்லட் ஸ்டுடியோவுக்குள் நுழைந்து செட்டுக்குப் பக்கத்தில் நின்றது. கலெக்டரைப்போல் ஹீரோ இறங்கி பலபேர் வணங்க உள்ளே சென்றார்.

"என்ன மிஸ்டர் ராஜாமணி கவனித்தாயா, லட்சக்கணக்கா ஒரு படத்துக்கு வாங்கும் நடிகர் கால்ஷீட்டுக்கு எவ்வளவு லேட்டா வர்றதைப் பாத்தியா" என்றார் மேக்கப்மேன்.

"இழவு விசாரிக்க வர்றவர் போல லேட்டா வர்றாங்களே மேக்கப்மேன்" ராஜாமணி ஆச்சர்ய பாவனையில் சொன்னான்.

"இப்ப காதல் கட்டம் எடுக்கப் போறாங்க ராஜாமணி. லவ் சீன் பார்க்க ஆசையாய் இருக்குன்னு சொன்னியே. வா போகலாம்" என்றார் மேக்கப்மேன்.

இருவரும் ஷூட்டிங் செட்டுக்குள் நுழைந்தார்கள். நீண்ட நேரம் அமைதிக்குப் பின் காதல் சீன் படமாக்கப்பட்டது. ஹீரோவும், ஹீரோயினும் கட்டி அணைத்தபடி போகும் காட்சியை சிரமப்பட்டு எடுத்துக்கொண்டிருந்தார்கள்.

"இந்தாய்யா ஹீரோ! ஹீரோயினைக் கூட்டிக்கிட்டு எங்கே போறே. வெளிச்சம் டிம்மா இருக்கிற பக்கமாகபோறீங்களே அது உங்களுக்கே நல்லா இருக்கா. என்னய்யா அக்ரமம்.

நடிக்கும் போது கூடவாமோசமா நடந்துகொள்வது'' ராஜாமணி அவ்வளவு பேருக்கு முன்னால் தன்னை மீறியவனாக சத்தம் போட்டான்.

''கட்! கட்!'' என்றார் டைரக்டர்.

சுற்றிலும் இருந்தவர்களுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. கதாநாயகன் கோபத்தோடு ராஜாமணியைப் பார்த்து திருதிருவென்று விழித்தார். அவ்வளவுதான். நாலைந்து பேர் ராஜாமணியின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டுப் போனார்கள். அடுத்த கணம் படத்தயாரிப்பாளர் கையில் தடியுடன் வந்தார். ''தீபாவளிக்கு ரிலீசாகும் படம் போச்சேடா! நாப்பயலே! நான் ஒரு மாசமா நடிகர் காலில் விழுந்து கும்பிட்டு கால்ஷீட்டுக்கு கொண்டுவந்து சேர்த்தா...நீ பாட்டுக்கு எதை எதையோ பேசி காரியத்தை கெடுத்துட்டயடா. இப்ப எடுத்த ஷூட்டிங்கை அடுத்தமாதம் வச்சிக்கிடலாம்னு நடிகர் அவர் பாட்டுக்கு சொல்லிவிட்டுப்

போயிட்டாருடா" என்ற கூச்சலுடன் கட்டையால் அவன் முதுகில் ஓங்கி அடிக்கப் போனார். ஸ்டுடியோ முதலாளி வந்து தடுத்து ராஜாமணியை ஆபீசுக்கு அழைத்துச் சென்றார்.

"செட்ல நடிகர்கள் கேவலமா நடந்துக்கிட்டா பார்த்தும் பார்க்காம இருக்கணும் ராஜாமணி கதாநாயகன் உன்னை இப்பவே வேலையை விட்டு நீக்கும்படி சொல்லிட்டாரு. சம்பளத்தை வாங்கிக்கொண்டு போய் விடு ராஜாமணி" என்றார் கம்மிய குரலில் ஸ்டுடியோ உரிமையாளர்.

"இங்க பாருங்க உரிமையாளர் லாக்கப்ல தள்ளவேண்டிய மேட்டர்லாம் இங்கே சர்வ சாதாரணமாக நடக்குது சார். நமக்கு இந்த 'பிலேஸ்' ஒத்துவராது" என்றபடி சம்பளத்தை சிரித்த முகததோடு வாங்கிக்கொண்டே ராஜாமணி உரிமையாளரிடம்," உரிமையாளர் உங்க கையில் கல்யாண ரேகைக்குப் பக்கத்தில் இன்னொரு அழுத்தமான கல்யாண ரேகை இருக்கே! உங்களுக்கு ஒரு மனைவியும் ஒரு ஆசை நாயகியும் உண்டுதானே" என்றான் கண்ணை சிமிட்டியபடி.

"அதை எப்படிப் பார்த்தே ராஜாமணி பொல்லாத ஆளப்பா. நம்ப வீட்டில விஷயத்தைப் போட்டு விடாதே" என்றார் சிரித்த முகத்துடன்.

ஆபீஸ் அறையிலிருந்து மேக்கப் அறைக்குள் நுழைந்தான் லூஸ். "அட என்னய்யா மேக்கப்மேன். எக்ஸ்ட்ரா நடிகையின் முகம் என்ன அம்மியின்னு நினைச்சிட்டீங்களே! கையை வைத்து தேயி தேயின்னு தேக்கிறீங்களே! நான் வேலையை விட்டுப் போறேன் மேக்கப்மேன்" என்றான் அனுதாபத்தோடு.

"சரி ராஜாமணி" என்றார் மேக்கப் நிபுணர் ஒரு சிகரட் பாக்கெட்டை கொடுத்தபடி.

"இந்தாடா அரைக்கட்டை மணி, போனவாரம் நடிகையின் கால் நகத்துக்கு பாலிஷ் பண்ணும் போது முத்தம் கொடுத்து உதை வாங்கின மாதிரி இனிமே நடந்துக்கிடாதே. ஒழுங்கா இருடா பாலிஸ்பாய்! வர்றேண்டாப்பா" என்றபடி லூஸ் மூன்லைட் ஸ்டுடியோவிலிருந்து பஸ் ஏறினான்.

மைலாப்பூர் பிளாட்பாரத்தில் ராஜாமணி நின்றுகொண்டு இரண்டு ரிக்ஷாக்காரப் பசங்க சண்டை போட்டுக்கொள்வதை பைனுக்குலரில் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான். திடீரென்று அவனையுமறியாமல் அவனுடைய கைகள் பைனுக்குலரை ஒரு ஷாப் கடையின் பக்கம் திருப்பி விட்டது. கடையின் படிகளில் ஏறிக் கொண்டிருந்த ஒரு தனவானின் பையில் இருந்த பர்சை ஒரு வாலிபன் ஒரு விநாடியில் எடுத்துக் கொண்டு சைக்கிளில் போவதைக் கண்டான்.

உடனே ராஜாமணி எதிரே இருந்த ஒரு சைக்கிளை எடுத்துக்கொண்டு அந்த வாலிபனைத் தொடர்ந்தான்.

தன்னை ஒருவன் விரட்டி வருவதை அறிந்த வாலிபனும் தன்னால் முடிந்த மட்டும் சந்து பொந்தெல்லாம் வளைந்து வளைந்து ஓட்டிச் சென்றான்.

நீண்டநேரத்திற்குப் பின் மறுபடியும் வாலிபன் மைலாப்பூர் ரோட்டில் நுழைந்தான். வாலிபன் பக்கமாக ராஜாமணி நெருங்கியதும் "ஐய்யயோ திருடன்" என்ற குரலுடன் வாலிபன் சைக்கிளைப் போட்டு விட்டு பழைய ஷாப் கடைக்குள் அலறியபடி நுழைந்தான்.

திருடிய இடத்துக்குள்ளாக நுழைந்து கொண்டது தன்னுடைய அதிர்ஷ்டம் என்று எண்ணிய ராஜாமணி சைக்கிளில் இருந்து தாவியபடி கடைக்குள் நுழைந்தான். நுழைந்ததும் தன் எதிரில் தென்பட்ட பர்சைப் பறிகொடுத்த தனவானிடம், "சார் உள்ளே ஓடும் போக்கிரி தான் சார் உங்க பர்சை எடுத்தது. பையன் வசமா மாட்டிக்கிட்டான்" என்றான் ஆங்காரமாக. திடுதிப்பென்று உள்ளே செல்ல முயன்ற ராஜாமணியை மேலும் பேசவிடாமல் சிலர் கையையும் காலையும் பிடித்துக் கொண்டார்கள். ராஜாமணிக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"திருட்டுப் பயலே! அந்தப் பையனுடைய பணத்தை அடிச்சிட்டுப் போகத்தானே வந்தே. அயோக்கியப் பயலே! அவன் என்னுடைய மகன் தாண்டா. இது என்னுடைய ஷாப் தாண்டா அடமட்டிப்பயலே, என்னுடைய மகன் செல்லமா பர்சை எடுத்துப் போவது சர்வசாதாரணமடா! இப்படி எத்தனை பேர்கள் சென்னையில் இருக்கிறீர்கள்!" என்றார் பெரியவர் மீசையை முறுக்கி விட்டபடி.

"நம்ப சைக்கிளவே அடிச்சிட்டு வந்துட்டியே நயினு!" என்ற கனத்தகுரல் கேட்டு எல்லோரும் கடை முன்னால் பார்த்தார்கள். "சண்டியர் சவுடையப் பன்னு மதருசே நடுங்குமே நயினு! வா நயினு வா. கழுத்தை திருப்பி வச்சிப்பிர்றேன்" என்று சொல்லிக்கொண்டே மைலாப்பூர் சைக்கிள் கடை சண்டியர் சவுடையப்பன் முண்டா பாடியோடு மேலே ஏறி வந்து ராஜாமணியை தூக்கிக் கொண்டு போவதை எல்லோரும் பார்த்தார்களே தவிர யாருமே அந்த லூசைக் காப்பாற்றவில்லை!

நாட்டியக்காரி

காசிநாதன்

அல்லி நகரத்துக் கொலு மண்டப ஆடலரங்கிலே நளினியின் நாட்டியம் மட்டும் அரங்கேற்றமடையாதிருந்தால் நாட்டியக் கலைக்கே சமாதி கட்டியிருப்பான் மன்னன் மஹேந்திர பூபதி. ஆம்! தன் ஒரே மகள் அல்லி அரசோச்சவிருக்கும் அந்த அரண்மனையிலே பணிப் பெண்ணாக அடியெடுத்து வைத்தவள் தான் நளினி! இன்று மன்னனே எனக்கு இரண்டு மகள் உண்டு. மூத்தவள் அல்லி-இளையவள் நளினி என்று உரிமையோடு கூறுமளவு கலையின் மூலம் மன்னரின் மனதிலேயும் மன்னன் மகள் அல்லியின் இதயத்திலேயும் இடம் பெற்று விட்டாள்.

அரண்மனைக்குச் சொந்தமான தன் மாளிகையில் இளவரசிக்குத் தேவையான பணிப் பெண்களுடன் குறைவின்றி தான் வாழ்ந்து வந்தாள்! அல்லியை அக்காளாகவும் மன்னரைத் தந்தையாகவும் அடைந்த அவளுக்கு அவையிலே செல்வாக்கும் அதிகரித்தது. அவளது நாட்டியத்தைக் கண்ணுற்ற அண்டை நாட்டு மன்னர்கள் அவளை ராணியாக்க விரும்பி முயற்சிகள் பல செய்தும் தோல்வியைத்தான் துணைக்கழைத்துக் கொண்டார்கள்.

அரங்கத்திலே நாட்டியமாடும் நளினியின் உருவம் காண்போர் உள்ளங்களிலெல்லாம் ஆடத் தொடங்கியது. வருங்காலம் உரைக்கும் மந்திரியைக் கூட அவளது ஆட்டம் ஆட்டிவைக்காமலில்லை! மன்னாதி மன்னர்களைக்கூடமணம் செய்துகொள்ள மறுக்கும் நளினி தனக்கு எப்படிக் கிடைக்கப் போகிறாளென்ற ஏக்கத்தினூடே மன்னன் மஹேந்திரனின் நீதிக்கும் நேர்மைக்கும் முன்னால் தன் முயற்சிகள் வியர்வையாக மாறுமேயன்றி உரமாக மாறி விடாதென்பதையும் அறிந்திருந்தான். மதியூகி.

அவைக்கு வரும் வழக்குகளில் இதுவரை அநீதியான தீர்ப்பே வழங்காதவன் மஹேந்திரன். குற்றம்புரியாதவன் தண்டிக்கப்பட்டு விட்டால் தன்னை யாரோ தண்டித்து விட்டது போல் பயந்து நீதியை நிலைநாட்டி அரசோச்சி வந்தான். நீதி பரிபாலனத்தில் மந்திரியைக் காட்டிலும் மன்னனின் மதிக்கு ஈடு கொடுப்பவன் அவைப் புலவர்களில் ஒருவனான பாவலன் பண்டரிதான். பண்டரியின் அறிவுக் கூர்மையும் ஆழ்ந்த

அனுபவமும் மன்னருடைய நீதிக்கு வெகுவாகத் துணை புரிந்தன.

மன்னன் கூறும் நீதியிலே பண்டரிக்குத்தான் முக்கால்பங்கு உரிமையிருக்கும். இருபத்தைந்து வயது இளம் பாவலன். இவனுக்கெப்படி இவ்வளவு திறமை வந்தது என்று வியப்படையாதார் இலர். வழக்குகளை விசாரித்து முடித்தபின் மந்திரி, மற்றுமுள்ள பெரியோர்களிடமெல்லாம் அவரவர்களது நீதியினை அறிந்து கொண்ட மன்னன் கடைசியாக பண்டரி உனது நீதி என்னவென்று கேட்காமல் தீர்ப்புக் கூறவேமாட்டான் மந்திரியைக் காட்டிலும் மன்னனைக் காட்டிலும் பண்டரியின் புகழ் பரவலாயிற்று.

மந்திரியின்மனத்திலும் பொறுமைக் காற்று புயலாக உருவெடுக்க ஆரம்பித்தது. பண்டரியின் பின்னால் ஒற்றனாக மாறி நீதியை அவன் எவ்வாறு அறிகிறான் என்பதில் முனைந்தான் மந்திரி!

நளினியை இதயத்திலிருந்து எடுத்தெறிய முடியாமல் தவிக்கும் மந்திரி ஏற்கனவே சஞ்சலத்தில் மூழ்கியிருந்தான். இடையே பண்டரியின் பிரவேசத்தால் அவன் உள்ளம் ஆழ்கடலில் அகப்பட்ட துரும்பாய் அலைய ஆரம்பித்தது.

பாடித்திரியும் பாவலன்! அவனுக்கு பரிபாலன திறமை! தன் பதவியையே பறித்துவிடுவான் பாவி! அவனை ஒழித்தால் தான் பதவி பறிபோகாமல் இருக்கும் என்ற எண்ணம் பாய்விரித்து விட்டது மந்திரியின் மனதிலே! அதில் படுத்துக்கொண்டே சிந்தித்தான். தன் மெய்க்காப்பாளர் சிலரையும் ஒற்றனாக மாற்றினான். மாதங்கள் பல மறைந்தன.

ஒரு நாள்! காலைக் கதிரவன் பொன்னொளி பரப்பிடும் வேளையிலே அல்லி நகரமே அழுது வழிந்து கொண்டிருந்தது. மன்னன் மஹேந்திரன் மரக்கட்டையாக வீற்றிருந்தான் மணிமுடியைப்பார்த்தபடி. அல்லிஅலறித் துடித்துக் கொண்டிருந்தாள். மக்கள் அகங்களிலே இருள் கப்பியிருந்தன. நளினி பஞ்சணையிலே படுத்து மீளா நித்திரையிலிருந்தாள். அவளை எத்தனையோ வைத்திய சிரோன்மணிகள் வந்து சூழ்ந்து நின்றும் அவளது மூடிய இமைகளைத் திறக்கச் செய்ய இயலாமல் உதட்டைப் பிதுக்கிவிட்டுத் தலைகுனிந்து நின்றனர். நேற்று அவள் ஆடிய அரங்கத்திலே இனி என்றும் அவள் ஆட்டத்தை யாரும் காண முடியாது. தற்கொலையா? அல்லது யாரும் செய்த சதியா? அரண்மனைத் தோட்டத்திலே சமாதி எழும்பி நின்றது. பணிப்பெண்கள் அனைவரும் அவையின் குற்றக் கூண்டிலே நின்றனர். விசாரணைமுடிந்தது பத்து தினங்களில்.

நீதி வழங்கும் தினத்தன்று மன்னன் வழக்கம்போல் பண்டரியை நோக்கினான். பண்டரி நாளை என்று நழுவினான். அவை கலைந்தது. மறுநாள் காலை மன்றம் கூடவில்லை. நளினியின் சமாதி அருகிலே பிணமாகக் கிடந்த பாவலன் பண்டரியைச் சுற்றி நாடே திரண்டிருந்தது.

பாவலன் பண்டரிக்கு காதலோடு நாட்டின் பரிபாலனத்தையும் அளித்துக்கொண்டிருந்தவள் நாட்டியக்காரி நளினி தானென்பது பிறகுதான் உலகுக்குத் தெரிந்தது. மந்திரி மார்த்தாண்டன்தான் நளினிக்கு விடுதலை கொடுத்தவன் என்பது யாருக்குமே தெரியாது.

புதிய வெளியீடு

★ பகலிலே உல்லாசம்!

★ இருட்டிலே போராட்டம்!

★ சொக்குப் பொடியா?

★ சுக்குப்பொடியா?

சொக்குப்பொடி ரங்கம்மா

மலிவுப்பதிப்பு

120 பக்கம் :: விலை 50 காசு

கலைப்பொன்னி

(போன் நிர். 4001)

வெண்கலக்கடைத் தெரு :: மதுரை-1.

ஊரின் எல்லையிலே புலவரின் வீடு! புலவரின் வீட்டு மாடியிலே கவிஞன் குடியிருந்தான்!

புலவருக்கும் கவிஞனுக்கும் எப்பொழுதுமே ஒத்துப்போக முடியவில்லை. இலக்கணமில்லாமல் பாட்டெழுதுகிறான் என்று புலவர் ஓயாமல் குறை சொல்லிக்கொண்டிருப்பார். இப்படியும் ஒரு உணர்ச்சியில்லாத மனிதனா...? என்று கவிஞன் குறைப்பட்டுக் கொண்டே இருப்பான்.

ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்த புலவர் தன் மூத்த பெண் பத்திரிகை ஒன்றைப் புரட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்து வாங்கிப் பார்த்தார்.

“அப்பா நம்ம மாடியிலே இருக்கும் கவிஞருடைய கவிதை கூட வந்திருக்கிறதே...” என்று உற்சாகத்துடன் கூறினாள் மகள்.

“பத்திரிகையை மாடியிலிருந்து வாங்கிக் கொண்டு வந்தாயா...?” என்று கடுமையான குரலில் கேட்டார் புலவர்.

“இல்லை அப்பா... தபால்காரன் இங்கேதான் கொடுத்துவிட்டுப் போனான்...” என்றாள் மகள்.

புலவரின் கண்களில் ரௌத்ராகாரமான கோபம் தாண்டவமாடியது. அவர் உடலே வெட வெடவென்று நடுங்கி விட்டது.

“ஐயகோ கூத்தனும் சாத்தனும் வில்லிப்புத்தூரானும் இல்லாத காரணத்தால் அல்லவா தமிழ் இவ்வளவு கெட்டுப்போய் விட்டது?” என்று ஆவேசத்துடன் தலை தலையாய்ப்போட்டுக் கொண்டவராகத் தட தடவென்று மாடிப்படியில் ஏறினார்.

கவிஞன் அறைக் கதவு எப்பொழுதும் போல் திறந்துதான் கிடந்தது. கவிஞன் ஜன்னல் அருகே நின்றபடி தூரத்தில் தெரிந்த மாந்தோப்பையே பார்த்துக்கொண்டு நின்றான். அவனுடைய சர்வாங்கமும் ஏதோ ஒரு லயத்தில் கட்டுப்பட்டு நிற்பது போல் இருந்தது. தன்னை மறந்த உணர்ச்சி வெள்ளத்திலே அவன் பூரித்துப்போய் நின்றான். புலவர் வந்ததையோ நின்றதையோ அவன் கவனிக்கவே இல்லை.

எதைக்கண்டு அப்படிச் சொக்கிப்போய் நிற்கிறான் என்று ஆராயும் நோக்கத்துடன் புலவரும் கவிஞன் பார்த்த திசை வழியே கண் நோக்கத்தைச் செலுத்தினார்.

தூரத்திலே தெரிந்த மலைகள்! சவுக்குக்காடு சவுக்குக்காட்டிற்கு இப்பால். மாந்தோப்பு... வயல்கள் குடிசைகள்!

இதைப் பார்த்துத்தானா இப்படி நிற்கிறான்...?

"ஏய்யா... கவிஞரே...?" ஏளனம் கலந்த அலட்சியக் குரலிலே புலவர் விளித்தார்.

"உஸ்ஸ்...கொஞ்சம் இருங்கள்!..."

"என்னய்யா அது...?"

"உங்களுக்குக் கேட்கவில்லையா...?"

"என்ன...?"

"அதோ கேளுங்கள்...! நன்றாகக்கவனித்துக் கேளுங்கள்..."

புலவருக்கு ஒன்றும் கேட்கவில்லை. என்னத்தை ஐயா கேட்கச் சொல்றே...?" என்று எரிந்து விழுந்தார்.

"குயில் கூவுகிறதே... உங்களுக்குக் கேட்கவில்லையா...? இந்த ஏரியிலே தேங்கிக் கிடக்கும் எழிலின் நாதம்போல் அது 'கூ' என்று கூவுகிறது உங்கள் இதயத்திலே எழுந்து சுழல வில்லையா...? அந்தக் கானகத்திலே இருந்து ஒரு தேவ மங்கை யாழினும் குழலினும் இனிமையான தன் குரலால் தன் நாயகனைக் கூவியழைப்பது போல் அது உங்களுக்குத் தோன்றவில்லையா...? அதோ கேளுங்கள்! நன்றாகக் கூர்ந்து கவனியுங்கள்...!"

"கூ...! கூ...! கூ...!

"என்ன இனிமை...! என்ன இன்பம்......எத்தகைய பேரானந்த வெள்ளம் பொங்கிப் பாய்கிறது? அடடா... அடடா... கேளுங்கள்... நீங்களும் கேளுங்கள்......"

கவிஞன் பேசிக்கொண்டேயிருந்தான்.

புலவர் கடகடவென்று சிரித்து விட்டார். இப்படிப்பட்ட பைத்தியக்காரனுக்கு இலக்கண சுத்தமான கவிதை எழுதவருமா?

இவனுடன் விவாதித்தால் நமக்கும், இவன் பைத்தியம் பிடித்துவிடும் என்று நினைத்தவராக பேசாமல் திரும்பி விட்டார்.

கவிஞனுடைய புகழ் வளரத் தொடங்கியது! அவனுடைய புத்தகங்கள் ஆயிரக்கணக்கில் விற்றன. அவனுடைய கவிதைகள் எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசுரமாயின.

நாளுக்கு நாள் கவிஞனைத் தேடி வருபவர்கள் தொகையும் அதிகமாயிற்று. காலையில் எழுந்தால் ஒரு இருபது கார்களாவது வந்து போகும். அவனுடைய பொருள் பொதிந்த பாடல்களுக்குச் சினிமாவில் ஏகப்பட்ட கிராக்கி ஏற்பட்டு விட்டது.

அத்தோடு தர்மம் கேட்பவர்கள், சினிமாவில் நடிக்க சிபார்சு செய்யும்படி கேட்பவர்கள், கவிஞரின் அபிமானத்தை இழந்து விடாமல் இருக்கும் பொருட்டு காக்காய்பிடிக்க வருபவர்கள் இப்படியாக நாள் தோறும் அநேகர் வந்து போயினர்.

புலவர் இதைப் பார்த்துப் பொருமினார். "என்னய்யா இவன் கவிதை எழுதுறான்? விருத்தமா, வண்ணமா, தாழிசையா? என்ன பாடல் இவன்பாடல்......? இலக்கண சுத்தமா ஒரு பாடல் புனையத் தெரியுமாய்யா இவனுக்கு? கம்பனைப் போல் ஒரு விருத்தமாவது, புகழேந்தியைப் போல் ஒரே ஒரு வெண்

பாவாவது, சயங்கொண்டானைப் போல் ஒரு வண்ணமாவது இவனால் பாட முடியுமா என்று கேட்கிறேன்? சீச்சீ. இவனையெல்லாம் கவிஞன் என்று கொண்டாடவாவது? காலம் மாறியதோடு மக்களுக்குப் புத்தியும் கெட்டுப் போச்சு. புலமையை உணரும் அறிவும் அழிந்து விட்டது. இது தமிழுக்கு மகா கெட்ட காலம் ஐயா கெட்டகாலம்...!'' என்று தலையில் அடித்துக் கொள்வார்.

புலவரின் பொருமைக்குக் காரணமும் இருந்தது. அழுக்குப் பிடித்த துணியும் சிக்குப் பிடித்த தலையுமாக அலைந்த கவிஞனின் பொருளாதார நிலை இப்பொழுது ஆகாயத்தைவிட உயர்ந்து விட்டது. புலவரோ அன்று வாங்கிய சம்பளம் அறுபது ரூபாய், வருடாந்திர இங்க்ரிமெண்டுகளுடன் சேர்ந்து தொண்ணூறு ரூபாயாக வளர்ந்து 'அலவன்ஸுகளின்' பெயரால் நூற்றுப்பனிரெண்டு ரூபாயாக உயர்ந்திருந்தது அவருக்கு எல். டி. கிரேடும் கிடைக்கவில்லை.

அத்துடன் புலவரின் குடும்ப நிலையிலும் பல மாறுதல்கள்.

புலவர் பொறுமினார்! பொறுமினார்! அப்படிப் பொறுமினார்! ஆனால் பலன் பூஜ்யமாகத்தான் இருந்தது.

முதல் பெண்ணின் திருமணத்திற்காகத் தமக்கு இருந்த ஒரே துண்டு நிலத்தை அடகு வைத்துக் கடன் வாங்கிய புலவர் இரண்டாவது பெண்ணின் திருமணத்திற்காக தம் வீட்டையும் அடகு வைத்துக் கடனாக இரண்டாயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு அளவுகடந்த விரக்தியோடு, வெறுப்போடு, வேதனையோடு வீடு வந்து சேர்ந்தார்.

இரவு மணி பத்தாயிற்று! பதினொன்றாயிற்று! பனிரெண்டாயிற்று! புலவர் தூக்கம் வராமல் மனவேதனையோடு புரண்டு கொண்டிருந்தார். மனிதன் வாழ்க்கை நடத்துவதற்கே போதுமான சம்பாத்தியம் கிடைக்காத உலகத்தில் எப்படித்தான் வாழ்வது...? சொந்த வீடிருந்தும், நிலத்திலிருந்து வருஷா வருஷம் நெல் வந்து கொண்டிருந்தும் குழந்தைகளுக்குத் திருமணம் செய்வதற்காகச் சொத்துக்களை அடகு வைத்துக் கடன் வாங்கும் நிலை

என்றால் சொத்தில்லாதவர்கள் என்ன செய்து பிழைப்பார்கள்? சேச்சே—... இந்தத் தமிழைக் கட்டிக்கொண்டு மாரடித்தநேரம் பருத்திக்கொட்டையும் பிண்ணாக்கும் போட்டு வியாபாரம் செய்திருந்தால்கூட லட்சாதிபதியாகியிருக்கலாம்...

இப்படி எண்ணி எண்ணி மனம் குமைந்து கொண்டிருந்தார் புலவர்.

இரவு மணி ஒன்றடித்து விட்டது ஒருநாளும் இல்லாதபடி இன்னும் தனக்குத் தூக்கம் வராதது புலவருக்கே ஆச்சர்யமாக இருந்தது! காரணம் அவருடைய மனப் புழுக்கமாக இருக்கலாம் என்றாலும், மேலே மாடியில் கிராமபோன் ரிகார்டு ஒன்று ஓயாமல் பாடிக்கொண்டிருந்தது தான் காரணம் என்று புலவர் நினைத்தார்.

புலவரின் ஆத்திரம் அளவு கடந்து போய்விட்டது...தட தட வென்று மாடிக்கு ஏறிப் போனார். அங்கே அவர் கண்ட காட்சி...!

கிராமபோன் திரும்பவும் அந்தப் பாட்டை அழுது கொண்டிருந்தது. கவிஞன் தலைவிரிகோலமாக கண்ணீரை மாலை மாலையாக வடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனுடைய விழிகள் சிவந்து போயிருந்தன. கையில் இருந்த சிகரெட் நடுங்கிக் கொண்டிருந்தது. கீழே தரைபூராவும் ஒரே சிகரட் துண்டுகளும் சாம்பலுமாக இருந்தன!

புலவர் ஆவேசத்தோடு கூவினார். "ஏய்யா? உனக்குப் புத்தி இல்லை...? மணி என்ன ஆச்சு தெரியுமா... கீழே குடியிருக்காளேங்கற நினைவு இல்லையா.?" மனுஷர் படபடவென வார்த்தைகளைப் பொரிந்து தள்ளினார்.

கவிஞன் கண்ணீர் வடித்தபடி எழுந்து வந்து புலவரைக்கட்டிக் கொண்டவனாக, "மன்னியுங்கள் ஸார்...என்னால் இந்தப் பாட்டில் அடங்கியிருக்கும் சோகத்தைத் தாங்கமுடியவில்லை... காதலை இழந்த இதயத்தின் இறுதிப் பாடல் இது...! முடிவிலாத துன்பம்...!முடிவிலாதவேதனை... அந்த இதயத்தின் துடிப்பு அடங்கினாலொழிய அதன் வேதனையும் தீராது! ஐயய்யோ... நானும் காதலை இழந்து வாழ்கிறேன்...! என் உள்ளத்தை கவர்ந்த கற்பனைப்பெண் ஒருபலசரக்குக் கடைக்காரனை மணந்து கொண்டு வாழ்கிறாள் ஐயா...! இன்று எனக்குக் கிடைத்திருக்கும் பணமும் புகழும் எதற்கு உதவும்...? இவற்றில் பத்தில் ஒரு பங்கு அன்று கிடைத்திருந்தால் கூட நான் என் காதலியை மணந்து கொண்டு இன்பமாக வாழ்ந்திருப்பேன்! ஆனால் என்ன பயன்? எல்லாம் போயிற்று... எல்லாம் போயிற்று...! என் வாழ்க்கையே அஸ்தமித்துப் போய் விட்டதையா அஸ்தமித்துப் போய்விட்டது..." கவிஞன் அலறினான். புலவரைக் கட்டிக் கொண்டு விம்மி விம்மியழுதான்.

கவிஞனுடைய உணர்ச்சியை சிறிதுகூட புரிந்து கொள்ளாத புலவர், "யோவ்... அதெல்லாம் எனக்குத் தெரியாது. மரியாதையா... நாளைக்குக் காலையிலே எழுந்ததும் முதல் வேலையா வீட்டைக் காலி பண்ணிவிட்டு மறுவேலைபார்..." என்று கர்ஜித்துவிட்டு நடந்தார்.

பாட்டு நின்று விட்டது!

மேல் மாடியில் சந்தடியே நின்று விட்டது!

புலவர் நிம்மதியாகக் குறட்டைவிட்டுத் தூங்கினார். மறுநாள் காலை முதல் கவிஞனை காணவே காணோம். அவன்போன இடம் யாருக்குமே தெரியவில்லை!

புதிய வெளியீடு

வனிதையின் வரவேற்பு!

வாலிபனின் ஓட்டம்!

வனரோஜா மலர்ந்தது!

வண்ணக்கிளி பறந்தது!

வா ராஜா வா

மலிவுப்பதிப்பு

120 பக்கம் :: விலை 50 காசு

கலைப்பொன்னி

(போன் நிர். 4001)

வெண்கலக்கடைத் தெரு :: மதுரை-1.



அருமைக் காதலி நடிகை சந்திரமதிக்கு!

ஸ்டுடியோவில் ஷூட்டிங் பார்க்க வந்தபோது உன் அழகில் நான் மயங்கினேன். உன்னைப் போன்ற நடிகையை மணக்கவும் முடிவு செய்தேன். மறுநாள் உன் பங்களா கேட்டின் முன்னால் விடிவதற்குள்ளாகவே பட்டினியோடு வந்து கிடந்தேன். உன்னுடைய கூர்க்கா என்னைத் தவறாக எண்ணி பூட்சுக்காலால் முகத்தில் உதைத்து விட்டான். நல்லவேளை விடிவதற்கு முன் நடந்து விட்டது. இரண்டு பல் மட்டும்தான் போயிற்று. இன்று அதை தங்கப்பல்லாகக் கட்டிவிட்டேன்.

அன்று பங்களா முன் நின்ற என் மீது எச்சைக் காரித்துப்பினாயே அது எனக்கு எவ்வளவோ பெருமையாக இருந்தது. பஞ்சாமிர்தத்தைவிட அது......!

மூன்று வருடமாக 1001- கடிதங்கள் எழுதியும் பதிலே போடவில்லையே கண்ணே! உன் நினைவாகவே இருந்து மூன்று வருடமாக பி. யு. சியிலேயே இருந்து வருகிறேன். மக்கு என்று நினைத்து விடாதே காதலி. பரீட்சைக்குப் பணம் கட்டாமல் அந்தப் பணத்தைக் கொண்டுதான் உன் பிறந்தநாளுக்கு பரிசுகளை அனுப்பி வருகிறேன். நீ என்னடான்னா என்னையே மறந்துவிட்டாயே!

"படுகுப்பை" என்ற படத்தின் 100-வது நாள் விழாவுக்கு நீ திருச்சி வந்தபோது, ரயில்வே ஸ்டேஷனில் இருந்த நான் உன் முதுகைத் தொட்டபோது, திடீரென்று சிரித்த முகத்தோடு உன் செருப்பால் என்னை ஒரு அடி அடித்தாயே... அந்தத் தழும்பு இன்னும் இருக்கிறதே காதலி. அது நான் செய்த பாக்கியம் தானே.

உன்னை மணந்தால் கூஜாவைமட்டும் என்ன...... அண்டாவைக்கூட போகுமிடமெல்லாம் தூக்கி வருகிறேன். உன் தாயாரையும் வேண்டுமானால் என் தலையில் தூக்கி வைத்து ஆடுகிறேன் கதாநாயகி.

இப்படிக்கு,
ஒன்சைடு காதலன்
கலைநேசன்

மதுரை 75, தெற்கு வெளிவீதியிலுள்ள கலைப்பொன்னி அச்சகத்தில் அச்சிட்டவரும் வெளியிடுபவரும் ஆசிரியரும் எஸ். கிருஷ்ணசாமி
11, வெண்கலக்கடைத்தெரு, மதுரை-1. போன் No. 4001. 1-11-62

Registered No. M. 7581.

"REGISTERED AS A NEWSPAPER IN CEYLO